பக்கங்கள்: 12

Registered as a Newspaper

New Master Institute
B. M. C. Lane, JAFFNA
A/L 89
Saturday & Sunday
✶ PHYSICS ✶
திரு. வர்ணம்
அனுமதிகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன
புதிய பிரிவு ஆரம்பம்
JULY 2nd

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 3-50

New Master Institute
B. M. C. Lane, JAFFNA.
A/L 89
Saturday & Sunday
✶ ZOOLOGY ✶
திரு. நாகநாதன்
8.30 சுவாசத் தொகுதி நடைபெறுகிறது.
11.30 நரம்புத் தொகுதி விரைவில் ஆரம்பம்

மலே: 3 யாழ்ப்பாணம் விபவ ஆனி 11 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்தா பிறை 10 (25-06-1988) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 17

✶ மீனவர் மீதான கட்டுப்பாடுகளை நீக்குக

✶ தமிழீழ விடுதலை புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் போர் நிறுத்தம்வேண்டும்

# அமைதிப் பேரணி. ஹர்த்தால் வடமராட்சியில் நேற்று

## முப்பெரும் பிரிவுகளாக மக்கள் அணிதிரண்டு வந்தனர்

— வடமராட்சிச் செய்தியாளர்: சி. சுந்தரலிங்கம் —

வடமராட்சி ஜூன் 25

**மீனவர்கள் மீதான சகல கட்டுப்பாடுகளையும் நீக்க வேண்டும். கடல் வலயச் சட்டத்தை நீக்க வேண்டும். அந்தச் சட்டம் நீக்கப்படும் வரை மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.**

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் போர் நிறுத்தம் ஏற்படவேண்டும்.**

**தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தைகளை நடத்தி உறுதியான அரசியல் தீர்வைஏற்படுத்த வேண்டும்.**

மேற்கண்ட கோரிக்கைகளை முன்வைத்து நேற்று வடமராட்சியில் அமைதிப் பேரணியும் ஹர்த்தாலும் நடைபெற்றன.

முப்பெரும் பிரிவுகளாக நடந்த அமைதிப் பேரணியில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

முன் கூறப்பட்ட கோரிக்கைகளை முன் வைத்து வல்வெட்டித் துறை, பருத்தித்துறை, திக்கம் ஆகிய இடங்களில் முப்பெரும் பேரணிகளும் பொதுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன.

மீனவர் சங்கங்களும் மாணவர் ஒருங்கிணைப்புக் குழுவும் இவற்றை ஒழுங்கு செய்திருந்தன.

வடமராட்சியில் சகல கடைகளும் நேற்று மூடப்பட்டிருந்தன. வாகனங்கள் எவையும் சேவையில்ஈடுபடவில்லை. அரச தனியார் கல்வி நிறுவனங்களும் இயங்கவில்லை. தனியார்,பொது ஸ்தாபனங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

### வல்வையில்

நேற்றுக்காலை 8 மணியளவில் பல பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான பொது மக்கள் வல்வை முத்துமாரி அம்மன் கோவிலில் ஒன்று கூடினர். கோஷங்கள் எவையும் எழுப்பாமல் சுலோக அட்டைகள் தாங்கியபடி மக்களின் அமைதிப் பேரணி பொலிகண்டி அமைதிப் படை முகாமை நோக்கி நகர்ந்தது.

ஊர்வலத்தில் கலந்து கொள்ள வந்த மக்களை உடுப்பிட்டியில் வைத்து (!) பறித்து அமைதிப் படையினர் சிலரைக் கைது செய்தும் சிலரை விரட்டியும்-

பிரஜைகள் குழுத்தலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அந்த உயரதிகாரிக்கு 'முகமூடி' தந்த அனுபவம்!

யாழ்ப்பாணம், ஜூன் 25

முகமூடி அணிந்தவர்களின் தலையாட்டலுக்கு உட்பட்டு அசௌகரியப் படவேண்டிய நியதிக்கு உயர் அரச அதிகாரிகளும் விதிவிலக்கல்ல.

அண்மையில் வவுனியாவில் வைத்து முகமூடியின் அடையாளங் காட்டலுக்கு உட்பட்ட வட பகுதி வங்கி உயரதிகாரி ஒருவர் அமைதிப்படையின் தீவிர விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டார்.

இதுபற்றி அந்த அதிகாரி பிரஸ்தாபித்ததாவது:-

வங்கி அலுவல்கள் காரணமாக நான் மன்னாருக்குச் சென்றுவிட்டு பின்னர் வவுனியாவுக்கு வந்து அங்கிருந்து புதன் கிழமை யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்தேன். தனியார் ஒருவரின் காரில் நானும் சாரதியும் பிரயாணம் செய்து கொண்டிருந்தோம்.

வவுனியாவில் இரண்டாவது 'சென்றி' நிலையை எனதுகார் அண்மித்ததும் அங்கிருந்த தலையாட்டிஒருவர்எனது காரைப்பார்த்துஇந்திய அமைதிப் படையினருக்கு தகவல் கொடுத்தார்.

இதனை அடுத்துஎனது காரை சூழ்ந்துகொண்ட படையினர் முகாமுக்குள் கொண்டு சென்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுவிஸ் அதிகாரிகள் இன்று வருகை

யாழ்ப்பாணம், ஜூன்.25

சுவிஸ் நாட்டு அதிகாரிகள் குழு ஒன்று இன்று யாழ். நகருக்கு விஜயம் செய்ய உள்ளது.

இந்த ஐவர் கொண்ட குழு, யாழ். நகரில் கடந்த கால சம்பவங்களின் போது ஏற்பட்ட சுகாதார துறைப் பாதிப்புகளைப் பார்வையிட உள்ளது.

இன்று மாலையே ஹெலிக்கொப்டர் மூலம் திரும்பிச்செல்லும் இந்த அதிகாரிகள் குழுவினர், நாளை திருகோணமலைப் பகுதியில் ஏற்பட்ட பாதிப்புகளைப் பார்வையிட உள்ளனர்.

(ஓ-க-9)

### உரும்பராய் பகுதியில் சூட்டுக் காயங்களுடன் 4 இளைஞரின் சடலங்கள்

யாழ்ப்பாணம், ஜூன்25

உரும்பராய்ப் பகுதியில் சூட்டுக் காயங்களுடன் நான்கு இளைஞர்களின்சடலங்கள் கிடக்கக்கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

நால்வரது சடலங்களையும் இந்திய அமைதிப் படையினரின் உதவியுடன் உரும்பராய் மேற்கு கிராம சேவையாளர் திரு. வி. ஜெகதாஸ் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றுச்சேர்த்தார்.

சடலங்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில், உரும்பராய் வடக்கு கொலனியில் வெறும் வளவு ஒன்றில் கிடக்கக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக்கழக மாணவன் தாக்கப்பட்டமைக்கு கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன்25

இனந் தெரியாத சிலரால் யாழ். பல்கலைக் கழக மாணவ பிரதிநிதி தாக்கப்பட்டதற்குயாழ் பல்கலைக் கழக பதில் துணைவேந்தரும், பல்கலைக்கழக ஆசிரியர்சங்கமும், பல்கலைக் கழக மாணவர்களும் கண்டனம்தெரிவித்துள்ளனர்.

கடந்த 23 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில் ஆயுதம் தாங்கிய சிலர் பல்கலைக்கழக வளாகத்திற்குள் துண்டுப் பிரசுரங்களை வீசிக்கொண்டிருந்தனர்.

அப்பொழுது அங்கே நின்ற மாணவப் பிரதிநிதி ஒருவர் நீங்கள்யார்? என வினவிய போது அக்குழுவினர் அம் மாணவனைத் தாக்கி விட்டுச் சென்றுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக யாழ். பல்கலைக் கழக பதில் துணைவேந்தர்வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில்–

''இச் சம்பவத்தை ஆழ்ந்த கவலையுடன் நோக்கும் பல்கலைக் கழக நிர்வாகம், இவ்வாறான சம்பவங்கள், தலையீடுகள்பற்றித்தன துகடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது. மேலும் இப்படிப்பட்ட சம்பவங்கள் தமது உயர்கல்வி நிறுவனம் சுமுகமாக இயங்குவதற்கு இடையூறாக அமையும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றது'' என்று குறிப்பிடப்பட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### விரிவுரை பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்25

யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று சகல விரிவுரைகளையும் பகிஷ்கரித்தனர்.

யாழ். பல்கலைக் கழக மாணவன் தாக்கப்பட்டதை கண்டிக்கும் வகையிலேயே இந்தப் பகிஷ்கரிப்பு இடம் பெற்றது.

(ஓ)

### சுபநேரம்

25-06-1988
ஆனி – 11
சனிக்கிழமை
சுபநேரம்: [illegible]
02.55 முதல் 04.25வரை
ராகுகாலம்: [illegible]
08.55 முதல் 10.25வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
ஸ்மார்த்த ! ஏகாதசி

### மாத்தளனில் புதிய முகாம்

புதுக்குடியிருப்பு

ஜூன் 25

முல்லைத்தீவு மாத்தளன் கடற்கரையில் உள்ள, பாடசாலை, கிறிஸ்தவ தேவாலயம் என்பவற்றிற்கு சமீபமாக புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### அன்பார்ந்த வாசகர்களே!

பத்திரிகைத் தாளின் விலை உயர்வு காரணமாக, உங்கள் அபிமான வார இதழான சஞ்சீவியின் விலையை இன்று தொடக்கம் மூன்று ரூபா ஐம்பது சதமாக விலை உயர்த்தியுள்ளோம்.

சஞ்சீவியின் பக்கங்களும் பன்னிரண்டாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

நீங்கள்வாரம்முழுவதும் வைத்து வாசிக்க ஏதுவாக, சஞ்சீவி சஞ்சிகை புதிய பகுதி சேர்க்கப்பட்டுள்ளது.

### பரந்தன் முதல் முல்லை வரை தேடுதல்

புதுக்குடியிருப்பு,

ஜூன் 25

பரந்தனில் இருந்து முல்லைத்தீவு வரையிலான காடுகள், பெருந் தெருக்கள் அனைத்திலும் இந்திய அமைதிப் படையினரின் தேடுதல் நடவடிக்கை தீவிரமாக முடுக்கி விடப்பட்டுள்ளது.

வாகனங்கள் யாவும் அடிக்கடி நிறுத்தப்பட்டு மிக நுணுக்கமாகச் சோதனை மேற்கொள்ளப்படுகின்றன.

வீதிகளில் ஆங்காங்கே படையினர் ''சென்றி'' அமைத்துக் காவல் புரிகின்றனர். (ஓ - 126)

## குடாநாட்டில் மீண்டும் வாந்திபேதி பரவுகிறது

### இதுவரை இருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ் குடாநாட்டில் மீண்டும் வாந்திபேதி (கொலரா) நோய் பரவுவது கண்டுபிடிக்சப்பட்டுள்ளது.

இதனால் இந்த மாதத்தில் மட்டும் இருவர் பலியாகியுள்ளனர்.

பத்துக்கும் மேற்பட்டோர் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் மானிப்பாய் பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம், பூநகரி ஆகிய பகுதிகளிலும், கிளிநொச்சியில் வட்டக்கச்சி, கல்மடு, குஞ்சுப்பரந்தன் ஆகிய இடங்களிலும் இந்நோய் பரவி வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் மானிப்பாயைச் சேர்ந்த எஸ். தனையசிங்கம் (வயது 56) கிளிநொச்சியில் குஞ்சுப்பரந்தனைச் சேர்ந்த நாகரட்ணம் (வயது 46) ஆகியோர் வாந்திபேதி நோய் காரணமாக அண்மையில் மரணமாகியுள்ளனர்.

மீண்டும் வாந்திபேதி நோய் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் பரவ ஆரம்பித்திருப்பதால் அந்த அந்தப் பகுதி மக்கள் சுகாதார நடவடிக்கைகளைப் பேணி நடந்துகொள்ளுமாறு யாழ் சுகாதாரத் திணைக்கள அத்தியட்சகர் திரு. எஸ். கனகசபை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ஓ-10)

## வாகனங்களில் கொள்ளை; லொறியுடன் இருவர் கடத்தல்!

### 'டிஸ்கோ' துப்பாக்கியைக் காட்டி

வவுனியா-மன்னார் வீதியில் வாகனங்களை வழிமறித்த ஆயுதபாணிகளான கோஷ்டி ஒன்று, சுமார் 3 லட்சம் ரூபா ரொக்கப் பணத்தைக் கொள்ளை அடித்ததுடன் சாரதி, கிளீனருடன் லொறி ஒன்றையும் கடத்திச் சென்றுள்ளது.

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் வவுனியா-மன்னார் வீதியில் 13ஆவது மைல் கல்லின் காட்டுப் பகுதியில் ஏழு பேர் அடங்கிய கோஷ்டி ஒன்று நடத்திய இந்தத் திகில் சம்பவம் தொடர்பாகத் தெரிய வந்துள்ளதாவது:-

மன்னார் நோக்கி நெல் கொள்வனவுக்காகச் சென்ற லொறிகள், பயணிகள்வான்கள் போன்ற சுமார் 8 வாகனங்களை இவர்கள் வழிமறித்துள்ளார்கள்.

''டிஸ்கோ'' துப்பாக்கி என்று அழைக்கப்படும் உள்ளூர்த் தயாரிப்பான துப்பாக்கிகள் இரண்டு, கத்திகள் சகிதம் அவர்கள் லொறிச் சாரதிகள், உரிமையாளர்கள், கிளீனர்கள், பயணிகள் ஆகியோரைப் பயமுறுத்தியதுடன் தம் வசமிருந்த பணத்தைக் கொடுக்கத் தயங்கியவர்களைக் கண் மண் தெரியாமல் தாக்கியுள்ளார்கள்.

அத்துடன் வழிப்பறிக் கொள்ளையர்களுக்கு அஞ்சி வாகனத்தின் பல இடங்களிலும் ஒளித்து வைத்திருந்த பணத்தையும் அவர்கள் தேடிக் கண்டுபிடித்து எடுத்து விட்டனர். பயணிகளிடமிருந்து பத்து ரூபா பணத்தையும்கூட அவர்கள் விடவில்லை.

இச்சம்பவம் காரணமாகச் சில மணி நேரம் இவ்வீதியில் வாகனப் போக்குவரத்துத்தடைப்பட்டது. கொள்ளைகள் தொடர்பாக வவுனியாப் பொலீஸ்நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. (ஓ-164)

### 11 பேர் கொலை!

பஞ்சாப்பில் வியாழனும் வெள்ளியும் சீக்கிய தீவிரவாதிகளினால் பதினொருபேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

## இளம் தமிழ் டாக்டருக்கு லண்டனில் ஆராய்ச்சிப் பரிசு!

லண்டன், ஜூன் 24

கண்ணில் ஏற்படும் ''கிளக்கோமா'' எனும் மங்கல் பார்வை நோயை ஆரம்பத்திலேயே 'ஸ்கிறீனிங்' (பகுப்பு முறை) மூலம் கண்டு பிடிக்கும் புதிய முறை ஒன்றினை அறிமுகப்படுத்தியதற்காக தமிழ் டாக்டர் ஒருவருக்கு முதற் பரிசு கிடைத்துள்ளது.

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனைச் சொந்த ஊராகக் கொண்ட டாக்டர் சயிலநாதன் என்பவரே லண்டனில் இச்சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

தற்சமயம் 3,000 நோயாளிகளை பகுப்பு முறையினுல் பரிசோதித்துவரும் டாக்டர் சயிலநாதன் இந்த ஆராய்ச்சிக்கென முதற் பரிசுடன் தெரிவு செய்யப்பட்டவராவர்.

லண்டன் ''கிறேட்'' எக்ஸ்பெக்டேஷன்ஸ் நிதி ஸ்தாபனம் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட முதல் ஆராய்ச்சித் திட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

லண்டனிலுள்ள 'சரே' என்ற இடத்திலுள்ள ஏவெல்லிலுள்ள பூர்ன் ஹால் சுகாதார நிலையத்திலேயே இந்த ஆய்வுகள் யாவும் நடைபெற்று வருகின்றன.

'கிளக்கோமா' என்னுமிந்த நோய்க்கு நோய் ஆரம்பித்த காலத்திலேயே சிகிச்சையளித்தல் வேண்டும். தவறின் கண்பார்வை முற்றிலும் நீங்கக்கூடிய அபாயம் ஏற்படும்.

உலக ஜனத்தொகையின் 2 சதவீதமான 40 வயதைத் தாண்டியவர்

(4 ஆம் பக்கம் பார்க்க

புதுமையும் எழிலும் மிக்க பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★சின்னஞ் சிறு விளம்பரம்★

## விற்பனைக்கு

பழைய செம்புபித்தளை அலுமினியம் உயர் விலைக்கு பெறப்படும். பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [4674]

புதிய மறு சீரமைக்கப்பட்ட புதிய மொடல் C. 90 விற்பனைக்கு உண்டு. இடம்:15 பாரதி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 4531

புதிய நவீன வீட்டுப் பாவனைக்குரிய சலவை இயந்திரம் General Washing Machine விற்பனைக்குண்டு. தொடர்பு கட்கு No. 16, விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 4703

சகல விதமான T. V றேடியோ, பூஸ்டர் அன்ரனு வயர் சுவர்க்கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள், மின் விசிறிகள், கைனு மின் அடுப்புகள், T. V ஸ்ராண்ட் றைஸ் குக்கர் மற்றும் எலக்றிக் வயறிங் பொருட்கள், பெற நாடுங்கள் New City Traders 135, Kasturiar Road, Jaffna (C5482)

அப்பளம் செய்வதற்கு தேவைப்படும் உழுத்தம்மா மற்றும் அரைத்த உப்பு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி ட்றாபூட் கிறைண்டேஸ் 41 கந்தப்பசேகர் லேன், ஹரன் தியேட்டர் அருகாமையில் யாழ்ப்பாணம். (4691)

நெல் குற்றும் கிறைன்டர் 5 Horse power மோட்டார் main switchம் விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நேரம் 3 மணிமுதல் 6 மணிவரை தொடர்பு: யாழ். சைனீஸ் றெஸ்றெடோரன்ட் முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (4715)

இறைச்சிக்கோழிகள் Broilers விற்பனைக்கு உண்டு. திருச்செல்வம் வீதி, பலாலி றோட் கோண்டாவில். (4533)

Sausages-எல்லாவகையான Sausages பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு; Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை நல்லூர். (4075)

AL Ponnac பால்மாடுகளுக்கு மிகச்சிறந்த A L புண்ணாக்கு மீண்டும் விற்பனை செய்கின்றோம். நியாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (4076)

### காணி விற்பனை

கந்தரோடை றோட்டில் சுன்னாகச் சந்தியிலிருந்து 1/4 மைல் தூரத்திற்குள் வீடுகட்டக் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: த. தம்பிப்பிள்ளை அரவிந்தம் சேர் P. இராமநாதன் றோட் உடுவில், சுன்னாகம். 4705

உரும்பராய் சந்தியிலிருந்து 50 யார் தூரத்தில் கோப்பாய் றோட்டில் கடை கட்டக்கூடிய காணி ஒன்று (2¾ பரப்பு) விற்பனைக்குண்டு உடன் தொடர்பு கொள்ளவும். K. சதானந்தம். C/o குணம் வீடியோ சென்றர், 42 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (4692)

### விற்பனை

Broilor இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: Nallur Farm (entre . C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசன் லேன், நல்லூர். (4073)

புறொயிலர் சேவல் இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். "பேப்பர் கடை" (1ம் றெயில்வே கடவைக்கு அருகில்) 66/2 பருத்தித்துறைவீதி, யாழ்நகர். 4702

### கோழிக்குஞ்சு

Hisex Golden பிறவுன் சேவற் குஞ்சுகள் 24ந் திகதி வெள்ளிக்கிழமையும் 1மாத Golden comet பிறவுன் பேட்டுக் குஞ்சுகள் 25ந் திகதி சனிக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராசா பிறதர்ஸ் பிரம்படி கொக்குவில். (4697)

Lohmann வெள்ளை சிகப்பு பேட்டுக்குஞ்சுகள் புறொயிலர் குஞ்சுகள், Golden Comet சிகப்பு பேட்டுக்குஞ்சுகள் சேவல் குஞ்சுகள், Hy-Line வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும், உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும் Nallur Farm Centre. C/o, நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசன் லேன் நல்லூர். (4074)

Hisex Golden Comet பிறவுன் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hy - Line வெள்ளை, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் Hybro புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா அன் பிறதர்ஸ் பிரம்படிலேன் கொக்குவில். (4151)

### தேவை

சிலிண்டர், பிளேட்டின் மெஷின் மைண்டர்கள் தேவை: நேரில் வரவும் செட்டியார் அச்சகம், 430 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C 5506)

(Broiler) புறொயிலர் கோழிகள்தேவை. இருப்பவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இடம் அண்ணா பாம் இணுவில். (C5501)

சித்திர வேலைகளில் ஆர்வம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ளவும். "கவிதா" 245, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (C-4909)

மரக் கடைச்சல் வேலை செய்வதற்கு ஆண் பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றனர். கடைச்சல் வேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பழக விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம். விளம்பரதாரர் C/o 244, உதயன். (4683)

யாழ்நகரில் இரண்டு அல்லது மூன்று அறை கொண்ட, தெருவை முகப்பாகக்கொண்டதுமான ஓர் சிறிய வீடு அல்லது அனெக்ஸ் வாடகைக்குத் தேவை. தொடர்பு: C/o 168 உதயன். (4535)

### சேவை

சிறியோர் முதல் பெரியோர் வரை விரும்பி உண்ணுவது குறோனா பாஸ்மலா மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்; 26, சுவாட்ஸ் லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். [3443]

## கல்வி

City And Guilds of London Institute Quantity Surveying 1989, வகுப்புகள் 1-7-1988 தொடக்கம் அற்லஸ் இன்ஸ்ரியூட் திருநெல்வேலியில் நடைபெறவுள்ளன. வகுப்புகள் யாவும் காலை 6. 30 8. 30 வரை நடைபெறும். 30-6-88ம் திகதிக்கு முன்பு அனுமதி அட்டையைப் பெற்றுக் கொள்ளவும். (4663)

ICMA/ AAT I. A. B / Computer Programing வகுப்புகள் இப்பொழுதுதான் ஆரம்பமாகியுள்ளன, School of Business Administration 16, 3ம் குறுக்குத் தெரு, [O.L.R தேவாலயத்திற்கு மேற்குப் பக்கம்) யாழ்ப்பாணம். (C5468)

புலமைப் பரிசில் பரீட்சைக்கான புதிய வகுப்புகள் ஆண்டு5 ஆண்டு6ற்கு ஆரம்பமாயுள்ளன ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் யாழ். முன்னணி ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. புதிய கல்வி நிலையம் கெங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். (4176)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road Jaffna (Samy & Co Shabra அருகாமையில். (C5300)

### மணமகள் தேவை

யாழ். இந்து உயர் வேளாள குல லண்டனில் நிரந்தரப்பிரசையாகவுள்ள 36 வயதுள்ள நிர்வாக உத்தியோகத்தருக்கு பெற்றோர் 5'-5" மேல் உயரமுள்ள அழகான படித்த பெண் தேடுகின்றார்கள். ஜாதகம், படம் விபரத்துடன் தொடர்பு கொள்ளவும்: C/o,166 உதயன். (4519)

## கலர் படம்

உங்கள் கலர்ப்படச் சுருள்களை மைக்கிறோ கொம்பியூட்டர் மூலம் கொழும்பு - சிங்கப்பூர் ஆகிய இடங்களில் பிரதி செய்ய விரும்புகின்றீர்களா? Processing இலவசம் பிரதி P. C 4/50 Only Processing 25/- தரமாகவும் விரைவாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள. கொழும்பு ஸ்ருடியோ யாழ்ப்பாணம். (C/4910)

## காணவில்லை

லாலூதி பீபி, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்னும் பெயர் விலாசத்தையுடைய எனது அடையாள அட்டையும் உணவு முத்திரையும், பிறப்பு சான்றிதழ்களும் கச்சேரியடியில் 23-6-88 இல் தவறவிட்டுள்ளேன். எடுத்தவர்கள் தயவு கூர்ந்து No. 20 ஜும்மா பள்ளிவாசல் லேன், யாழ்ப்பாணம் என்ற முகவரியில், அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி வேண்டுகின்றேன். (4717)

லியோ அன்டசன் ஆகிய எனது பேஸ்சும் அதனுள் சில முக்கிய ஆவணங்களும் ஒரு தொகைப் பணமும் இருந்தன. கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (C/5535)

### மணமகன் தேவை

இந்து உயர் வேளாள குல 40 வயதுடைய(சட்டத்தரணி), மணப்பெண்ணுக்கு பட்டதாரி அல்லது அதற்குச் சமமான கல்வித்தகுதி உடைய மணமகன் தேவை: நல்ல சீதனம் வழங்கப்படும். புகைப்படம் சாதகம் மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். C/o 167, உதயன். (4521)

## பெற்றோர்களுக்கு ஓர்நற்செய்தி

உங்கள் பிள்ளைகள் புலமைப் பரிசில்பரீட்சையில் சித்தியடைய வேண்டுமா? முன்னணி பாடசாலைகளில் இடம்பெற வேண்டுமா?

**ஓர் அரிய சந்தர்ப்பம்**

புலமைப்பரிசில் பரீட்சை புத்தக வெளியீட்டாளர்களான அஸ்ரன் பதிப்பகம் ஆரம்பிக்கும் ஓகஸ்ட் 14ம் திகதி நடைபெறவுள்ள

**ஆண்டு 5**

**புலமைப்பரிசிற் பரீட்சைக்கான**

**1½ மாத துரித**

**பயிற்சி வகுப்புகள்**

பாடங்கள்: **தமிழ், கணிதம்**

★ யாழ்நகரில் திறமைவாய்ந்த ஆசிரியர்களின் இணைந்த சேவை.

★ நாளாந்தம் அச்சடித்த பயிற்சிகளும் செய்முறைகளும்.

★ வார நாட்களில் (5 நாட்கள்) பிற்பகல் 3 — 5 மணிவரை
யூலை 14-ம் திகதியின் பின்
மு.ப. 9 — 12 மணிவரை

**ஆரம்பம்: 4-7-88**

விபரங்களுக்கு பெற்றோர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**அஸ்ரன் இன்ஸ்ரியூட்**

166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(A. S. சங்கரப்பிள்ளை கட்டடம் 1ம் மாடி)
(C 4937)

### சுன்னாகம் மெய்வல்லுநர் போட்டி

சுன்னாகம், ஜூன் 26
சுன்னாகம் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையேயான மெய்வல்லுனர் போட்டிகள் எதிர் வரும் செவ்வாய்க் கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

கொத்தணி பாடசாலைகளின் அதிபர் திரு. பொ. நாகரத்தினம்தலைமையில் நடைபெறும் இப்போட்டிகளில் முதன்மை விருந்தினராக மானிப்பாய் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்சயன் கலந்து சிறப்பிக்கிறார். (இ-27)

### பட்டமளிப்பு விழா

புங்குடுதீவு பெருங்காடு சிவன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்களுக்கு 'கிரியா சிரோமணி' பட்டமளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு புங்குடுதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தானத்தில் டாக்டர் ஆ. பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும். (இ167)

# வேறுபகுதி மீனவரால் நெடுந்தீவு மீனவர்கள் நஷ்டம் எனப் புகார்

நெடுந்தீவு ஜூன் 26
மன்னார்க்கடலில் மீன் பிடிப்பதற்கென அனுமதி பெற்றுச் செல்லும் வேறு பகுதி மீனவர்கள் நெடுந்தீவுக் கடற்கரையோரமாக மீன் பிடிக்க தமது இழுவைப் படகுகளைப் பயன்படுத்துகின்றனர். இதனால் சிறு தொழில் மீனவர்களான உள்ளூர் வாசிகளின் வலைகள் வெட்டுப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் களவு போகின்றன.

மேற்கண்டவாறு நெடுந்தீவு மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்திய ரோலர்களின் நடமாட்டத்தால் ஏற்கனவே பாரிய நஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கும் தாங்கள் தற்சமயம் இந்த மீனவர்களின் செயலினால் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் நெடுந்தீவு மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (இ-111)

### சிகிச்சைநிலையங்கள் மூடப்பட்டன

கோப்பாய், ஜூன் 26
கோப்பாய் வடக்குப் பகுதிகளில் சொறி, சிரங்கு நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்குசிகிச்சை அளித்துவந்த நிலையங்கள்மூடப்பட்டுவிட்டன. (சி-72)

### இயங்குவதில்லை

கோப்பாய், ஜூன் 26
கோப்பாய் வடக்குப் பகுதி வெங்காயச் சங்க கட்டடத்தில் அமைந்திருந்த விவசாய மருந்து, உரவகை கிளைநிலையம் இயங்குவதில்லை.

இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்று சொல்லப்படுகிறது. (இ-72)


## வடபகுதி வாழ் D. S. I. பாதணி விற்பனையாளர்களுக்கோர் நற்செய்தி

இன்று முதல் (25 - 6 - 1988 சனிக்கிழமை) உங்களுக்கு தேவையான D. S. I. பாதணிகளை கொழும்பு செல்லாமல், கொழும்பு விலைக்கே யாழ் நகரில் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம் இராஜேஸ் டிஸ்ரிப்யூட்டேஸ் யாழ்ப்பாணம்-

ஏகவிநியோகஸ்தர்கள்

**இராஜேஸ் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

155, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.
(4542)

நயினை நாகபூஷணி ஆலய வரலாறும் அருட்பா மாலையும்

கவிஞர்
நயினை நாக. சண்முகநாதபிள்ளை, B. Sc
விலை ரூபா 20/- தொலைபேசி 23631
வெளியீடு விற்பனை
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம் (4839)

## நாக. துர்க்காதேவி ரவலஸ்

✶ குவைத் (சாரதி, ஆஸ்பத்திரி கிளினர்)
✶ சிங்கப்பூர் (வீட்டுப்பணிப்பெண்)
✶ மாலைதீவு (மேசன், தச்சுவேலை, கூலி)

**உடன் தேவை**

முற்பணமாக 3000 செலுத்தி அன்று 28 . 6 . 88 பதிவு செய்பவர்களில் அதிர்ஷ்டம்பார்த்து அதிர்ஷ்டசாலிக்கு தங்க மோதிரம் வழங்கப்படும். (4831)

## KUWAIT VACANCIES

Wanted CLEANERS for Kuwait.
MALES: Age: 20 to 40
FEMALES: Age: 30 to 40
3 Years Contract.

**GULF WINGS**
23, Aloe Avenue
Colombo - 3.

Applications in Jaffna District may be handed over to

**V. T. R. Travels**
41, 3rd Cross Street,
Jaffna.

Approval No: AL 527 / 6 / 88
(4823)


## வேண்டுகோள்

காரைநகர் எட்டுக்கட்டியில் நாகமுத்து மதியாபரணம் என்பவருக்குச் சொந்தமான டிராக்டரிலிருந்து ரிப்பர் ஹைற்றோலிக் பம்ப் வயருடன் 22- 6- 88 புதன்கிழமை இரவு களவாடப்பட்டுள்ளது. இதனைக் கண்டுபிடித்துத் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். டிராக்டர் கராஜ் உரிமையாளர்களை இது விடயத்தில் ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். (4838)

## 31 ம் நாள் அந்தியேட்டிக் கிரியை



தோற்றம் 11 - 8 - 1937 மறைவு 25 - 5 - 1988

**திரு - டானியல் சின்னராசா**

அன்புத் தெய்வமே!

நோயிற் றிராமல் நொந்து மனம் வாடாமல்
பாயில் கிடவாமல் எம்மை எல்லாம்
பரிதவிக்க விட்டு மறைந்து விட்டீர்களே
நாட்கள் மறையலாம் வருடங்கள் ஆகலாம்
ஆனால் உங்கள் இனிய நினைவுகள்
எம்மை விட்டு என்றும் அகலாது.

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி - கிறேஸ், பிள்ளைகள், உற்றார், உறவினர்கள். [4518]

## மரண அறிவித்தல்

### செல்லையா நடராஜா

யாழ். போதனா வைத்தியசாலை இளைப்பாறிய பிரதம லிகிதர் செல்லையா நடராஜா அவர்கள் 24. 6. 1988 அன்று காலமாகிவிட்டார். அன்னார் செல்லையா கனகம்மாவின் மூத்த புதல்வரும், புஸ்பமணி (யாழ்/ போதனா வைத்தியசாலை மருத்துவ தாதிப் பிரிவின் விடுதிப் பொறுப்பாளரின்) கணவரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 25. 6. 88. சனிக்கிழமை காலை 9. 00 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
திருமதி. நடராஜா புஸ்பமணி
102/12, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம். (4841)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## குவைத் வேலைவாய்ப்பு

கிளீனர்ஸ்
வயது எல்லை 20 — 40 35 KD
பணிப்பெண்கள்
வயது எல்லை 30 — 40 30 KD

**கல்ப் விங்ஸ்**
23. அலோய் அவென்யு
கொழும்பு—3.

எமது வடமாகாண முகவர்
**V. T. R. ரவல்ஸ்**
இல. 41 3-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

[4822] அ. இ. 527/6/88

## தேவை

யாழ்நகரில் இயங்கி வரும் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு பிறேசியர்ஸ் [Braziers] வெட்டுவதற்கும், தைப்பதற்கும், உதவியாளராக பணிபுரிவதற்கும், மற்றும் காசாளர்/லிகிதர் [கணக்கியல் அறிவுடையவர்கள்] A/L படித்தவர்களிடம் மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பங்கள், கோரப்படுகின்றன. [பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.] முடிவுத்திகதி.5-7-1988ல் தொடர்பு: C/O 247, உதயன், யாழ்ப்பாணம்.

(4837)

## யாழ் / வைத்தீஸ்வரவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம்

இக்கூட்டம் 26 – 6 – 88 ஞாயிறு காலை 10 மணிக்கு அதிபர் திரு. சி. சிவசரவணபவன் ,M. A. அவர்கள் தலைமையில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் சமுகம் தருமாறு தயவாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

L. பக்கீர்சாமி
கௌரவ செயலாளர்
(C/5531)

## குவைத் உடனடி வேலை வாய்ப்பு

- ★ குவைத் அலுமினியம் பைக்டரியில் வேலை செய்வதற்கு 100 பேர் (50 K. D)
- ★ குவைத் ஹாபர், ஆஸ்பத்திரி, ஆகியவற்றில் கிளீனேர்ஸ் ஆக வேலைசெய்வதற்கு 100 பேர் (40 K. D)
- ★ வீட்டுப் பணிப்பெண்கள் (சிங்கப்பூர், குவைத்)
- ★ வயது 23 - 40 வரை

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**சமட்ரக் ரவல்ஸ் லிமிட்டெட்**
262. பிரதான விதி,
யாழ்ப்பாணம்.
(C/5529)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திரு. தம்பையா-அரியோகநாதன்
(பொலீஸ் உத்தியோகத்தர் மாறவில்ல)

அன்னை மடியில்: 13 - 2 - 1951
ஆண்டவன் அடியில்: 28 - 5 – 1988
திதி: 27 - 6 - 88

சிரித்த முகம் எங்கே
உன் கம்பீரத் தோற்றம் எங்கே
காலன் ஏன் கவர்ந்தான்
காரணம் தான் புரியவில்லை
எம் நினைவெல்லாம் உன்னை சுற்றித்தான்
மாறாத் துயரத்தை மாற்ற வழி இல்லையே
எங்கள் சுமைதாங்கி சாய்ந்து விட்டதே
இனியாம் என் செய்வோம்.

பிரிவால் துயருறும்;
அன்புத் தாய்.

சோளியக்கட்டை,
மல்லாகம். (4532)

5 ஸ்ரீ மொறிஸ் Oxford கார்

## விற்பனைக்குண்டு

தொடர்பு
C. பாலசிங்கம்
சங்கிலியன் வீதி,
பண்டாரக்குளம் ஒழுங்கை,
நல்லூர்.
(4538)

## புதிய சேவை மீண்டும் ஆரம்பம்
## விநாயகா ரேடிங் கொம்பனி

- ★ ஷப் போட்டோ பிரதிகளுக்கும்
- ★ சில்வர் பொருட்கள்
- ★ சகல விதமான மின் உபகரணங்கள்

வீட்டுப் பாவனைக்கு தேவையான சகலவிதமான பொருட்களையும் சிறந்த வகையான முட்டைகளையும் பெற்றுக் கொள்ள

6A ஆஸ்பத்திரி வீதி,
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(4836)

## INDIAN EXAM
## ஆங்கில மருத்துவ பட்டப்படிப்பு (L. M. M.)

**இந்திய மத்திய அரசின் அனுமதி இல: (4-6170 M.P.T 24-11-1972 G. O)**

G. C. E. O/L சித்தியடைந்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இந்திய அரசினல் அனுமதிக்கப்பட்ட ஆங்கில ( Modern Medicine ) வைத்திய டிப்ளோமா பயிற்சிகள்.

பதிவுகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட கடித உறையுடன் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்,
**சாயி மெடிக்கல் அக்கடமி**
இல: 10, பருத்தித்துறை வீதி,
யாழ்நகர்.
(4833)

## கேள்விப்பத்திர விண்ணப்பம்

யாழ்ப்பாணக் கல்லூரி பரந்தன் கிளையில் வகுப்பறைகள், கிணறு, ஆசிரியர்விடுதி ஆகிய கட்டட நிர்மாண வேலைகளைக் கட்டி முடிப்பதற்கு தகுந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள்கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்களை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தில் மு. ப. 9-00 இலிருந்து பி. ப. 3-00 வரை கிழமை நாட்களில் ரூபா 50/- செலுத்தி பெற்றுக்கொள்ளவும்.

இயக்குனர்
(C/5511)




## டிஸ்பிரின் துரிதம்

தலைவலி, தடிமல், காய்ச்சல், வலிகள், நோவுகளுக்குத் உடன் நிவாரணம் உங்களுக்குத் தேவை எனவே வேகம் மிக முக்கியம்.

டிஸ்பிரின் கரையக்கூடியது. எனவே அது உடம்பில் வேகமாகச் உறிஞ்சப்பட்டு, நோய் முனைகளை விரைவாகச் சென்றடைந்து, துரித நிவாரணம் தருகிறது.

உலகெங்கும் இலட்சக்கணக்கான மக்கள், வலிகள், காய்ச்சலிலிருந்து துரித நிவாரணம் பெற, நாற்பது வருடங்களுக்கும் மேலாக, டிஸ்பிரினை நம்பி வந்திருக்கிறார்கள் துரிதமான, நிச்சயமான நிவாரணத்துக்கு டாக்டர்கள் அதனைச் சிபாரிசு செய்கிறார்கள். ஏனெனில் டிஸ்பிரின் கரையக்கூடியது.

வலிகளும் காய்ச்சலும் நீடிக்க விடாதீர்கள். துரித நிவாரணத்தை நாடுங்கள். டிஸ்பிரின் பாவியுங்கள்




ஒரு றெக்கிட் அன் கோல்மன் தயாரிப்பு

Quest 1325

**டிஸ்பிரின்** துரித நிவாரணத்துக்கு உலகெங்கும் நம்பப்படுவது

## வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி



### Computer Programming in Basic Language

புதிய பிரிவுகள் ஆரம்பம்:
சனி, ஞாயிறு வகுப்புகள் 2–7–88 பயிற்சி காலம்: 2 மாதம்
திங்கள், புதன், வெள்ளி வகுப்பு : 1-7–88 பயிற்சி காலம்: 40 நாள்
கட்டணம் 750/– (இரு பிரிவுகளாக செலுத்தலாம்)
O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி I. B. M (Compatable) கம்பியூட்டரில் வழங்கப்படும் பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

### Diploma in Computer Programming

Computer Programming and Data Processing in Basic and Cobal Language
பயிற்சிக் காலம்: 6 மாதம்

Lecturers: S. S. UTHTHAMAN
R. S. SUBAJI A. I. D. P. M
(Programmer University Jaffna.)

- குறிக்கப்பட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்யவும்.

**விண்ண ப முடிவு நாள்: 30-06-88**

## Unikco Computer Centre

No: 5 மின்சார நிலைய வீதி 2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(உபதபாற் கந்தோர் அருகாமை)
[C–5515]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மில்க்வைற் செய்தி-இதழ். 145**

மில்க்வைற் நீல சோப் மேலுறைகள் 20 அல்லது பார் சோப் மேலுறைகள் 2 அனுப்பி புதிய வெளியீடான ''மில்க்வைற் செய்தி'' இதழ் - 145 ஐப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

25 - 06 - 1988 சனிக்கிழமை

✶ மாணவ மணிகளே! ✶

**சிக்கனமே சிறந்த செல்வம்.**

சிக்கனச் செலவிற்கு நீலம் கலந்த ''மில்க்வைற் நீல சோப்'' பாவியுங்கள்.
50 நீல சோப் உறைகளைச் சேகரித்துக் கொடுத்து ஒரு உண்டியல் பெறவும்.

# யுத்தநிறுத்தத்துக்குவகைசெய்யாவிடில் மற்றொரு அக்டோபர் உருவாகும் -பாலகுமார்

சாவகம் பகுதியில் நாம் வைத்த கருத்தரங்குகளில் கேள்விக் கணைகள் பல தொடுக்கப்பட்டன. புலிகளுக்கு வால் பிடிக்கவா இந்தக் கூட்டத்தை நடத்துகிறீர்கள்? 6 மாதங்களாக எங்கே இருந்தீர்கள்? இவ்வாறெல்லாம் கேட்டார்கள். தேர்தலில் பங்குகொண்டு வாக்கு வேட்டையாடவா கூட்டம் நடத்துகிறீர்கள் என்று கேட்டார்கள். எங்களைக் கேள்வி கேட்டவர்கள் எங்கள் மக்கள். அந்நியர்கள் இல்லை. எண்ணங்களை வெளிப்படுத்துவதில் தவறுகள் இல்லை. ஆனால் உங்களுக்குத் தெரியும் கேள்வியை மட்டும் கேட்பதோடு நின்று விடக் கூடாது. பதிலையும் தேட வேண்டியவாறு சூழ்நிலை உங்களை நிர்ப்பந்திக்கிறது.

நாங்கள் நிச்சயமாகத் தெளிவாகக் கூறுகிறோம் இந்த மேடை யாருக்கும் ஆதரவாகவோ அல்லது யாருக்கும் எதிராகவோ உங்கள் உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பி இலாபம் சம்பாதிப்பதற் காகவோ அமைக்கப்பட்ட மேடை அல்ல. மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற நிலையிலும் நாங்கள் எங்கள் கடமையைச் செய்ய வேண்டிய கட்டாயம் இருப்பதால் தான் இந்த மேடையை அமைத்து நாங்கள் பேசுவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறோம்.

இயக்கங்கள் என்று சொன்னால் பலருடைய மனதில் ஒரு கேள்விக் குறியும் கேலியான எண்ணங்களும் உருவான சூழ்நிலை எண்ணிப் பார்க்கிறோம்; வேதனைப் படுகிறோம். 1975 இலிருந்து எத்தனையோ போராளிகள் தங்கள் வாழ்வைத் தியாகம்செய்துபோராடி 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட அந்தப் புதிய சூழ்நிலையில் இந்திய அரசின் நிர்ப்பந்தங்களுக்கு மத்தியில் நாங்கள் புதிய சூழ்நிலைக்கேற்ப எங்கள் போராட்ட வழி முறையை மாற்றியமைத்து எத்தனையோ சிரமங்களை அனுபவித்த பின்னர் தான் இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

### ஒப்பந்தம்

இந்த ஒப்பந்தம் நாங்கள் விரும்பி வரவேற்ற ஒப்பந்தம் அல்ல. நாங்கள் ஒப்பந்தத்துக்காக போராடவும் இல்லை. ஆனால் தவிர்க்க முடியாமல், இந்தியஅரசு தென்கிழக்காசிய புவிசார் அரசியல் நிலைமை, அதன் பாதுகாப்பு தொடர்பாகச் சிந்தித்து அதனால் ஏற்பட்ட வெளிப்பாடு. அதேநேரம் இலட்சக்கணக்கான எமது மக்கள் அங்கு தங்கியிருந்த நிலைப்பாடு. அந்த மக்களுக்கு அங்குள்ள மக்கள் செய்த உதவி இயக்கங்களுக்கு இந்திய அரசு மனமுவந்து செய்த உதவி என்பவற்றைக் கருத்தில் கொண்டோம்.

எங்கள் மக்களுடைய அடிப்படை அபிலாஷைகளைத் தீர்த்துவைக்காத போதும் நாங்கள் இந்தியாவினுடைய நட்புறவுத் தன்மையை தலையீட்டுத்தன்மை அல்லது மூன்றும் நபராக மத்தியஸ்தராகத் தொழிற்படும் தன்மையை முற்றாகப்பகைக்கவில்லை என்ற அளவில் தான் இந்த ஒப்பந்தத்துக்குத் தடையாக இருக்கவில்லை. இந்த ஒப்பந்தத்தைஅமுல்படுத்த முடியுமாக இருந்தால் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் இந்த ஒப்பந்தத்தை அமுல் படுத்தமுடியுமா என்பது எமக்குத் தெரியும். வரலாறு எங்களுக்குத் தெரியும். நாங்கள் புத்திசுவாதீனத்தால் பாதிக்கப்பட்டிருக்கவில்லை. எத்தனையோ ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டதை எங்களுக்குத் தெரியும் என்று கூறினோம்.

எங்களுடைய நிலைப்பாடுகளை மீறி எதையும் செய்ய முடியாதென்று இந்தியா கூறியது.

> இம்மாதம் பதினாறும் திகதி வியாழக்கிழமை நெல்லியடியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஈரோஸ் பிரமுகர் பாலகுமார் ஆற்றிய உரை இங்கு தொகுத்துத்தரப்படுகிறது.

ஆனால் ஜே.ஆர். சாமர்த்தியமாகச் செயற்பட்டு நண்பர்களாக இருந்தவர்களையும் மோதவைத்துத் தன்னுடைய நிலையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அல்லும் பகலும் செயற்பட்டு வருகிறார். அதனால் இந்தியாகூட அவரைக் காப்பாற்றவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இன்றைய நிலையில் ஜே ஆருக்குப் பின்னர் யார் என்றால் சொல்லமுடியாது. அவருக்குப் பின்னால் வருபவர் இந்தியாவின் நண்பன் என்று தெளிவாக யாரும்சொல்லமுடியாது.

### அனுமதியோம்

நாம் இந்தியாவைப் பகைக்கவில்லை! இந்தியப் படையை வெளியேறுமாறு கூறவில்லை. இந்தியப் படை வந்த போது எதிர்ப்புக் காட்டவில்லை. ஆனால் அதற்காக எங்கள் வாழ்வில், எங்கள் வளங்களில், நாளாந்த நடவடிக்கைகளில், பொருளாதாரத்தில், எங்கள் திட்டங்களில், எங்கள் மண்ணில் நேரடியான தலையீட்டை ஒருபோதும் அனுமதிக்கப்போவதும் இல்லை.

மக்கள் படும் கஷ்டங்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் - இந்திய அமைதிப் படை மோதலே காரணம்எனப் பலரும் கூறினர். அந்நிலையைப் பார்த்து நாமும் மனம் வருந்தினோம். இந்நிலையில் கடந்த டிசம்பரில் விடுதலைப் புலிகளுடன் கதைத்தபோது சென்னையில் பேசத் தயார். அங்கு கிட்டு இருக்கிறார், எம். ஜி. ஆர். இருக்கிறார் என்று சொன்னார்கள். அந்தச் செய்தியை நாங்கள் இந்தியாவுக்குத் தெரிவித்தோம். பலன் கிட்டவில்லை.

கடந்த 10 மாதங்களாக யுத்தம் நடக்கிறது. பேச்சுவார்த்தை உண்மையாகவே அமைதியை நோக்கியதாக இருந்தால் உடனடியாக யுத்த நிறுத்தம். அதைத் தொடர்ந்து பேச்சுவார்த்தை அதன் மூலம் அமைதி ஏற்பட வேண்டும்.

இதனை இம் மக்கள் குரலை ஒலிக்கச் செய்யவே நாம் இதனை ஒழுங்கு செய்தோம். மக்கள் துன்பங்களைச் சகித்துக் கொண்டு பேசாமல் இருந்தனர் தமது விருப்பை வெளிக்காட்டவில்லை. இதற்கு நாம் மக்களைக் குறை கூற முடியாது. மக்களைத் தட்டியெழுப்பி அவர்களுடைய குரலை வெளிக்கொணர வேண்டும். இதனை எவரும் செய்யலாம்.

### தேர்தல்

இதனை நாம் ஒழுங்கு செய்தது தேர்தலைச் சந்திக்கும் நோக்கிலோ பதவிபெறும் நோக்கிலோ அல்ல. மக்கள் குரலை வெளிக்கொணரும். வகையிலேயே. இக்கால கட்டத்தில் தேர்தலை நடத்த முடியாது. வாழ்க்கை சுமுகநிலையை அடைந்தாலே தேர்தல் நடத்தமுடியும். இது சேரவேண்டியவர்களுக்குப் போய்ச் சேரவேண்டும்.

இதனை வெளிப்படுத்தி மக்கள் யுத்த நிறுத்தம் ஏற்பட வகை செய்யாவிடில் இன்னுமொரு அக்டோபரைச் சந்திக்க வேண்டி வரும். பிரபாகரனும் பேச்சுவார்த்தைக்குத் தயார். ராஜீவ் காந்தியும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணத் தயார். அப்படியானால் இந்த நிலை ஏன் தொடர வேண்டும். இதில் எங்கோ தவறு இருக்கிறது. இதற்கு விடை கிடைக்காமல் நாம் பொறுத்திருக்க முடியாது என்பதனால் தான் இக் கூட்டத்தை ஏற்பாடு செய்து கருத்துக்களை முன்வைத்தோம். ★

## நிச்சயதார்த்தம் செய்துவிட்ட
# சுஹாசினி மணவாளனை கைப்பிடிக்கக் காத்திருக்கிறார்

சென்னை, ஜூன் 25

நடிகை சுஹாசினி திருமணம் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 9 ஆம் திகதி சென்னையில் நடக்கிறது.

மணமகன் பிரபல டைரக்டர் மணிரத்னம் 'அக்னி நட்சத்திரம்' பட டைரக்டரான இவர் பட அதிபர் ஜி. வெங்கடேஸ்வரின் தம்பியாவார். இருவரும் சென்ற 17ஆம் திகதி திருமண நிச்சயார்த்தம் செய்து கொண்டனர்.



சுஹாசினி

'சிந்து பைரவி' புகழ் சுஹாசினி நடிகர் கமலஹாசனின் அண்ணன் சாருஹாசனின் மகள்.

திருமணம் பற்றி நடிகை சுஹாசினி செய்தியாளரிடம் சொன்னதாவது;

என்னுடைய திருமணம் காதல் திருமணம் அல்ல. பெற்றோர்கள் பார்த்துத்தான் ஏற்பாடு செய்துள்ளனர்.

நான் டைரக்டர் மணிரத்னத்தை 10 ஆண்டுகளுக்கு முன்னர் சந்தித்தேன். அதன் பிறகு அவரைப் பார்க்கவோ, பேசவோ எந்த சந்தர்ப்பமும் ஏற்படவில்லை. சமீபத்தில்தான் அவரை நான் சந்தித்தேன். எங்களுடைய திருமணம் முடிவு செய்யப்பட்ட பிறகு நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

எனது திருமணம்பற்றி தமிழ்ப்பட உலகில் எப்படி நினைக்கிறார்களோ எனக்குத் தெரியாது. ஆனால் தெலுங்குப் படவுலகில் அதை ஒரு பாதிப்பாகத் தான் நினைப்பார்கள். காரணம் தெலுங்கில் எனக்கு நல்ல பெயரும் புகழும் இருக்கிறது.

### நடிப்புக்கு முழுக்கா?

தற்போது தெலுங்கில் 5 படத்திலும், மலையாளத்தில் ஒருபடத்திலும், தமிழில் இரண்டு படங்களிலும் நடித்துக்கொண்டிருக்கிறேன். இவற்றை நடித்து முடிப்பதற்கு அடுத்த வருடம் மே மாதம் வரை ஆகும்.

அதற்குப் பிறகு தொடர்ந்து சினிமாவில் நடிக்கலாமா-வேண்டாமா? என்பது பற்றி இன்னும் நான் முடிவு செய்யவில்லை. நான் நினைத்தால் எதையும் செய்வேன். இதற்கிடையில் ஒரு மலையாளப் படத்தை நானே டைரக்ட் செய்யப்போகிறேன். படப்பிடிப்பு தொடர்ந்துஇருந்ததால் அதைத் தள்ளிப்போட்டுக்கொண்டே இருந்தேன்.

இனி திருமணத்துக்கு ஒரு மாதம் வீட்டிலேயே உட்கார்ந்து டைரக்ஷனுக்குரிய 'ஸ்கிரிப்ட்' வேலையைக் கவனிக்கலாமென்று இருக்கிறேன்.

ஒரு மாதம் ஓய்வு கிடைக்கப் போகின்றது. வீட்டில் இருக்கப்போகிறோம் என்பதை நினைத்தாலே ரொம்ப ஜாலியாக இருக்கிறது.



மணி ரத்னம்

### தேனிலவு

இப்போது எங்கள் திருமணம் மட்டும்தான் முடிவுசெய்யப்பட்டு உள்ளது. இனித் தேனிலவுக்காக நாங்கள் வெளிநாடு செல்வோமா என்பதை எல்லாம் அவரோடு (மணிரத்னம்) கலந்து பேசித்தான் முடிவு செய்யவேண்டும்.—

இப்படிச் சுஹாசினி தெரிவித்தார் (எ)

## அமைதிப் பேரணி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர் திரு எஸ். செல்வேந்திரா தலைமையிலான பிரமுகர்கள் குழு மேற்கொண்ட முயற்சியினால் கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

காலை முத்துமாரி அம்மன் ஆலயத்தைச் சுற்றி வளைத்த அமைதிப்படையினர் முகமூடிகள் சகிதமாக மக்களையும் சுலோக அட்டைகளையும் நோட்டமிட்டு விட்டு தமது வாகனங்களில் முகாமிற்குத் திரும்பினர்.

சுமார் இரண்டு மைல் நீளமான மக்கள்பேரணி மிக அமைதியாகச் சென்றதை வீடியோ படப்பிடிப்பாளர்களும், படப்பிடிப்பாளர்களும் படம்பிடித்துக் கொண்டனர். அவர்களுடன் அமைதிப் படையினரும் சேர்ந்துகொண்டு மக்களைப் படம்பிடித்துக் கொண்டனர்.

### குளிர்பானம்

பொலிகண்டி முகாமை வந்தடைந்த மக்கள் வெள்ளத்தின் ஒரு பகுதியினருக்கு அமைதிப் படையினர் பால் கலந்த குளிர்பானம் வழங்கினர்.

பொதுமக்கள் சார்பில் வல்வை பிரசைகள் குழுத்தலைவர் திரு. எஸ். செல்வேந்திராஅமைதிப் படை அதிகாரி கேணல் டவுண்டியாலிடம் பொது மக்கள் முன்னிலையில் மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

மகஜரைப் பெற்றுக் கொண்டு உரைநிகழ்த்திய கேர்ணல் டவுண்டியால் ''அமைதியான முறையில் நடைபெற்ற பேரணியை நான் பாராட்டுகின்றேன். மேலும் மக்களால் அளிக்கப்பட்ட மகஜரை மக்களுக்குச் சாதகமான முறையில் எனது விசேட சிபார்சுடன் இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைப்பேன்'' என்று உறுதி கூறினார்.

இதன்பின் ஊர்வலமாக வந்த மக்கள் திரும்பி நெடியகாட்டுப் பிள்ளையார் கோவிலில் ஒன்றுகூடி பொதுக் கூட்டமொன்றை நடத்தினர்.

### தடுத்தனர்

பருத்தித்துறையில் கற்கோவளத்தில் இருந்து புறப்பட்ட அமைதிப் பேரணி சிவன் கோயிலடியைச் சென்றடைந்தது.

திக்கம், சக்கோட்டை, சுப்பர்மடம் ஆகிய இடங்களில் இருந்து புறப்பட்ட ஊர்வலத்தை புலோலி ஓராம் கட்டைச் சந்தியில் வைத்து அமைதிப்படையினர் தடுத்தனர்.

பேரணிக்குத் தலைமை வகித்து வந்த திரு. க. சிவானந்தசுந்தரத்தை அமைதிப்படையினர் புலோலி முகாமிற்கு அழைத்துச்சென்று சில நிபந்தனைகளை விதித்து அதன்படி நடந்துகொண்டால் ஊர்வலமாகச் செல்ல அனுமதிப்பதாகக் கூறினார்கள்.

அதன்படி பேரணி மீண்டும் புறப்பட்டு சிவன் கோயிலைச் சென்றடைந்து அங்கு ஏற்கனவே தரித்திருந்த மக்களுடன் இணைந்து மாபெரும் ஊர்வலமாக பருத்தித்துறை அமைதிப் படை முகாமைச்சென்றடைந்தது.

அங்கு இரண்டு மகஜர்கள் அமைதிப்படை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

அதன்பின் பேரணியாகச்சென்ற மக்கள் மீண்டும் சிவன் கோவிலை அடைந்து பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தினர். (அ-160)

## பல்கலைக்----

(1ம்பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

பல்கலைக் கழக மாணவர்கள் தமது அறிக்கையில்'' நாம் ஊழல்களுக்கு எதிரானவர்கள் இதற்கு எதிராகப் போராட எச் சந்தர்ப்பத்திலும் தயங்க மாட்டோம்.

''இந்நிலையில் ஆயுதம் தாங்கிய இக் குழுவினரது நடவடிக்கைகள் ஊழல்களுக்கு எதிரான மாணவர்களது நியாயமான நடவடிக்கைகளுக்கு தடைக்கல்லாக அமைந்துள்ளது.

''எனவே இச்சக்திகள் அடாவடித்தனமான இதுபோன்ற நிகழ்வுகளை நிறுத்தி, சரியான அணுகுமுறையினூடாக பிரச்சினைகளை அணுகுவார்கள் என எதிர் பார்க்கிறோம்'' என்று கூறப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் ''இவ்வாறான சம்பவங்கள்மாணவர்கல்வியைத் தொடர்வதற்கும், பல்கலைக்கழகம் செவ்வனே தொடர்ந்து இயங்குவதற்கும் இடையூறாகவே அமையும்'' என்று உள்ளது. (ஒ-5)

## இளந்தமிழ்....

(1 ஆம்பக்கத்தொடர்ச்)

களையே அநேகமாக இந் நோய் பீடிக்கிறது.

டாக்டர் கயிலநாதன் பணிபுரியும் சுகாதார நிலையத்தில் சுமார் 25,000 நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர். கம்பியூட்டரின் உதவியில்லாமல் இத்தனை எண்ணிக்கையை டாக்டர்கயிலநாதன்சமாளிக்கிறாரென்றால் அது அவரின் திறமையையே எடுத்துக்காட்டுகிறது என்று விமர்சிக்கப்பட்டுள்ளது.

பரிசோதனைக்காக வரும் நோயாளிகளின் குடும்ப வைத்திய வரலாறு பற்றிக் கேள்விக் கொத்து ஒன்றின் மூலம் வேண்டப்படும் தகவல்கள் பெறப்படுகின்றன.

டாக்டர் கயிலநாதன் அவர்கள் கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவராவர். லண்டன் சென்ற். ஜோர்ஜ் வைத்தியக் கல்லூரியில் தனது வைத்திய படிப்புகளை மேற்கொண்டார்.

இவர் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த முன்னாள் கொழும்புப் பல்கலைக்கழக ஆராய்ச்சி அதிகாரியான திரு. நாகமுத்துவின் மூன்றாவது புதல்வர். முதலாவது புதல்வர் டாக்டர் ரவீந்திரநாதனும் லண்டனில் பணிபுரிகிறார். (அ-6)

## அந்தஉயர்.....

(1ம் பக்கத் தொடர்சி)

னர்.

பின்னர் ஒரு மணிநேரமாக நான் முகாமில் இருந்துவிசாரிக்கப்பட்ட பொழுது யாழ்ப்பாணத்தில் முன்னர் எனக்கு அறிமுகமான ஓர் இராணுவ அதிகாரி என்னை அடையாளம் கண்டுஎன்னுடன் தொடர்பு கொண்டார்.

பின்னர் எனது நிலையை அந்த இராணுவ அதிகாரிகளுக்கு விளக்கிக் கூறியபின் எனது பயணத்தைத் தொடர அனுமதி வழங்கப்பட்டது.

இப்படி அவர் தெரிவித்தார்.

இந்த உயர் அதிகாரி வேறு எவருமல்லர், மக்கள் வங்கியின் வட பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதேச முகாமையாளர் திரு. எம். கணேசசுந்தரம் ஆவார். (ஒ-9-10)

## இன்று நாவற்குழியில்

யாழ்ப்பாணம், ஜூன்25

நாவற்குழி கிழக்கு காந்தி சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் ஏழாவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் இன்று பாடசாலைமைதானத்தில் நடைபெறும்.

இலங்கை கிராமிய மீளமைப்பு நிறுவன ஆதரவில் நடைபெறும் இந்த நிகழ்ச்சிகளுக்கு சாவகச்சேரி உதவி அரச அதிபர் திரு. சுந்தரம் பிள்ளை பிரதம அதிதியாகக் கலந்து கொள்வர். (ஒ-க)

## சூட்டுக்---

)1ம்பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டன.

கந்தர்மடம் பாலகிருஷ்ணன் சுரேஷ்குமார், கந்தர்மடம் அன்னலிங்கம் பரமலிங்கம் ,ஓட்டுமடம்செல்லத்துரை யசோதரன் ஆகியோரது சடலங்களே யாழ். ஆஸ்பத்திரியில் வைத்து அடையாளம் காணப்பட்டன.

மற்றவரது சடலம் அடையாளம்காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

கொலைச் சம்பவங்களை அடுத்து உரும்பராய்ப் பகுதியில் இந்திய அமைதிப் படையினரின் சோதனை நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டிருந்தன, (ஒ-10)

## மல்லிகை ஜீவா மணிவிழா மலர்

யாழ்ப்பாணம், ஜூன் 25

மல்லிகை ஜீவா மணிவிழா மலர் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3மணி அளவில் நடைபெறும்.

யாழ் மின்சார நிலைய வீதியில் உள்ள பூபாலசிங்கம் புத்தகக் களஞ்சியத்தில் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு விழாவுக்கு டாக்டர் எம். கே. முருகானந்தம் தலைமை வகிப்பார்.

## நால்வர் மரணம்

பாகிஸ்தானில் உள்ள ஹைதராபாத் நகரில் ஏற்பட்ட இன மோதலில் நான்கு பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## மரண அறிவித்தல்

### றேகான் கஜானந்தன் தம்பையாபிள்ளை

றேகான் கஜானந்தன் தம்பையாபிள்ளை (மத்திய கல்லூரி மாணவன்) அகால மரணமானார். இவர் J. N. தம்பையாபிள்ளை (C. T. B. Jaffna,)மீனா (ST. Charles M. M. V. Jaffna,)வின் அருமை மகனும் நிரஞ்சன், டினேஸ், நிகாரு ஆகியோரது அருமைச்சகோதரரும் றெக்ஸ் தம்பையாவினதும் கமலா தம்பையாவினதும் பெரு மகனுமாவார். அன்னாரது இறுதி ஆராதனை மாலை 4-30 மணிக்கு 151, ஆஸ்பத்திரி வீதியில் நடைபெற்று துண்டி சென்ற் பீற்றர்ஸ் சேமக்காலையில் நல்லடக்கம் நடைபெறும். உற்றார், உறவினர் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;-

**J. N. தம்பையாபிள்ளை**
151, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (4545)

இப்பத்திரிகை நியு உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 25-06-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna Saturday 25th June 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்க நகைகளை கூடிய விலையில் விற்க நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கைக்குரிய ஸ்தாபனம்!
நியூ ஈழம் ஜுவல்லரி மாட்
இல. 423 (247) கே. கே. எஸ். வீதி. சிவன் கோவிலடி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:
இராஜகோபால் சந்திரன்

# சஞ்சீவி

25 - 6 - 1988 சனிக்கிழமை

தங்க நகைகளை கூடிய விலையில் விற்க நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கைக்குரிய ஸ்தாபனம்!
New Eelam Jewellery Mart
No. 423, (247) K. K. S. Road, Sivan Kovilady, Jaffna.
(சண்முகம் தேனீர்ச்சாலைக்கு அருகாமையில்)
Prop: RAJAKOPAL CHANDRAN.

## விஸ்வநாத் பிரதாப் சிங்கின் வெற்றி

# ராஜீவ்காந்தி தலைமைக்கு சவால்

கடந்த வியாழக்கிழமை இந்திய மாநிலங்களில் நடத்தப்பட்ட ஏழு லோக்சபை இடைத்தேர்தல்களில் பெரும்பாலானவற்றை ஆளும் இந்திரா காங்கிரஸ் கோட்டை விட்டது.

கோட்டைவிட்ட தொகுதிகளில் முக்கியமானது இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் முதலாவது பிரதமராகப்



இந்திராகாந்தி

பதவி ஏற்ற ஜவகர்லால்நேருவின் சொந்தத் தொகுதியான அலஹபாத் ஆகும்.

ஆசியஜோதி என்று அழைக்கப்பட்ட நேருஜியின் காலத்தில் இருந்து (ராஜீவ் காந்தியின் பாட்டனார்) அலஹபாத் தொகுதி காங்கிரஸ் கட்சியின் பலம் வாய்ந்த கோட்டையாகக் கருதப்பட்டு வந்தது.

தற்போது முதல்தடவையாக எதிர்க்கட்சியின் கைக்கு அது மாறி இருப்பது ராஜீவின் அரசியல் செல்வாக்குக்கு ஒரு சவால் ஆகும்.

அதுவும் காங்கிரஸ் அமைச்சரவையில் முக்கிய பதவியில் இருந்து—காங்கிரஸ் மீது ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி விட்டு வெளியேறிய ஒருவர் அலஹபாத்தில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகளால் வெற்றிவாகை சூடி உள்ளார்.

அவர் தான் வி. பி. சிங் என்று அழைக்கப்படும் விஸ்வநாத் பிரதாப் சிங்.

56 வயது நிரம்பிய வி. பி. சிங் இந்திரா காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட சுனில் சாஸ்திரியைத் தோற்கடித்துள்ளார்.

சுனில் சாஸ்திரி இந்தியாவின் இரண்டாவது பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் மகன். காங்கிரஸில் செல்வாக்குள்ளவர். பலம் வாய்ந்த ஒரு வேட்பாளராகக் கருதப்பட்டு அலஹபாத்தில் வி. பி. சிங்குக்கு எதிராக நிறுத்தப்பட்டார்.

### அரசியல் வீழ்ச்சி

வி. பி சிங்கின் வெற்றி பிரதமர் ராஜீவ் காந்தியின் அரசியல் வீழ்ச்சியின் ஆரம்பம் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆனால் ஆளும் கட்சி இடைக்காலத் தேர்தல்களில் தோல்வி காண்பது வழமையான நிகழ்ச்சி என்று தனது தென் இந்தியச்சுற்றுப் பயணத்தின்போது ராஜீவ்காந்தி கருத்துத் தெரிவித்துள்ளார்.

எது எப்படி இருந்தாலும் இந்திய அரசியலில் ராஜீவுக்கு ஒரு சவால் மனிதராக வி. பி. சிங் தன்னை உருவாக்கிக் கொண்டார் என்பதை எவரும் மறுக்க முடியாது.

### ஊழல் விவகாரம்

திருமதி இந்திரா காந்தியின் படுகொலையை அடுத்து 1984 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் வி. பி. சிங் இந்திரா காங்கிரஸ் சார்பில் மேல் சபைக்கு (ராஜ்யசபை) தெரிவு செய்யப்பட்டார்.

பின்னர் அவர் ராஜீவ் காந்தியால் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

கடந்த ஆண்டு ராஜீவ் காந்திக்கும் வி. பி. சிங்குக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றின.

சுவிடிஸ், மேற்கு ஜெர்மனி ஆயுதக் கொள்வனவில் இந்தியாவின் உயர்மட்ட அதிகாரிகள் பெருந்தொகைப் பணத்தைக் கமிஷனாகப் பெற்றார்கள் என்ற பெரிய ஊழல் குற்றச்சாட்டு ஒன்றை வி. பி. சிங் சுமத்தி இருந்தார்.

மிஸ்டர் கிளீன் என்று அழைக்கப்பட்டு வந்த ராஜீவை இந்தக் குற்றச்சாட்டு இக்கட்டான நிலைக்குள் தள்ளியது.

இதனை அடுத்து வி. பி. சிங் அமைச்சர் பதவியில் இருந்து வெளியேறினார். மக்கள் முன்னணி என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்தார்.

அந்தக் கட்சியின் வேட்பாளராகவே காங்கிரஸ் கோட்டையான அலஹபாத் தொகுதியில் அவர் போட்டியிட்டார்.



ராஜீவ்காந்தி

காங்கிரஸ் உறுதியாக இருந்து வந்தது.

### அருண் கோவில்

இந்திய ரெலிவிஷனில் தற்போது காண்பிக்கப்பட்டு வரும் இராமாயணத்தில் இராமர் கதாபாத்திரம் ஏற்றுள்ள அருண்கோவில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் சுனில் சாஸ்திரிக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பேசி வந்தார்.

பெரும் பாதுகாப்புடன் மோட்டார் பவனியில் தேர்தல் பிரசாரத்தில் சுனில் சாஸ்திரி ஈடுபட்டு வந்தார்.

இதற்கு எதிர்மாறு வி. பி. சிங் சாதாரண வெள்ளைப் பருத்தி உடையில் மோட்டார் சைக்கிளின் உதவியுடன் பிரசாரம் செய்தார்.

பெரும்பாலும் முழு எதிர்க்கட்சிகளும் இவருக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தன.

## உலக உலா

எஸ்.பி.சிவன்

1977 ஆம் ஆண்டுப்பொதுத் தேர்தலில் உத்தர பிரதேசத்தின் ரேபரேலி தொகுதியில் ராஜ்நாராயணிடம் இந்திரா காந்தி தோல்வி அடைந்த பின்பு காங்கிரஸின் தனிப்பட்ட பெரும் தோல்வியாக அலஹபாத் தோல்வி கருதப்படுகிறது.

அலஹபாத் தொகுதியில் எப்படியாவது வெற்றிபெற்று விட வேண்டும் என்பதில்

இவரின் வெற்றி 1989 ஆம் ஆண்டு இந்திய பொதுத்தேர்தலில் ராஜீவ் காந்திக்கு எதிரான பலம் வாய்ந்த அரசியல் தலைவராகச் சிலரை மாற்றுமா என்பது அடுத்த ஒருவருட கால அரசியல் சூழ்நிலையிலேயே தங்கி இருக்கிறது.

அலஹபாத்தில் வி. பி. சிங்கின் வெற்றி தற்போதைக்கு காங்கிரஸை அசைத்து விட முடியாது.

ஏனெனில் காங்கிரஸ் இன்றும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனேயே இருந்து வருகிறது.

தற்போது பிளவுபட்டுள்ள எதிர்க்கட்சிகள் எல்லாவற்றையும் ஒன்றிணைத்து அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் தன்னைப் பெரும் அரசியல் சக்தியாக மாற்றினால் மட்டுமே வி. பி. சிங் தனது அரசியல் எதிர் காலத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ள முடியும். ★

ஜனாதிபதி தேர்தல்:

## மூடுமந்திரமாக உள்ள தர்மிஷ்டரின் நிலை

# ஜூலையில் தான் நீங்குமா?

தர்மிஷ்டர் எப்போது வீடு மாறுவார்? தற்போதைய வீட்டிலேயே தொடர்ந்து இருக்க விண்ணப்பித்துக் கொள்ள அவர் அனுமதிக்கப்படுவாரா?

இக்கேள்விகளுக்கு இன்னும் விடை காணப்படவில்லை.

இன்னும் ஆறு மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றாக வேண்டும்.

இந்த நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் எதிர்க்கட்சிகளுக்கு அவ்வளவு சிக்கல் இல்லை.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை, தனது ஜனாதிபதி வேட்பாளராகச் சுதந்திரக் கட்சி அறிவித்து விட்டது.

ஐக்கிய சோஷலிச முன்னணியும் அதன் தலைவி திருமதி சந்திரிகா விஜய குமாரணதுங்காவைத் தெரிவு செய்திருக்கிறது.

வேட்பாளர் நியமனத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று இன்னும் திருமதி விஜயகுமாரணதுங்க பகிரங்கமாக அறிவிக்கவில்லை.

அம்மாவை எதிர்த்து அக்கா போட்டியிடமாட்டார் என்று தம்பி (அனுரா) வேறு நம்பி இருக்கிறார்.

இதன்மத்தியில் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடும் என்று அதன் தலைவர் அஷ்ரப் அறிவித்திருக்கிறார்.

மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸுக்கு குறிப்பிடத்தக்க அளவு வாக்குகளும் ஆசனங்களும் கிடைத்தன.

இது முஸ்லிம் காங்கிரஸ் தலைவரை இப்படிப்பேசவைத்துள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சூழ்நிலையில், ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதைத் தீர்மானிப்பதில் ஐக்கிய தேசியக் கட்சியினரிடையே பலத்த கருத்துவேற்றுமைகள் நிலவுவதாக அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகின்றது.

தர்மிஷ்டரின் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுத்தே வேட்பாளர் பிரச்சினைக்கு முடிவு காணவும், அதன் மூலம் கட்சி மோதலைத் தீர்க்கவும் தலைமைப்பீடம் தீர்மானித்துவிட்டதாக இன்னொரு தகவல் கூறுகிறது.

மீண்டும் தர்மிஷ்டரே! என்பதாக அந்த முடிவு அமையலாம் என்பதே கொழும்பு அரசியல் நிருபர்களின் கணிப்பு.

ஜனாதிபதி வேட்பாளரைச் சென்ற வாரமே ஆளும் கட்சி



ஜே. ஆர்.

யினர் தெரிவு செய்திருக்க வேண்டும்.

ஆனால் முடிவாகவில்லை. அடுத்தமாதம் 15 ஆம் திகதி நடக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள நான்கு நாடாளுமன்ற இடைத்தேர்தல்களின் முடிவுகளைப் பார்த்த பின்னர் தான் இதுபற்றி முடிவு எடுக்க தர்மிஷ்டர் விரும்புவதாக இன்னொரு செய்தி கூறுகிறது.

இதனிடையில் அமைச்சராக இருந்து ஆளுநராக மாறி

யின் கணிப்பு.

இதனிடையில் நாடாளுமன்ற இடைத்தேர்தல் பிரசாரத்தை எதிர்க்கட்சித் தலைவர் அனுரா ஆரம்பித்து விட்டார்.

சுதந்திரக்கட்சி பதவிக்கு வந்த ஒரு வாரத்தில் மாகாண சபை முறை ஒழிக்கப்படும் என்று அனுரா பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறிவிட்டார்.

மாகாணசபை முறை ஒழிக்கப்படுவதை வைத்தே சுதந்திரக் கட்சி இடைத்தேர்தலை நடத்தவிருக்கின்றது என்பது தெளிவாகி விட்டது.

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலுக்கும் நடக்கப்போகும் நாடாளுமன்ற இடைத்தேர்தலுக்கு வித்தியாசம் உண்டு.

மாகாணசபை முறையை ஆதரிக்கும் ஐக்கிய சோஷலிச அணி, ஐக்கிய தேசியக்கட்சி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவையே மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டன.

லிபரல் கட்சி மேற்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டாலும், மாகாண சபைக்கு எதிர்ப்பு என்பதை வெளிப்படையாகச் சொல்லவில்லை.

இந்த நிலையில் இடைத் தேர்தலில் போட்டியிடுவதின்று ஐக்கிய சோஷலிச அணி ஒதுங்கிவிட்டது.

மாகாணசபைத் தேர்தலில் பெற்ற வெற்றியை, இடைத் தேர்தல் முடிவுகள் பாதித்துவிடுமோ என்ற அச்சமோ தெரியவில்லை.

'நான்கு சுவர்' களுக்குள் இருக்கும் மக்களின் எண்

## உள்ளும் புறமும்

குறுமுனி

விட்ட திரு. இ. எல். பி. ஹுருள்ள புதிய கதை ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிந்தவுடன் இந்திய அமைதிப்படை திரும்பிவிடும்.

பின்னர் பொதுத் தேர்தலும் ஜனாதிபதித் தேர்தலும் சுமுகமான சூழ்நிலையில் நடத்தப்படும்—

இது ஆளுநர் ஹுருள்ளே

ணத்தை நான்கு இந்த இடைத்தேர்தல்களும் காட்டி விடாதா?

இப்படிக் கொழும்பு அரசியல் அவதானிகள் தெரிவித்திருக்கின்றனர்.

'ஹோமகம' போல் இந்த இடைத் தேர்தல்களும் புஸ்வாணமாகிவிட்டால்.........

பொதுத்தேர்தல் விரைவில் என்பது நிச்சயமானதாகி விடுமல்லவா! ★

யாழ். நகர வாசிகளே!

காலையில் எழுந்ததும் உதயன் வாங்குவதற்காகக் கடைக்குச் செல்கிறீர்களா?

உங்களுக்கு ஏன் அந்தச் சிரமம்?

உடனடியாக உதயசேவையில் சேர்ந்துவிடுங்கள்!

விடியும் வேளை உதயன் உங்கள் வீடு தேடி ஓடி வருவான்!!



உதயசேவை

இலவசம்! இலவசம்!!

யாழ். மாநகர பிரதேசத்திற்குள் வதியும் வாசகர்களுக்கு விநியோகக் கட்டணம் எதுவுமில்லை.

தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:
விநியோக முகாமையாளர்,
உதயன் / சஞ்சீவி
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## கடுகுக் கதை

# முற்பகல் செய்யின்......

கேற்றைத் திறந்து கொண்டு வேகமாக வருகிறாள் மங்களம். சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்த மாஸ்டர் சண்முகத்தின் முன்னால் தரையில் குந்தி இருந்த வண்ணம் தலையில் அடித்து அழத் தொடங்கினாள்.

மனைவியுடன் எதைப்பற்றியோ மிகவும் சுவாரசியமாகப் பேசிக்கொண்டு இருந்த மாஸ்டர் திடுக்கிட்டவராக,

மங்களம்... மங்களம்... உதேன் இப்படித் தலையில் அடிச்சு அடிச்சு அழுறாய்...? என்ன நடந்தது என்றுதான் சொல்லன்...? மங்களம் அழுகையினூடே,

ஐயா வாத்தியார்... நான் புருஷனில்லாதவள், மாட்டை வைச்சுப் பாலைக் கறந்து அதைத் தெருத் தெருவாக் கொண்டுபோய் வித்துத்தான் என் இரண்டு பிள்ளைகளையும் ஆளாக்கிறேன் என்றாள்,

''அது எனக்குத் தெரியும் அதுக்கு ஏன் இந்த அழுகை அழுகிறாய்...? பாடுபட்டால் தானே மனுஷன் முன்னுக்கு வரலாம்... என்று சொல்ல,

ஐயா, உங்க வீட்டுத்தோட்டக்காரன் என் மாட்டைப் பிடிச்சு வைச்சுக் கொண்டு இருநூறு ரூபாய் தந்தால் தான் மாட்டைத் தருவேன் என்று சொல்கிறான்.

வாத்தியாருக்குக் கோபம் மூக்கு நுனி வரை ஏறியது. சாய்மனைக் கதிரையை விட்டு எழுந்தவர் வேட்டியை மடித்துக் கட்டிய வண்ணம்,

ஓ...அது உன் மாடா... நீ ஏன் மாட்டை அவிட்டு விட்டாய்...? கச்சான் தோட்டத்தைப் போய்ப் பார்... பாதித் தோட்டத்தை உன் மாடு மேஞ்சு போட்டுது என்று விஸ்வாமித்திரர் போல துள்ளிக் குதித்தார்.

''நான் வேணும் என்று மாட்டை அவிட்டு விடவில்லை ஐயா... அது தானாக அறுத்துக் கொண்டு போய் விட்டது... நான் என்ன செய்ய...

- சித்திராவதி -

மங்களம் மன்றாடினாள்' ஆனால் மாஸ்டரோ, 'உதுக்கு நான் ஒண்டும் செய்ய முடியாது, நீ நல்ல கயிற்றில் கட்டியிருந்தால் மாடு எப்படி அறுக்கும்......? என்னவோ போய் அவனை மன்றாடிப் பார்...போ ...போ... என்றார் கோபமாக. ஆனால் மாஸ்டரின் மனைவி ராணி எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டும் பார்த்துக் கொண்டும் இருந்து விட்டு ஏன் உந்த அநியாயத்தைச் செய்யுறீங்கள்? அவள் அழுது கொண்டு போறாள்... ஒரு ஐந்து ரூபாய் என்றாலும் பரவாயில்லை, இருபத்தைஞ்சு ரூபாவுக்கு அவள் எங்கே போவாள்... அவள் என்ன வேண்டும் என்றா செய்தாள்? என்று நியாயத்தை எடுத்தியம்பினாள்.

அதற்கு மாஸ்டர்,

ஏன் உன்னட்டை இருந்தால் குடன், பைத்தியகாரி... போய் பார்க்கிற வேலையைப் பார். நான் ஒருக்கா சந்தையடி மட்டும் போட்டு வாறன்.

போன மாஸ்டர் பத்தாவது நிமிடம் ஓட்டமும் நடையுமாகப் பதறி அடித்துக் கொண்டு வருகிறார், வந்தவர் வாசல்படியில் ஏறியபடி,

எட...... அவன் வெள்ளையனுக்கு அவ்வளவு கொழுப்பே...... என்ரை இரண்டு மாட்டையும் பிடிச்சு வைச்சுக் கொண்டு இருநூறு ரூபாய் தந்தால்தான் விடுவானாம்'

கத்தியபடி நிற்கும் மாஸ்டரை நோக்கிய அவர் மனைவி ராணி

என்ன... மாடுகள் பிடிபட்டுட்டுதோ... நல்ல கயிற்றிலே போட்டுச் சரியாகக் கட்டவில்லையோ......

கேட்டதுக்கு மாஸ்டர்...

எட...... அதுகள் அறுத்துக் கொண்டு போட்டுதுகள்...... நான் என்ன செய்யிறது...... இப்ப 200 ரூபாய்க்கு எங்கே போறது......?

என்று அங்கலாய்த்தார். ஆனால் ராணி விடவில்லை. இப்பிடித்தானே அவள் மங்களமும் சொல்லி அழுதாள்... எல்லாம் தனக்குத் தனக்கு வந்தால் தான் விளங்கும்......

ராணியின் பேச்சைக் கேட்டும் கேட்காதவர் மாதிரி மாட்டைத் தேடிப் போகிறார் சண்முகம் மாஸ்டர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்கரவாகம்

ஈழத்தமிழுலகம் கண்ட சிறுகதை எழுத்தாளர்களில் முக்கியம் இடம் ஒன்றைப் பெற்றவர் இலங்கையர்கோன்.

வாழ்க்கையின் நுட்பமான உணர்ச்சிகளில் நுழைந்து நயம் காணும் ஆற்றல் நிறைந்தவர் என்று தமிழ்நாட்டின் தமிழறிஞர் கி.வா. ஜகந்நாதனால் பாராட்டப்பெற்றவர்.

பதினெட்டுவயதில் இலங்கையர்கோன் என்ற புனைபெயரில் எழுத்தாளராக மாறிய திரு. ந. சிவஞானசுந்தரம் ஈழத்துச் சிறுகதைத் துறை வளர்ச்சியில் தனது முத்திரையைப் பதித்துவிட்டு 1962 இல் மறைந்தார்.

சஞ்சீவி, புதுப்பொலிவுடன் வெளிவரும் இன்று அன்னாரின் சிறுகதை ஒன்றை முதலாவதாக வெளியிடுவதில் பெருமை அடைகின்றோம்.

'சக்கரவாகம்' என்ற இச் சிறுகதை, வெள்ளிப்பாதசரம் என்ற அவரின் சிறுகதைத்தொகுதியில் உள்ளது. இத்தொகுதி பல்கலைக்கழகத்தில் பாடநூலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது




கனவோ நனவோ என்று சொல்லமுடியாதபடி தெய்வானையின் உருவம் அவ்வளவு தெளிவாக வேலுப்பிள்ளையின் கண்ணெதிரில் மின்னிக்கொண்டிருந்தது. தன் உடலை அவனுக்கு முதன்முதல் அர்ப்பணம் செய்தபொழுது அவள் முகத்திலும் உடலிலும் காணப்பட்ட சோக, நாண நிகழ்ச்சி இப்பொழுது காணப்பட்டது. கைகளை நீட்டி அவளை அப்படியே அணைத்துக்கொள்ளவேண்டும்போல் வேலுப்பிள்ளைக்குத்தோன்றியது. அவனுடைய இடக்கைச் சுட்டுவிரல் மட்டும் மெதுவாக ஒருலயத்துக்கு அசைந்துகொண்டிருந்தது. உடலில் வேறு எவ்வித அசைவுமில்லை.

'வேலுப்பிள்ளை, நாடி நல்லாய் விழுந்து போச்சு; வயதுமோ பின்னிட்ட வயது; இன்னும் இரண்டு மணித்தியாலத்துக்குள் எல்லாம் முடிந்துபோய்விடும்; மனத்தைத் தேற்றிக்கொள்.'

இந்தக் கொடிய தீர்ப்பைத் தன் இளம் வயதுக்குரிய யோசனையின்மையோடு அனாயாசமாக வீசிவிட்டு அதன் விளைவைப் பார்க்கவிரும்பாதவன்போல வைத்தியன் சால்வையை உதறித் தோளிற் போட்டுக்கொண்டு வாசலைக் கடந்துவேகமாக நடந்தான். வேலுப்பிள்ளை அசந்துபோய்த் திண்ணையிற் சாய்ந்தான். மனத்தின் உந்துதல் இல்லாமலே அவனுடைய கை அருகிற் கிடந்த காம்புச் சத்தகத்தை எடுத்து இயந்திரம் போலப் பனை ஓலைச்சட்டங்களை வார ஆரம்பித்தது. உள்ளே அவள்-அவனுடைய மனைவி – வாங்குக் கட்டிலின் மேல் உடலில் பலம் எல்லாம் குன்றி, முகம் களையிழந்து கண்கள் பஞ்சாடிக்கிடந்தாள். எந்தக் கஷ்டமான வேலையாயினும் பின் வாங்காமல், நாற்பது ஆண்டுகளுக்குமேல் பம்பரம்போலச் சுழன்று கொடுத்த அவளது 'வரிச்சுத் தேகம்' இன்று அசந்துபோய்க் கிடந்தது. அவளுடைய பிராணன் கொஞ்சம் கொஞ்சமாகப் போய்க்கொண்டிருந்தது. அதை அறிந்துகொள்வதற்கு வைத்தியன் தேவையில்லை. வேலுப்பிள்ளையின் வீட்டில், அவனுடைய [illegible] கீழ் அவன் மனைவியினுடைய உயிரை யமன் கொஞ்சம் கொஞ்சமாக இழுத்துக் கொண்டிருந்தான். யமனுடைய [illegible] அறிந்தும் அவனைத் தடுத்துநிறுத்த முடியவில்லை.

அவளுடைய மக்களும் அறுவர் வாங்குக்கட்டிலைச் சுற்றி வளைத்துக் கொண்டு செயலற்று நின்றனர். அவளுக்கு-ஈன்று வளர்த்த அன்னைக்கு-சாவகற்ற உதவி செய்யத்தான் அவர்களால் முடிந்தது. ஒருத்தி நெஞ்சைத் தடவிவிட்டாள்; இன்னொருத்தி வாயில்பால் வார்த்தாள்...... யார் இருந்து என்ன?

அடுத்தவீட்டு அன்னமுத்து வண்ணான் கொண்டுவந்தபடி ஒரு சேலை உடுத்து, கழுத்தில் புதிதாக மினுக்கிய அட்டியலும், கையில் காப்புகளும், எண்ணெய் தேய்த்து வாரி முடித்த கொண்டை முதுகிற் புரள அசைந்து அசைந்து வந்தாள். வேலுப்பிள்ளைக்கு அவளைக்காண ஆத்திரம் வந்தது. 'சாகமுன்னுக்கே செத்தவீடு கொண்டாட வாறுள் இந்தத் தேவடியாள்!

'அம்மான் மாமிக்கு எப்படி?'

'அப்பிடித்தான் – போய்ப் பார்' என்று அலுத்துவிட்டு, வேலுப்பிள்ளை தன் புடலங்காய்போன்ற கால்களை மடக்கி நாடியின்கீழ் வைத்துக் கொண்டு மறுபடி தன்னுள் ஆழ்ந்தான்...

திடீரென்று நாற்பது வருடங்களுக்குமுன் தெய்வானை மணப் பெண்ணாய் முதன் முதல் 'தாறுபாய்ச்'சிச் சேலை உடுத்து மருளும் கரு விழிகளால் அவனையும் நிலத்தையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டு நாணிக்கோணி நின்ற காட்சி அவனுக்கு ஞாபகம் வந்தது. அன்றுமுதல் இன்று வரை அவன் அவளாய் அவன் அவளாய் ஒன்றுபட்டு, உழைப்பு நிறைந்த ஒரு கஷ்ட ஜீவனத்தின் ஒவ்வொரு அலுவலிலும் சமபங்கு எடுத்துக் கொண்டு வாழ்ந்த வாழ்வு!

காதல் என்ற வார்த்தை அவர்களுக்குத் தெரியாது. விவாகரத்து, கர்ப்பத்தடை முதலியவற்றைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டதே இல்லை. ஆனால் வாழ்க்கை, கொடிய வறுமையிலும் செம்மையாய், பிணக்குகள் தடி அடிச்சண்டைகளுக்கிடையிலும் ஆழ்ந்த அனுதாபமும் அன்பும் கொண்டதாய்ப் பூவுலக மோட்சமாய்ப் பரிசளித்தது... நாற்பது வருஷம் – நாற்பதுநாள்!

'அப்பு ஆச்சிக்கு ஒரு மாதிரிக் கிடக்கு, வந்து பாரெணை' என்று அவனுடைய இளைய மகள் பர்வதம் வாசலில் வந்து சொன்னாள்.

'ஐயோ! வந்திட்டுது, முடியப் போகுது' என்று நினைத்துக் கொண்டு வேலுப்பிள்ளை எழுந்து உள்ளே போனான். தெய்வானையின் கால்கள் நேராக நீட்டப்பட்டு, கைகள் மார்பின் மேல் பொருத்தப்பட்டிருந்தன.

சாவுக்கு ஆயத்தமாய் 'அன்னமுத்தியின் வேலை' என்று அவன் நினைத்தான். செயலற்றுக் கிடக்கும் மனைவியின் உடலை உற்றுப் பார்த்தான்... மூச்சு வேகமாக வந்து கொண்டிருந்தது. கழுத்துக் குழியில் ஏதோ படபடத்தது. 'ஐயோ ஐயோ' என்று அவன் உள்ளம் செயலற்று அலறியது. மறுகணம் தெய்வீ தெய்வீ என்று கெஞ்சியது...

தெய்வானையின் கண்கள் பாதி மூடியபடி கூரையில் பதிந்திருந்தன. அந்த காரமான இருட்கடலின் மத்தியில் எப்பொழுதோ இறந்து போன அவளுடைய தாயின் முகம் சொல்லொணு இளமையும் அழகும் கொண்டு புன்னகை புரிந்தது. அந்த இருட் கடலைத் தாண்டி அந்த முகத்தைப் பிடித்து விடவேண்டும் என்று தெய்வானை தவித்தாள். அவளுடைய ஒடுங்குஞ் சிந்தையில் ஏதோ அர்த்தமற்ற வார்த்தைகள் இடைவிடாது ஒலித்துக் கொண்டிருந்தன. 'ஆச்சி பூச்சி அம்பட்ட வளவில் முள்ளுச் சூப்பி... ஆச்சி பூச்சி'.

மூவுலகும் கொள்ளாத ஒரு கருணை தேங்கி நின்ற அன்னையின் முகம் தன்னுள் ஒரு ஒளி வட்டத்தையும் கொண்டு இருட்கடலைத் தாண்டித் தெய்வானையை நோக்கி வந்து கொண்டிருந்தது... 'ஆச்சி பூச்சி அம்பட்டவளவு'.

வேலுப்பிள்ளை தனக்குத் தெரிந்த திருவாசகத்தைப் பாட ஆரம்பித்தான். மனிதர் சாகும் தறுவாயில் தேவாரம் திருவாசகம் பாடவேண்டும் என்பது அவனுக்கு ஞாபகம் வந்தது.

'அம்மையே அப்பா...' அவனுடைய குரலிலே சிந்தமுடியாத ஒரு கண்ணீர்க் கடல் தேங்கிநின்றது.

தெய்வானைக்குத் தன்னை மறந்த ஒரு ஆனந்தம். 'ஆச்சி பூச்சி, ஆச்சி பூச்சி...!' இதோ அன்னை மிக அருகில் வந்துவிட்டாள். இருட்கடல் மறைந்து முழுவதும் ஒளிக்கடலாயது. 'ஆச்சி ஆச்சி-என்ர ஆச்சி' அன்னையின் கண்கள் தெய்வானையை அகன்று மருட்டி அழைத்தன... இதோ...

'ஆச்சி!-'

'என்ர ராசாத்தி போட்டியோ!' என்று வேலுப்பிள்ளை புரண்டழுதான்.

'ஆச்சி ஆச்சி' என்று மக்கள் கதறினர். அன்னமுத்துத்தான் மனப்பாடம் செய்து வைத்திருந்த ஒப்பாரி வரிசைகளைக் கண்ணீர் இல்லாமல் ராகத்துடன் எடுத்து விட்டாள்.

தெய்வானைக்கு அறிவு தெளிந்தபொழுது திடீரென்று விலங்குகள் தெறித்து; சிறைச்சாலைக் கதவுகள் தகர்ந்து விடுதலை கிடைத்து விட்டது போலத் தெரிந்தது. ஆ! என்ன விடுதலை! அவள் தான் நினைத்த படி மனோவேகமாக எங்கும் போகமுடிந்தது. அவளுடைய உடல் காற்றாகி விட்டதோ? அல்லது உடலே இல்லையோ? அவளுக்கு இரவு பகல் தெரியவில்லை. அவளுக்குக் குன்றாத இளமையும், வற்றாத ஊக்கமும், எதையும் கிரகித்தறிந்து கொள்ளும் அசுன்ற மனமும் வாய்த்து விட்டது போலத் தெரிந்தது. தன்னுள்ளே ஒரு எல்லையற்ற ஆனந்த சுதந்திர உணர்ச்சி ததும்பி வழிந்து கொண்டிருந்தது.

எண்ணரிய யோசனை தூரத்திற்கு அப்பால், பூவுலகில் இருந்து ஒரு தீனமான குரல் அவளுடைய இன்பத்தினிடையில் வந்து புகுந்து அவளுடைய நிம்மதியைக் குலைத்தது. 'தெய்வி, தெய்வி' என்று அலறும் அந்தக் குரலில் நிறைந்திருந்த நம்பிக்கை இழந்த ஏக்கம் அவளுக்குப் பூவுலக வாசனையை ஊட்டி,

**- இலங்கையர்கோன் -**

பிரிவுத்தாகத்தைத் தோற்றுவித்தது. தன்னுடைய கணவன் துணையிழந்து நாதியற்றுக் கலங்குகின்றான், தன்னை நினைந்து ஏங்குகின்றான் என்பது அவளுடைய பரந்த மனத்தில் தெளிவாகப் பட்டது. ஓடிப்போய் அவனை அணைத்துக்கொள்ள வேண்டும் என்று அவள் உள்ளம் துடித்தது. ஆனால் அவளால் அவனை அணுகமுடியவில்லை. அவன் மனித உடற்பிணிப்பிலே கட்டுண்டு கிடந்தான்.

கனவுகளில் மட்டும் அவன் தன்னை அறிந்துகொள்ளும்படி செய்யமுடிந்தது. ஆனால் அவைகளினால் அவளுடைய தாகம் அடங்கவில்லை. வைக்கோல் அடைத்த உயிரற்ற கன்றின் உடலைக்கண்டு இரங்கும் பசுப்போல் ஒரு ஊமைத் துயரம் அவளை வாட்டியது: அவன் என்று தன்னுடன் வருவான் என்பதே அவளுக்குச் சதா ஆவல். அவனது துணையின்றி எந்த இன்பமும் நில்லாது என்று அவள் கண்டு கொண்டாள்.

தெய்வானை இறந்ததினத்தில் இருந்து வேலுப்பிள்ளை வாழ்விலே பிடிப்பை இழந்து விட்டான்.

'தெய்வி, தெய்வி' என்று உள்ளூர எந்நேரமும் அலறிக் கொண்டிருந்தான். அவளுடன் தான் வாழ்ந்த வாழ்க்கையை முதலில் இருந்து நினைத்து நினைத்து ஏங்குவதே அவனுக்குத் தொழிலாய்ப் போய்விட்டது. 'தெய்வி, தெய்வி' —இடையிடையே அவளைக் கனவிற் கண்டு படிப்படியாக அவன் ஏக்கம் அதிகரித்தது.

'அப்பு என்னோடை வந்த கொஞ்சாளைக்கு இரேன். எனக்கும் துணையாய் இருக்கும்; உனக்கும் பிராக்காய் இருக்கும் என்று அவனுடைய இரண்டாவது மகள் வள்ளியம்மை அழைத்தாள். இடம் மாறினால் ஒருவேளை அவனுடைய ஏக்கம் குறையலாம் என்று அவள் நினைத்தாள்.

'வேண்டாம் மேனே, நான் இங்கினைதான் கிடக்கப் போறேன்' என்று அவன் மறுத்துவிட்டான்.

நாளடைவில் அவன் எதிலும் பற்று அற்று ஒரு நடைப் பிணம் ஆகிவிட்டான்... மூன்று மாதகாலத்திற்குள் அவனுடைய அறுபது வயது தொண்ணூறு வயதாகிவிட்டது...

'கிழவன் படுக்கையாய் விழுந்துட்டுது, அதுகும் போகப்போகுதுபோலை' என்று அன்னமுத்து தன்கணவனுக்குச் சோறு பரிமாறிக் கொண்டேசொன்னாள்.

'ஓமாக்கும். என்ன இருந்தாலும் கிழவனும் கிழவியும் நல்ல ஒற்றுமையாய் இருந்தவ...' என்று பொன்னம்பலம் இழுத்தான்.

வேலுப்பிள்ளை பிரக்ஞை இல்லாமல் அதே வாங்குக் கட்டிலிற் கிடந்தான். அவனுடைய மக்கள் அறுவரும் மீண்டும் வந்து கூடினர். சாத ஜன்னி—தள்ளாத வயது; இன்றோ நாளையோ' என்று வைத்தியன்கையை விரித்து விட்டான். அன்னமுத்து கழற்றி வைத்திருந்த அட்டியலை மினுக்கி அணிந்து கொண்டுவந்து சேர்ந்தாள்.

கனவோ நனவோ என்று சொல்லமுடியாதபடி தெய்வானையின் உருவம் அவ்வளவு தெளிவாக வேலுப்பிள்ளையின் கண்ணெதிரில் மின்னிக்கொண்டிருந்தது. தன் உடலை அவனுக்கு முதன்முதல் அர்ப்பணம் செய்தபொழுது அவள் முகத்திலும் உடலிலும் காணப்பட்ட சோக நாண மகிழ்ச்சி இப்பொழுது காணப்பட்டது. கைகளை நீட்டி அவளை அணைத்துக் கொள்ள வேண்டும்போல் வேலுப்பிள்ளைக்குத் தோன்றியது. அவனுடைய இடக்கைச் சுட்டுவிரல் மட்டும் மெதுவாக ஒரு லயத்துக்கு அசைந்து கொண்டிருந்தது. உடலில் வேறு எந்தவித அசைவுமில்லை.

அவனுடைய இளையமகன் ராமலிங்கம் திருவாசகம் பாடினான். வள்ளியம்மை திருநீற்றை அள்ளி வேலுப்பிள்ளையின் நெற்றியிற் பூசினாள்...

சட்டென்று வேலுப்பிள்ளையின் கண்ணெதிரில் கோரமான இருள்சூழ்ந்தது. தெய்வானையைக் காணவில்லை. அவன் வாய்விட்டு அலறினான்.

'தெய்வி—!' என்றும் ஒரு பாய்ச்சலில் இருட்கடலைத் தாண்டி விட்டான்!

அவனுடைய பெண் மக்கள் 'அப்பூஊ! அப்பூஊ!, என்று அலறினர் அன்னமுத்து சாவதானமாகப் பிணத்தின் கால்களை நீட்டிப் பெருவிரல்களைச் சேர்த்துக் கட்டிவிட்டு,'கண்டியிலே காத்தடிக்க. கைவிளக்கு நூந்ததல்லோ ஓஓஓ!'—என்று ஆரம்பித்தாள். ★

ஈழம் வாழ் மக்களுக்கு
ஓர் நற்செய்தி!!

சென்னை மவுண்றோட் புதிய ஜெமினி கொம்பிளக்ஸ்ஸில் அமைந்துள்ள

சாயி ரவல்ஸ்
அன் ரூர்ஸ்

நிறுவனத்தார்
யாழ் மக்கள் நன்மை கருதி இப்போது 24/1 இல் சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ் கிளை ஸ்தாபனத்தை அமைத்துள்ளார்கள்.

★ சத்திய சாயிபாபாவின் நேரடித் தரிசனம் பெற விரும்புகின்றீர்களா?
நேரடித்தரிசனமும், ஆசீர்வாதமும் பெற்றபின்! புனித ஸ்தலங்களை தரிசிப்பதற்கும் அரிய சந்தர்ப்பம் அளிக்கின்றார்கள்.
★ CANADA செல்வதற்கும் ஒழுங்குசெய்யப்படும்.

சாயி ரவல்ஸ்
அன் ரூர்ஸ்
24/1 பெரியகடை வீதி
பெரியகடை, யாழ்ப்பாணம்.
(அலோசியஸ் ரெக்ஸ்ரைல்ஸ் அருகில்)
தலைமை அலுவலகம்:

சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்
33, 1ஆம் மாடியில் ஜெமினி ஸ்ருடியோ
புதிய ஜெமினி கொம்பிளக்ஸ்
602, மவுண்ட்றோட்,
சென்னை 6006
தமிழ்நாடு.
தொலைபேசி: 475382. (-C5124)

# அருமருந்தாகும் சிறுகுறிஞ்சா

சிறுகுறிஞ்சாவைப் (Gymnema Sylvester) பயன்படுத்தி 1985 ஆம் 1987 ஆம் ஆண்டுகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் நல்ல விளைவுகளைத் தருவனவாக அமைந்துள்ளன.

இவ் ஆய்வுகளிற்கு ஆரம்பக் கட்டநிலையில் உள்ள நோயாளிகளே பயன்படுத்தப்பட்டனர்.

சாதாரண குருதி வெல்லமட்டம் 50—90 மில்லிகிராம் 100 மில்லிலீட்டராக இருந்த போதும் இந்நோயாளிகளின் குருதி, வெல்லமட்டம் மிக உயர்வாக இருக்கக் காணப்பட்டது. சிறுகுறிஞ்சாவைப் பயன்படுத்தி இவர்களின் வெல்லமட்டம் 20 நாட்களுக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

சிறுகுறிஞ்சா உடலினுள் எவ்வாறு தொழிற்படுகின்றது. இதன் பக்க விளைவுகள் யாவை என்பதுபற்றி இன்னமும் சரியான முறையில் அறியப்படவில்லை. ஆனால் 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் சென்னைப்பல்கலைக்கழகத்தில் ராதா சண்முகசுந்தரமும் அவரது குழுவினரும் எலிகளில் மேற்கொண்ட ஆய்வில் சதையச் சுரப்பியில் [illegible] கின்ற இன்சுலினைச் சுரக்கின்ற கலங்களின் எண்ணிக்கை சிறு குறிஞ்சாவைக் கொடுப்பதன் மூலம் கட்டுப்படுத்துகின்றது. எனக் காட்டப்பட்டுள்ளது.

சிறுகுறிஞ்சா தமிழ் வைத்தியத்துறையில் பயன்படுத்தப்பட்டு வருவதாலும், மக்கள் தம் சாதாரண உணவில் கூட இதனைப் பயன்படுத்துவதாலும் இதன் பக்கவிளைவுகள் பாதிக்கக்கூடியதாக இருக்காதென நம்பலாம். நாம் பயன்படுத்திய நோயாளிகளிலும் எதுவித பக்கவிளைவுகளும் அவதானிக்கப்படவில்லை.

இவ்வாறு சிறுகுறிஞ்சாவின் நல்ல விளைவுகளைப்பற்றி 1981

**- கே. குலநாயகம் -**

ஆம் ஆண்டே எடுத்துக் காட்டப்பட்டிருந்தாலும், அது குறித்துத் தொடர்ந்து ஆய்வுகள் நடத்தப்பட்டு, பெறுபேறுகள் வெளிவருவதாகத் தெரியவில்லை. வளர்ச்சி அடைந்தநாடுகளில் இம்மரம் காணப்பட்டிருப்பின், இதுவரையில் வைத்தியத்துறையில் இஃது பிரபல்யம் அடைந்திருக்கக்கூடும். இதற்குச் சிறந்த உதாரணம் அஸ்பிரின் ஆகும். இன்று பெருமளவில் வைத்தியத்துறையில் பயன்படுத்தப்படும் இம் மருந்து ஆரம்பத்தில் தாவரத்தில் [illegible] எடுத்து பல்கலைக்கழகத்தில் [illegible] தொடர்ந்து இது தொடர பானஆய்வுகளை மேற்கொள்ள உயிர் இரசாயனவியற் பகுதி முன் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. சிறுகுறிஞ்சா மரங்கள் எமது பகுதிகளில் காணப்படுகின்ற போதும், இவை பெருமளவில் காணப்படாதமை துர் அதிஷ்டமே. பெரும் குறிஞ்சா எனப்படும் கொடி பற்றைகள் தோறும் மண்டிக்கிடந்தாலும், சிறுகுறிஞ்சா அரிதாகச் சில வீடுகளிலேயே வளர்க்கப்படுகின்றது. அங்குகூட இலைகளைப் பெறுவது சிரமமாக உள்ளது. ★

## உறக்கமும் உடல்நலமும்

விழித்திருக்கும்போதைவிட தூங்கும்போதே உடல் நலம் மிகவும் தேறுகிறது. நோய்கள் குணமடைகின்றன. தூங்கும் போது செல் பிரிவும், புரோட்டின் இணைப்பாக்கமும் உச்ச நிலையை அடைகின்றன. ஆனால் விழித்திருக்கும் போதோ அவை மிகமிகக் குறைந்துவிடுகின்றன என்று ஸ்காட்லாந்திலுள்ள ராயல் எடின்பரோ மருத்துவமனையில் பணிபுரியும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். நோயாளிகளுக்குத் தூக்கம் மிக அவசியம்.

தொகுப்பு:-
க. கனகராசா

31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



திரு. பெரியதம்பி நமசிவாயம்
(ஆறுமுகம்)
(புங்குடுதீவு – 8)

தோற்றம்: 17-1-1905 மறைவு: 26-5-1988

எம்மை ஏற்றமுடன் வாழவைத்து என் கடமை முடிந்ததென எங்கே சென்றனையோ. நன்றிக்கடனாக உங்களின் ஆத்மா சாந்தி அடைவதற்காய். இறைவனிடம் கையேந்தும்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்.
(4808)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு என தனியான கலைக்கூடம்

அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் வாழும் கோடீசுவரப் பெண்மணி ஹல்ஹெல் மினுகோலஹாலடே.

இவர் தமது கணவருடன் ஐரோப்பாவில் சுற்றுப்பயணம் செய்தார். அங்குள்ள கலைக் காட்சியகங்களில் பெண்களின் படைப்புகளுக்குப் போதிய இடம் அளிக்கப்படாததை அப்போது கண்டார்.

அதைத் தொடர்ந்து வாஷிங்டனில், பெண் கலைஞர்களுக்கான தேசிய கலைக் காட்சியகத்தை நிறுவினார். உலகின் பல நாடுகளில் இருந்து அவர் திரட்டி வைத்திருந்த 300 க்கும் மேற்பட்ட கலைப்படைப்புகளையும் இந்தக் காட்சியகத்துக்கு நன்கொடையாக வழங்கினார்.

வாஷிங்டனில் வெள்ளை மாளிகைக்கு அருகில் உள்ள சதுக்கத்தில் இந்தக் கலைக் கூடம் அமைக்கப்பட்டு கம்பீரமாகக் காட்சி தருகிறது.

பெண் கலைஞர்களின் கலைப் படைப்புக்களை வைப்பதற்கு என்றே தனிப்பட்ட முறையில் இத்தகைய கலைக்காட்சியகம் அமைக்கப்பட்டு இருப்பது உலகிலேயே இதுதான் முதல் தடவை எனக் கருதப்படுகிறது.

16 ஆம் நூற்றாண்டு முதல் 20 ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்திய ஓவியம், சிற்பம், புகைப்படக்கலை போன்ற பல்வேறு கலைத்துறைகளில் உலகின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த பெண் கலைஞர்களின் சாதனைகளை எடுத்துரைக்கும் 500க்கும் மேற்பட்ட கலைப் படைப்புகள் இங்கு நிரந்தரமாகக் காட்சிக்கு வைக்கப்பட்டு உள்ளன. ★

## வாழ்க்கை என்பது பாருங்கல் அதை விளக்க ஒரு போட்டி!

இந்தியாவின் கோவா மாநிலத்தில் மகாநந்தி கோயில் உண்டு.

அதைச்சுற்றி அடர்ந்த காடுகள்.

குண்டக்கல்— விஜயவாட ரயில்பாதையில் காசுல பள்ளியில் இருந்து ஐந்து கிலோ மீட்டரில் மகாநந்தி கோவில் உள்ளது.

அங்குள்ள ருத்ரகுண்டத்தில் நீராடினால் எல்லா வியாதிகளும் தீர்ந்து விடுகின்றன என்று ஸ்கந்தபுராணத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

மகா சிவராத்திரிவிழாவின் போது கனமான கற்களை இழுப்பது என்பது ஒரு போட்டியாக நடத்தப்படுகிறது. இப்போட்டியைக் கோவில் நிர்வாகமே நடத்துகிறது.

ஜோடி மாடுகள் கனமான கல்லை இழுக்கும். எந்தஜோடி கூடிய தூரம் இழுக்கிறதோ அதற்கு முதற்பரிசு. இரண்டாவது அதிக தூரத்தை இழுக்கும் ஜோடிக்தும் பரிசு உண்டு.

வாழ்க்கை என்பது பாறுங்கல் அதை இழுத்துப்போவது சுலபமல்ல.

கணவனும் மனைவியும் மாட்டைப்போல் வாழ்க்கையை இழுக்கவேண்டும் என்பதை உணர்த்தவே ஆலயநிர்வாகம் இந்தப்போட்டியை நடத்துகிறது. ★

## சுவரில் 'பல்லி' போல் ஏறும் இயந்திர மனிதன்


சுவரில் பல்லியைப் போல் ஊர்ந்து ஏறும் இயந்திர மனிதனை சோவியத் யூனியன் தயாரித்து விட்டது.

இந்த இயந்திர மனிதன் 3 அடி உயரம் 14 கிலோ எடை உள்ளவன்.

உலோகத்திலான இவனின் நான்கு கால்களும் (Vaccum) வெற்றிடம் முறையில் வேலை செய்கின்றன. சுவரை உறுதியாகப் பற்றிக்கொண்டு ஏறுகின்றன.

30 கிலோ எடையைத் தூக்கவல்லது இந்தப் பல்லிடைப் இயந்திர மனிதன்.

வானளாவிய கட்டடங்களில் படிந்துள்ள தூசி குப்பைகளை அகற்ற 'பல்லி' இயந்திர மனிதனை மேலைநாடுகள் பயன்படுத்தப் போகின்றன. ★



## முட்டைமீதுநடந்து சாதனை.....!

முட்டை மீது உடையாமல் நடக்க முடியுமா? முடியும் என நிரூபித்து இருக்கிறார் 73 கிலோ எடையுள்ள சாம்யாஸ் என்ற தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த உடற்பயிற்சி ஆசிரியர்.

இவரது முந்தைய சாதனையை உடைப்பதற்கு, மீண்டும் முட்டை உடையாமல் அதன் மீது நடந்தார்.

இருப்பினும் டி. வி. நிகழ்ச்சிக்காக இவர் 10 அடுக்கு முட்டைகள் கொண்ட டிரேஸ் மீது நடக்கும் முயற்சியில் தோல்வி அடைந்தார். 30 முட்டைகள் கொண்டது ஒவ்வொரு அடுக்கும். இதில் முதல் நான்கு அடுக்கு மீது முட்டைகள் உடையாமல் நடந்த இவர், ஐந்து, ஏழு, பத்தாவது அடுக்கு மீது நடக்கும் போது சில முட்டைகள் உடைந்தன. மீண்டும் மனம் தளராமல் தனது சாதனையை செய்து முடிப்பேன் என்கிறார் இவர்.

கல்லில் நார் உரிக்கலாம், மண்ணைக் கயிறாகத் திரிக்கலாம் என்றால் முட்டை உடையாமல் அதன்மீது நடப்பது என்பது பெரிதா என்று நீங்கள் கேட்கலாம்.

சாம்யாஸ் படத்தில் நடந்து காட்டுவதைப் போல் நடந்து பாருங்களேன். ★

## சூரிய கடிகாரம்

மேற்கு ஜெர்மனியில் உள்ள பிளாக் ஃபாரஸ்ட் என்ற நிறுவனம் தயாரித்துள்ள ஒரு கடிகாரம் சூரிய ஒளிச் சக்தியால் இயங்குகிறது.

உலகிலேயே மிகச் சரியான நேரம் காட்டும் கடிகாரமாகவும்இதனைக் கொள்ளலாம். ஏனென்றால், சுமார் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் இதன் நேரத்தில் ஒன்றிரண்டு வினாடிகள் வித்தியாசம் ஏற்படும்.

அதிக சக்திவாய்ந்த ஐம்பத்தெட்டு சூரிய செல்களைக் கொண்ட இக்கடிகாரம் நேரம் போன்ற தகவல்களை ஃபிஸிக்கல் டெக்னிக்கல் இன்ஸ்டிடியூட்டில் உள்ள அணுசக்திக் கடிகாரம் அனுப்பும் காலசைகைகளை (டைம் சிக்னல்ஸ்) ரேடியோ அலைகளின் வாயிலாக பெற்றுக் கொள்கிறது. ★

## உங்களுக்குத் தெரியுமா?

(1) ஒட்டகம் 30 நாட்கள் வரை நீரின்றி இருக்கும்.

(2) ஆமைகள் 300 ஆண்டுகள் வரையிலும், முதலைகள் 150 ஆண்டுகள் வரையிலும் உயிர் வாழ்கின்றன.

3) ஒரு கொசுவின் வாழ்நாள் 3 வாரங்கள் தான்.

(4) ஈமி என்னும் பறவை வேகமாக ஓடுமே தவிர அதனால் பறக்க முடியாது.

(5)பாம்பு, கண்ணையே செவியாக்கிக் கொள்ளும் அதற்கு தனியே செவிகள் இல்லை. அதனால் தான் அதைக் 'கட்செவி' என்று கூறுவர்.

(6) புழுக்களில் 289வகைகள் உள்ளன. ஒன்றிரண்டு வகையைத் தவிர மற்ற யாவுமே சைவ உணவை உண்ணும். உப்பு, புழுக்களுக்கு அதிகமாகப் பிடிக்கும்.

(7) அட்டைப்பூச்சிகள் ஒரு தடவை ரத்தம் உறிஞ்சி விட்டால் ஒரு ஆண்டு வரை உணவு இல்லாமல் இருக்கும்.

(8) நமது உடலில் ரத்தம் 22 விநாடிகளுக்கு ஒரு முறை சுழன்று வருகிறது.

(9) நாம் ஒரு வார்த்தை பேசும்போதுமட்டும் நம் முகத்தில் 72 தசைகள் அசைகின்றன. ★

## மரகதக்கல் ரூபா 5கோடிக்கு ஏலம்

மொகலாய மன்னர் காலத்தைச் சேர்ந்த இரண்டு மரகதக் கற்கள் சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனிவா நகரில் ஏலம் விடப்பட்டன.

இரண்டு மரகதக்கற்களும் ஐந்து கோடி ரூபாவுக்கு ஏலம் போயிற்று. ★

## 8- 8- 88 திருமணத்துக்கு ராசியான திகதியாம்!

இந்த ஆண்டு வரும் ஆகஸ்ட் 8 ஆம் திகதியை சிங்கப்பூர் வாசிகள் அதிஷ்ட தினமாகக் கருதுகிறார்கள்.

எதற்கு என்று எண்ணுகிறீர்களா! திருமணத்திற்குத்தான்.

8—8—88 என்று வரும் அந்தத் திகதியில் 4 எட்டு இலக்கங்கள் உள்ளன.


எட்டு என்ற உச்சரிப்பு அவர்கள் மொழியில் 'வளமை' என்ற பொருளைத் தருகிறதாம்.

அன்றைய தினம் திருமணஞ் செய்து கொள்வதற்கு இப்பொழுதிருந்தே கல்யாண மண்டபங்கள், ஹோட்டல்கள் எல்லாம் 'புக்' செய்யப்பட ஆரம்பித்து விட்டன.

சிங்கப்பூர் திருமணப்பதிவு அலுவலகத்தில் ஒரே நாளில் 90 ஜோடிகளுக்கு மட்டுமே திருமணஞ் செய்து வைக்க முடியும். இந்த 90 திருமணங்களும் ஏற்கனவே பதிவாகி விட்டன.

இடம் கிடைக்காத 100க்கு மேற்பட்ட ஜோடிகள் ஒரு ஹோட்டலில் ஒரே நேரத்தில் திருமணஞ் செய்து கொள்ள ஏற்பாடு செய்துள்ளன.

நாள் நெருங்க, நெருங்க இன்னும் எத்தனை ஜோடிகள் இடம் தேடப் போகின்றனவோ! ★



## ஆதி மனிதன் கைகளால் நடந்தானா?

ஆதி மனிதன் எப்படி நடந்தான்?

இது பற்றி உலக விஞ்ஞானிகள் மத்தியில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

கைகளைத்தரையில் ஊன்றி, விலங்குபோல் நடந்து இருக்கலாம் எமது மூதாதையர்கள் என்ற கருத்துத்தான் இதுவரை காலமும் ஆராய்ச்சியாளர் மத்தியில் நிலவி வந்தது.

இப்போது பிரிட்டிஷ் விஞ்ஞானி ஒருவர் இதற்கு மாறுபட்ட கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

டீட்டர் விலர் என்ற இந்த விஞ்ஞானி லிவர்பூல் தொழில் நுட்பக் கல்லூரியில் பணியாற்றுகிறார்.

அவர் கூறுவதாவது;

"அடர்ந்த காடுகளை விட்டு வெளியே வரும் ஆதி மனிதன் வெயில் தனது உடல் முழுவதிலும் படுவதைத் தவிர்ப்பதற்காகவும் கைகளுக்கு விடுதலை கொடுத்து, அவற்றுக்குப் பயனுள்ள வேறு வேலை கொடுப்பதற்காகவும் நிமிர்ந்தே நடந்து இருக்கிறான்.

அவனது பரிணாம வளர்ச்சிக்கு முதல்படி இது தான்—

இப்படி அந்த விஞ்ஞானி கூறுகிறார். ★

## பம்பாயில் மட்டும் $4\frac{1}{2}$ கோடி எலிகள்

பம்பாய் நகரில் எலி, பெருச்சாளிகளின் ஆதிக்கம் அதிகமாகி விட்டது.

மக்கள் தொகை 90 லட்சம். ஆனால் எலி, பெருச்சாளிகளின் மொத்த எண்ணிக்கை 4 கோடியே 50 லட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.



அவற்றை ஒழிக்கக் கல்சியம் சயினைட் என்ற ரசாயனப் பொருள் தேவைப்படுகிறது.

பம்பாயில் உள்ள எலி, பெருச்சாளிகளை ஒழிக்க மட்டும் ஆண்டுக்கு 5 தொன் கல்சியம் சயினைட் தேவைப்படுகிறது.

அதைக் குறைந்த விலையில் வாங்க மேற்கு ஜேர்மனியுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

அங்கிருந்து கல்சியம்சயினைட் வரும் வரை, பம்பாய் பெருச்சாளிகளுக்கு கொண்டாட்டம் தான். ★

## மனித 'மாமலை'

படத்தைப்பார்த்தவுடன் சட்டென நீங்கள் நினைப்பது சரிதான். உலகின் மிகக் குண்டான மனிதர் இவர்தான். இவர் ஒரு நியூயார்க் வாசி. பெயர் எட்வர்ட். இவரின் எடை 554 கிலோ. இடைச் சுற்றளவு 9 அடி மட்டுமே. சராசரி மனிதர்களைப் போல் இவரால் நடக்கவோ, உட்காரவோ முடியாது. படுத்த படுக்கைதான். இவரின் மற்ற உறவினர்கள் எல்லாம் நம்மைப் போல் சராசரி மனிதர்கள்தான்.

ஒருசமயம் படுக்கையை விட்டு எழுந்து நடக்கிறேன் என்று மெள்ள நடந்து வந்து படுக்கையறை வாயிலில் மாட்டிக் கொண்டார். உள்ளேயும், வரமுடியாமல், வெளியேயும் போகவும் முடியாமல் இவர் சிக்கித்திணற வேறு வழியில்லாமல் தீயணைக்கும் படைக்கு போன் செய்து அவர்கள் வந்து நிலைவாசற்படியை அறுத்து எடுத்து இவரை ஒரு வழியாக மீட்டார்கள். நமக்கே வேதனையாக இருக்கிறது, பெருந்தீனிப் பிரியரான இவரின் ஒரு வேளை உணவு பட்ஜெட் காலையில் 2 றாத்தல் இறைச்சி, 1 டசின் முட்டை, ஒரு டசின் வெண்ணெய் தடவிய ரொட்டி, 2 லிட்டர் காபி, இந்த உணவுகள் ஒருவேளை மட்டுமே.

இவரின் இதர விபரங்களைக் கேள்விப்பட்ட பிரபல சமூக சேவையாளரும், டாக்டருமான கிரிகோரி என்பவர், இவரை சராசரி மனிதனாக மாற்றியே தீருவேன் என்று சபதம் எடுத்துக் கொண்டு இவரின் இல்லத்திற்கு வந்தார். முதலில் இவர் சாப்பிடும் அயிட்டங்களில் கை வைத்தார். இந்தக் குண்டு மனிதருக்கு மசாலா அயிட்டங்களே கிடையாது. பழங்களும் காய்கறிகளும் தான் உணவு. சிகிச்சை பலனளிக்க ஆரம்பித்து இவருக்கு 50 றாத்தல் வரை குறைந்துள்ளது. சரி! எடை குறைந்து சராசரி எடையுள்ள மனிதர்களைப் போல் ஆனபின் உங்கள் லட்சியம் என்ன? என்ற போது இவரின் பதில் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. 'என் அம்மாவின் சமாதியைச் சென்று பார்ப்பது முதல் வேலை. 1984 இல் இறந்தார். அடுத்து நியூயார்க், ஹவாய்த் தீவுகளை சென்று பார்க்க வேண்டும். இன்னும் அமெரிக்காவின் அனைத்து பகுதிகளையும் ஒன்று விடாமல் பார்க்க வேண்டும். நான் ஒரு அமெரிக்கனாக இருந்த போதிலும் அமெரிக்காவைப் பற்றி எனக்குக் கொஞ்சங்கூடத் தெரியாது' என்று கூறினார்.

கடந்த 17 ஆம் ஆண்டுகளாக வீட்டினுள்ளே அடைபட்டுக் கிடக்கும் இவருக்கு ஆகஸ்ட்டில் தான் விடுதலை.

ஆம்.

எதிர்வரும் ஆகஸ்டில்தான் இவர் வீட்டைவிட்டு வெளியுலகில் நடமாடப் போகிறார். ●



## 'தபால்காரர்களும் நாய்களும்' ஓர் உலகப்பிரச்சினை

வெளிநாடுகளில் வேலை பார்க்கும் 'போஸ்ட்மென்' களுக்கு அங்குள்ள தெருநாய்கள் தான் முக்கிய எதிரி.

பிரிட்டனில் மட்டும் ஒவ்வோர் ஆண்டும் 4 ஆயிரம் தபால்காரர்கள் நாய்க்கடிக்கு ஆளாகின்றனர்.

அமெரிக்காவில் கடந்த ஆண்டில் மட்டும் 11,000 போஸ்ட்மென்கள் நாய்க்கடிக்கு ஆளாகினர். அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க மட்டும் அரசுக்கு 7 லட்சம் டாலர் செலவாகின.

மேற்கு ஜேர்மனியில் தபால்காரர்களுக்கு, எத்தகைய, எந்த இனத்து நாய்களினால் ஆபத்து வரும் என்பதை விளக்கும் ஒரு தற்காப்புப் புத்தகமே கொடுத்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, நாய்களிடம் இருந்து தப்ப மிளகுப் பொடியை பீய்ச்சி அடிக்கும் (ஸ்பிரே) தெளிகருவியையும் கொடுத்து இருக்கிறார்கள்.



வெளிநாடுகளில் போஸ்ட்மென் வந்தாரா? இல்லையா? என்பதைத் தெரிந்துகொள்ள யாரையும் விசாரிக்க வேண்டியதில்லை.

அங்குள்ள தெருநாய் ஒன்று மிளகுப் பொடியால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தால் அதை வைத்தே அறிந்து கொள்ளலாம்.

இஸ்ரேலின் போஸ்ட்மென்களுக்கு கைத்துப்பாக்கியே வழங்கப்படுகின்றது. கடிக்க வரும் நாயைச் சுட்டுத்தள்ள அங்கு தடை இல்லை.

டெர்ரியர்ஸ், பொக்ஸர்ஸ், அல்சேஷன்கள் ஆகிய நாய்கள் தாம் போஸ்ட்மென்களின் எதிரிகள். இவைகள்தான் போஸ்ட்மென்களை விரட்டிக் கடிக்கின்றன என்று கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ★

## இமயமலை வளருகிறது

இமயமலை நாளுக்கு நாள் வளருகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்டுக்கு ஏழு மில்லி மீட்டர் உயரம் வளருவதாக லண்டனைச் சேர்ந்த புவியியல் நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர்.

கடந்த ஒரு கோடி ஆண்டில் இந்த வளர்ச்சி இரட்டிப்பு மடங்காக அதிகரித்துள்ளது என்று கணக்கிடப்பட்டுள்ளது.

அதாவது கடந்த ஒருகோடி ஆண்டில் 10 கிலோ மீட்டர் உயரம் வளர்ந்து உள்ளது என்று புவியியல் நிபுணர்களின் ஆராய்ச்சி தெரிவிக்கிறது. ★

## குழந்தை வேண்டாதவர் சங்கம்

இங்கிலாந்தில் 'பான்' என்று ஓர் இயக்கம் தோன்றியிருக்கிறது. இது திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் மட்டும் சேர்ந்து நடத்தும் இயக்கம். குழந்தைகளே வேண்டாம். குழந்தைகள் இல்லாமலே காலம் முழுவதும் வாழ்ந்து விட வேண்டும் என்ற கொள்கை கொண்ட தம்பதிகள் இந்த 'பான்' இயக்கத்தில் சேர்கிறார்கள். குழந்தைகளை கஷ்டப்பட்டுப் பெற்று, பெரும் செலவில் வளர்ப்பது பயனற்ற செயல் என்று 'பான்' கருதுகிறது. இதில் இப்போது ஆயிரக்கணக்கான அங்கத்தினர்கள் [illegible]கள்.

## அழகு சாதனங்களில் ஆர்வம் காட்டும் ஆண்கள்!

பெண்ணினுடைய அழகு சாதனப் பொருள்களை நுகர்ந்து பார்க்கும் ஆண், உண்மையிலே ஆண்தானா?

இல்லை என்று அடித்துச் சொன்னார் பிரபல ஆங்கில எழுத்தாளர் ஹெமிங்வே.

இதற்கு மாறாக மேலைநாட்டு ஆணினம் நடக்கத் தொடங்கி இருக்கிறது.

மேற்கு ஜேர்மனி இதில் முன்னணி இடம் வகிக்கின்றது. அங்கு பெண்களை விட ஆண்களே அழகு சாதனப் பொருள்களில் அதிக நாட்டம் காட்டி வருகின்றனர் என்று தெரிகிறது.

சருமத்தை மிருதுவாக்கும் களிம்புகள், மேனிக்கு மெருகு ஊட்டும்தைலங்கள் வாசனைத் திரவியங்கள், முகப்பவுடர்கள் போன்றவற்றைக் கியூ வரிசையில் நின்று ஆண்கள் வாங்குகின்றனர்.

ஆண்டுக்கு ஒன்றரைக்கோடி ரூபாவை ஆண்கள் இதற்காகச் செலவழிக்கிறார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ★

## எய்ட்ஸ் கிருமி எப்படி இருக்கும்?

எயிட்ஸ் கிருமி எப்படி இருக்கும்?

இதுகாலவரை எய்ட்ஸ் கிருமியின் தோற்றம் வைத்திய நிபுணர்களுக்குத் தெரியாமல் இருந்து வந்தது.

இப்போது அப்பயங்கர உயிர்க்கொல்லியின் வடிவம், அமைப்பு, கூறுகள் ஆகியவற்றைக் கொண்ட மாதிரி ஒன்றை சோவியத் [illegible] பிடித்து விட்டனர். [illegible] வடிவில் ஒரு மில்லி மீட்டரில் 10 ஆயிரத்தில் ஒரு பங்கு இருக்கும்.

உருண்டையின் வெளிப்புறத்தில் டசின் கணக்கில் மொட்டுக்கள் போன்ற அமைப்பு துருத்திக் கொண்டு இருக்கும்.

இந்த மொட்டுக்கள் தான் மனித உடல் அணுக்குள் புகுந்து, பெருகி, உயிரைக் குடிக்கின்றது.

இப்படி சோவியத் நிபுணர்களின் கண்டு பிடிப்பு கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தமிழருக்கு பெருமை சேர்த்த புதுவைக் கம்பன்விழா

# தங்களை அழித்துக் காப்பியம் தரும் இலங்கைத் தமிழர்!

புதுவைக் கம்பன் விழாவின் இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சியில் தமிழகத்தின் இன்றைய பிரபல பேச்சாளர்களுள் ஒருவரான சுகி. சிவம் அவர்களின் தலையுரை அதற்குத் தலைமை ஏற்றவர், எங்கள் நாட்டு ஜெயராஜ்.

அவரை முதல்நாள் விழாவிலேயே கௌரவித்திருந்த போதிலும் அன்றைய விழாவில் விசேடமாக அறிமுகம் செய்துவைத்தனர். 'இலங்கையிலே மனிதர் வாழ முடியுமா? என்று நாம் சந்தேகிக்கும் இவ்வேளையில் இவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் தொடர்ந்து பல வருடங்களாகக் கம்பன் விழா நடத்தி கம்பனுக்கென்றொரு கோட்டமும் அமைத்து இதுவரை நாம் கூடச் செய்யாத ஒரு காரியத்தைச் சாதித்துள்ளார். திருச்சிப் பேராசிரியரின் மாணவனுகத் தன்னை நினைத்து தோற்றத்திலும் அவர் போலவே மாறி வருகிறார்' என்றெல்லாம் பாராட்டினர்.

ஜெயராஜின் தலைமை உரை ஆரம்பித்தது. அன்றைய விழாவுக்குத் தலைமை தாங்கத் தனக்கு என்ன தகுதி என்பதற்கு சுவையான ஓர் காரணத்துடன் தன் பேச்சைத் தொடங்கினர்.

தேவர்களுடன் பேசும் திருமால் இலங்கை அரக்கன் இராவணனை அழிக்கத் தசரதனுக்குப் புதல்வனாய்ப் பிறப்பதாய் வாக்களித்த காட்சியைக் கம்பனிலிருந்து எடுத்துக் காட்டி இலங்கையில் ராவணன் இருந்ததால் தான் அயோத்தியில் ராமன் பிறந்தான். அயோத்தியில் ராமன் பிறந்ததால்தான் ராமாயணம் பிறந்தது. ராமாயணம் பிறந்ததால்தான் கம்பனுக்கு மூலக்கதைகிடைத்தது; இதனால்தான் இன்று கம்பன் கழகங்களும் கம்பன் விழாக்களும் நடைபெறுகின்றன. மொத்தத்தில் இன்றைய கம்பன் விழாக்கள் அனைத்துக்கும் இலங்கையே மூல காரணம் ஆனது. இலங்கையில் உள்ளவர்கள் தங்களை அழித்துக் கொண்டு உங்களுக்குக் காப்பியங்களைத் தருகின்றனர். இக்கூற்று அன்றைக்கும் இன்றைக்கும் பொருத்தமானதே'.

ஜெயராஜ் இப்படிப் பேசி முடிக்க சபை அக்கூற்றுக்குள் உள்ள மறை பொருளை உணர்ந்து மகிழ்ந்துஆரவாரித்தது.

இவ்வாறு ஒரு முன்னுரையோடு ஆரம்பித்துப் பின் கம்பன் காப்பியத்தின் சிறப்புகள் பற்றி புதுக்கருத்துக்களை வெளியிட்டார். இவற்றைக் கேட்டு அறிஞர்கள் பலரும் வியந்தனர்.

## பட்டிமன்றம்

இங்கு நடக்கும் கம்பன் விழாக்களில் அவருடைய கருத்துக்களைக் கேட்கலாம் என்றபடியால் அவற்றை விரிவு படுத்துவதைத் தவிர்க்கிறேன்.

தன் பேச்சின் முடிவில் 'நாங்கள் இங்கு வந்ததிலிருந்து இலங்கையிலே என்ன நடக்கிறது என்று பலரும் விசாரிக்கிருர்கள். திருப்பித் திருப்பிச் சொல்லுமளவுக்கு அங்கு நடப்பவை மகிழ்ச்சியானவை அல்ல' என்று கூறிய ஜெயராஜ் 'எல்லார்க்கும் பொதுவாக அங்குள்ள நிலைமையை இந்த மேடையிலேயே சொல்லி விடுகிறேன்' என்று கூறிவிட்டு, இலங்கைத்தமிழர் நிலையை மிக உருக்கமாக விளக்கினர். சபை கசிந்த கண்ணீரோடு கேட்டு உருகியது.

தலைமை உரை முடித்து 'நாளும் உயர்க' என்ற தலைப்பில் சுகிசிவத்தின் பேச்சு ஆரம்பித்தது. இலங்கைத் தமிழர் பற்றி ஜெயராஜ் கூறியதற்கு அவர் தன் பேச்சின் தொடக்கத்தில் ஒரு ஆறுதலைக் கூறினர். 'இராமாயண காலத்திலே இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க இங்கு ஆட்சியில் இல்லாத ராமன் நான் முன் வந்தான். இன்றும் அது போலவே நடக்கும் என நம்புவோம்' என்ருர். ஆட்சியில் இல்லாத கருணாநிதியைத் தான் அவர் குறிப்பிடுகிருர் என்பதை உணர்ந்துகொண்டு சபை ஆரவாரித்தது.

காலை விழா முடிந்தது. ஜெயராஜின் முகத்தில் மகிழ்ச்சியைக் காணவில்லை. 'காலைப் பேச்சில் எனக்குத் திருப்தியில்லை' என்று விசனப்பட்டுக் கொண்டார். அவரின் முழுமையான பேச்சாற்றலைப் பார்த்திருந்ததால் எமக்கும் அவர்தன் முழு ஆற்றலையும் காட்டவில்லை என்றே பட்டது. அந்த ஏக்கங்கள் எல்லாம் இரட்டிப்பான மகிழ்ச்சியாக மாலைப் பட்டிமண்டபத்தில் மாறியது. இங்கு நாம் காணாத அவருடைய ஆற்றலைக் கண்டு வியந்தோம்.

மாலையும் வந்தது. பட்டிமண்டபம் ஆரம்பிக்கவில்லை. மண்டபம் நிறைந்து வழிந்தது. அ. ச. ஞானசம்பந்தன், முதல்வர் பாரூக் முதலானோர் கூட வரப் பிந்தியதால் வெளியே பொருத்தப்பட்டிருந்த டி.வி.யில் நிழ்ச்சிகளைப் பார்க்கவேண்டியதாயிற்று.

அன்றைய பட்டிமண்டபத் தலைப்பு 'கம்பன் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தவர் தந்தையரா? தாயாரா? மைந்தரா? என்பது நடுவர் திரு. சிலம்பொலி செல்லப்பன். ஜெயராஜ் மைந்தர் கட்சிக்காக வாதாடினர். அவர் கட்சிக்குத் தி. இராசகோபாலன் என்ற பேராசிரியர் தலைமை. பட்டிமண்டபத்தை நோக்கித் தீர்ப்பு வழங்க உதவுவதற்காக ஒரு நோக்கர் குழுவும் அமைக்கப்பட்டது. எங்கள் விரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம், கம்பன் கழகச் செயலாளர் குமாரதாசன் இருவரும் அந்தக் குழுவில் அங்கம் வகித்தனர்.

> **புதுவைக் கம்பன் விழா-இறுதிப்பகுதி**

பட்டிமண்டபம் ஆரம்பித்தது. ஒவ்வொரு கட்சிக்காரர்களும் வாதிட்டுக் கொண்டு வந்தனர். ஜெயராஜினுடைய முறை வருகிறது; அவர் எழும்புகிருர். எழும்பியவர் தடுமாறி விழப்பார்த்தார்; மேடையிலே சலசலப்பு. நாமும் பயந்து விட்டோம். நெடுநேரம்சப்பணம்கொட்டி இருந்ததால் வந்த கால்விறைப்பே அதற்குக் காரணம். ஒருவாறு விழாமற் சமாளித்துக் கொண்டு மைக்குக்கு முன்னல் வந்து நிற்கிருர், எமக்கும் தொடக்கத்திலேயே இப்படி நடந்து விட்டதே என்று மனதில் படபடப்பு. ஆனல் ஜெயராஜ் துணிவுடன் 'நான் தவறுதலாக விழப் பார்த்தேன் என்றுதானே நீங்கள் நினைக்கிறீர்கள். அப்படி அல்ல. இலங்கையில் தமிழர்கள் விழப் பார்க்கிருர்கள் என்பதை உணர்த்தவே அப்படிச் செய்தேன்' என்கிருர்.

சபையில் பலத்த கரகோஷம். சந்தர்ப்பத்துக்கு ஏற்ற அவரது சாதுர்யத்தைக்கண்டு வியந்தோம். தனதுகட்சியை நியாயப்படுத்தி மிகத் திறமையாகப் பேசினர். சபை அசந்து விட்டது.

வாதிட வேண்டியவர்கள் வாதிட்டாயிற்று. இனிக் கட்சித் தலைவர்களின் தொகுப்புரை. மற்றைய கட்சித் தலைவர்கள் தொகுப்புரை நிகழ்த்திக் கொண்டிருக்கிருர்கள். புதுவைக் கம்பன் கழகச் செயலர் அருணகிரி மேடையிலே ஏறுகிருர். ஜெயராஜின் அணித்தலைவர் காதில் ஏதோ சொல்லுகிருர். சிறிது நேரத்தில் அவர்கள் அணித்தலைவர் தொகுப்புரை ஆற்ற அழைக்கப்படுகிருர். ஆனல் அவர் எழும்புகிருர் இல்லை. ஜெயராஜைப் பார்த்து நீங்க போங்கசார், என்ருர். அருணகிரி அவர் காதில் என்ன சொல்லியிருப்பார் என்பதை அப்போது புரிந்து கொண்டேன். ஜெயராஜின் வாதத் திறமையில் மயங்கி ஜெயராஜையே அவர் அணிக்கான தொகுப்புரையை நிகழ்த்தும்படி கேட்டதில் இலங்கையரென்ற வகையில் நாம் எல்லோருமே பெருமைப் படலாம்.

அவருடைய முதல் வாதத்தைவிட தொகுப்புரை மேலும் பலமடங்கு சிறந்ததாக அமைந்துவிட்டது. சுதாவேஷயன் என்ற பேச்சாளர் தனது வாதத்தின்போது ஒரு கருத்தைச் சொல்லியிருந்தார். கைகேயி மந்தரையின் சூழ்ச்சியில் மயங்கி தசரதனைக் கோபித்தான். அணிகலங்களை எல்லாம் களைகிருள். திலகத்தை அழிக்கிருள். திலகத்தை அழிப்பதைக் கம்பன் பாடுகையில் 'மதியிலிருந்த மறுவை அழித்ததுபோல' அழித்தாள் என்ற உவமையைக் கையாளுகின்ருள். மதியின் மறுவை அழித்தால், மதிக்கு அழகு கூடுமே அன்றிக்குறையாது. ஆனல் ஒரு பெண் தன் குங்குமத்தை அழித்தால் அழகு குறையும். 'எனவே இது பிழையான உவமானம்' என்பதே அவர் கூறிய கருத்து.

தொகுப்புரையில் ஜெயராஜ் அதைமறுத்து பாடல் ஆதாரங்களோடு கைகேயியை ஒரு ஞானியாகச் சித்தரித்துப் பேசினர்.

ஜெயராஜின் அந்தக் கருத்தைக்கேட்ட அ. ச. ஞானசம்பந்தன் கையை உதறிக்கொண்டு 'அடநானுந்தான் இவ்வளவு காலம் இந்த இராமாயணத்தைப் படிச்சிருக்கேன் இப்படி ஒரு கருத்து எனக்கு வந்ததகதே இல்லையே! என்ன அருமை! என்ன அருமை!! என்று வியந்து பாராட்டியது இப்போதும் என் கண்முன்னே நிற்கிறது.



ஜெயராஜ்

## ஞானசம்பந்தன் பாராட்டு

அ. ச. ஞானசம்பந்தன்'இந்தப்பயலை எங்கடா பிடிச்சே' என்று அருணகிரியை மனம் திறந்து பாராட்டினர். இந்தளவுக்கு அருமையாகப் பேசிய ஜெயராஜ் தனது தொகுப்புரையை முடிக்கும் போது, நடுவரைப் பார்த்து ஐயா இலங்கையிலிருக்கும் எங்களுக்கு நடுவர்கள் என்று யாரும் வந்தாலே பயமாக இருக்கிறது. நெடுங்காலம் உங்கள் தீர்ப்புக்களால் பாதிக்கப்பட்டு வந்துள்ளோம் இதிலாவது நீதியான தீர்ப்பை எதிர்பார்க்கிறேம்' என்று முடித்தார்.

இரு பொருள்பட அவர் பேசிய இப்பேச்சால் நடுவர் உட்பட மண்டபமே அதிர்ந்து சிரித்தது.

அருணகிரி ஜெயராஜைக் கட்டித்தழுவி 'ராதா கிருஷ்ணனை உன்குடுமியிலே மட்டுமில்லே உன் பேச்சிலேயும்

**- ரகுபரன் -**

பிடிச்சு வச்சிட்டே. தமிழ் நாட்டு நல்ல பேச்சாளர்களை விரல்விட்டு எண்ணின அதுக்குள்ளே நீயும் வருவே' என்று ஆனந்தம்பொங்கப் பாராட்டினர்.

அன்று இரவு உணவு அருந்திக்கொண்டிருந்த இடத்திற்கு அ. ச. ஞானசம்பந்தன் வருகிருர். வந்தவர் எங்கோ போகப்போகிருர் என நாம் நினைக்க எம் முன்னல் வந்து நிற்கிருர். அவரைக் கண்டதும் நாம் அனைவரும் எழுந்து நிற்கிறேம். அவர் ஜெயராஜைப் பார்த்து நான் உன்னைப் பார்த்துப்பேசணும்னு தான் வந்தேன். எனக்கு அ. ச. ஞானசம்பந்தன் என்னுபேரு' என்று ஏதோ சாதாரண மனிதர் போல் தன்னை அறிமுகப்படுத்துகிருர், தமிழ் வழங்குகின்ற எந்த ஒரு நாட்டிலும் அ. ச. ஞானசம்பந்தன் என்ற பேர் வழங்கும் அத்தனைய பெரிய மனிதர் என்ன அடக்கமாகத் தன்னை அறிமுகப் படுத்துகிருர். எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.

அவருடன்ஒருசிலவார்த்தையாவதுபேசமுடியாதா? என்று ஏங்கிக்கொண்டிருக்கும்எங்களிடம் வந்து அந்த மனிதன் தன்னை அறிமுகப்படுத்துகிருரே. இது எல்லாம் ஜெயராஜின் பேச்சால்வந்த பேறு தான். ஜெயராஜை வெகுவாகப் புகழ்ந்து நீண்ட நேரம் அன்போடு பேசினர்.

எல்லோரும் கேட்கும் சந்தேகங்களுக்கெல்லாம் அருமையாக விடைகூறுகிருர். அவருக்குத் தெரியாததே இருக்காதோ?

அன்றைய பேச்சு தமிழகத்து அறிஞர்களையும் மக்களையும் வெகுவாகக் கவர்ந்து விட்டது. ஒட்டோவிலே கையொப்பம் வைத்துத் தரும்படி ஜெயராஜைச்சுற்றி ஒரே கூட்டம். அவருக்குக் கிட்டே போக முடியாதவர்கள் எம்மிடம் வந்து அவரைப் பற்றி விசாரிக்கிருர்கள் அவர்களுக்கெல்லாம் பதில் சொல்லி எங்களுக்கு அலுத்து விட்டது.

''இப்படி ஒரு மாணவனைப் பெற என்ன தவம் செய்தீர்களோ? என்ற ரீதியில் ஆசிரியர் சிவராமலிங்கம் அவர்களுக்குப் பாராட்டு. அவர் பூரித்துப் போய் விட்டார்.

> **பட்டிமன்ற இறுதியில்;'ஐயா, இலங்கையருக்கு நடுவர்கள் என்ருலே பயம் வந்து விடுகிறது. நெடுங்காலம் உங்கள் தீர்ப்புக்களால் பாதிக்கப் பட்டு வந்துள்ளோம். இதிலாவது நீதியான தீர்ப்பை எதிர்பார்க்கின்ருேம்'**

அங்கு நிறையப் பேருக்கு இலங்கைக் கம்பன் கழகத்தைப் பற்றித் தெரிந்திருக்கிறது. ஜெயராஜையும், குமாரதாசனையும் முன்பே தெரிந்தவர்கள் நெடுநாள் பிரிந்திருந்த தம் சகோதரர்களைக் கண்டதுபோல நடந்து கொள்ளுகிருர்கள்.

பேராசிரியர் ராதாகிருஷ்ணன் அவர்களின் வீட்டுக்குப் போனல் அவர் மனைவி தன் பிள்ளைகளிலும் மேலாகப் பாசத்தைப் பொழிகிருர்.

இவர்கள்மேல் அன்பு பாராட்டுகிறவர்களைப்பற்றிச் சொல்லும்போது கட்டாயமாக கோடுர் ராஜகோபால் சாஸ்திரிகளைப்பற்றிச் சொல்ல வேண்டும். தமிழிலே சான்ருேன் என்ற சொல்லுக்கு உதாரணமாக ஒருவரைக் காட்டவேண்டும் என்ருல் எனக்குத் தெரிந்தது மிகப் பொருத்தமானவர் கோடுர் ராஜகோபால் சாஸ்திரிகள் தான் என்று அடிக்கடி ஜெயராஜ் எனக்குச் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை அவரைக் கண்டு பழகியபோது உணர்ந்து கொண்டேன். தெய்வீகத் தோற்றத்தோடு பொலிந்த அந்தப் பிராமணத் தம்பதிகள் முன்பே பழக்கமான ஜெயராஜ் குமாரதாசோடு எங்களையும் தங்கள் பிள்ளைளாகவே போற்றினர். சென்னைவரை எங்களைத் தங்களோடு அழைத்துச்சென்று சொந்தக் குழந்தைகள்போல் பராமரித்ததை என்றும் மறக்கமுடியாது. அவர் பாரியார் 'வாரம் ஒரு லெற்றர் சுகமாய் இருக்கிறேமென்று ஒரு வரியாவது எழுதிப் போடுங்கப்பா'' என்று கண்ணீரோடு கூறியது அவர்கள் கம்பன்கழகப் பிள்ளைகளில் வைத்திருக்கும் பற்றைக்காட்டியது.

இவ்வளவுக்கும் அவர் சதாரணமான ஒருவர் அல்ல. தமிழகத்தில் அவரைத் தெரியாத பெரியவர்களே கிடையாது அந்த அளவுக்குப் பிரபலமானவர். தமிழகத்தின் இன்றைய தலைசிறந்த பாடகர் சேஷகோபாலனை உருவாக்கியதில் முக்கிய பங்கு இவருடையதே.

## நிரந்தரப் பாலம்

ஜெயராஜின் பேச்சினல் ஏற்பட்ட தொடர்புகள் தமிழகத்திற்கும்,ஈழத்திற்கும் ஓர் நிரந்தர பாலமாக அமையும் என்பதில் ஐயமில்லை. அந்த அளவுக்கு அங்கே மதிக்கிருர்கள்.

ஜெயராஜ்பேசியதற்குப் பின் நடந்த விழாக்களுக்கு போகும்போது சிலவேளைகளில் பிந்திச்சென்ருல் மண்டபம் நிரம்பியிருக்கும். எம்மைக்கண்டதும் முன்னுக்கிருப்பவர்கள் எழுந்து ஆசனம் தருவார்கள். அறையிலே இருந்தால் கதவைத் தட்டுவார்கள், திறந்தால் ஜெயராஜாவைப் பார்த்து 'உங்கள் பேச்சு ரொம்பப் பிரமாதம்' என்று பாராட்டுவார்கள்.

புதுவையிலே முருகேசன் என்ற பிரபலமான வக்கில் தனது கார்களில் ஒன்றை எமக்கென்றே சாரதியோடு தந்து விட்டார். ராமன் என்பவர் எமது தேவைகளைக் கவனித்துக்கொள்ள வென்றே நியமிக்கப்பட்டார்.

தமிழகத்தின் ஏனைய கழகக்காரர்கள்ஜெயராஜிடம் வந்து 'நீங்கள் எங்கள் விழாவுக்கு அவசியம் வரணும்' என்று அழைப்புவிடுத்தார்கள்.

இறுதிநாள் விழாவும் முடிந்து வெளியில் நிற்கும் போது முதல்வர் பரூக் வந்தார். அருணகிரி அவர்களைக் கூப்பிட்டு 'ஜெயராஜுக்கு புதுவைக் கம்பன் விழாக்களு நிரந்தர அழைப்புக் குடுத்திடுங்க' என்ருர் அருணகிரி 'இனிமேல் நாங்க கூப்பிடாட்டிக்கும் மக்கள் விடமாட்டாங்கா. இலங்கை ஜெயராஜ் இல்லையான்னு கேப்பாங்க இனி ஜெயராஜ் இல்லாம புதுவைக் கம்பன்விழா இல்லை.' என்ருர் உறுதியாக. பின் ஜெயராஜைப் பார்த்து 'என்ன ஜெயராஜ் தவரும அடுத்த வருசமும் வந்திடணும்' என்ருர்.

சொல்லிவிட்டு அருணகிரி ஒரு மடித்த கவரை ஜெயராஜின் கையிலே திணித்தார். அவர் போனதும் திறந்து பார்த்தோம். உள்ளே 1500 ரூபா இந்தியப் பணத்தில் வழக்கமாக இந்தியப் பேச்சாளர்களுக்குத்தான் நாம் பணம் கொடுத்துப் பேச்சுக்கு அழைப்போம். இன்று நிலைமை மாறியிருக்கிறது உண்மையிலேயே என்மனம் அளவிலாப் பெருமை கொண்டது. அது எல்லாம் பெரிதல்ல. அவர்களுடைய அன்பும் பஸ் ஏறும் வரையும் புதுவைக்கம்பன் கழகப்பெரியவர்களெல்லாம் எம்மோடு வந்து எம்மை வழியனுப்பி வைத்த அக்கறையும் இளைஞர்கள் என்று எண்ணுமல் எம்மையெல்லாம் கௌரவித்த பெருந்தன்மையும், அவர்களுடைய சான்ருண்மையும் தான் பெரிது.

எல்லாவற்றிலும் மேலாக தமிழகத்திற்கும் ஈழத்திற்குமிடையில் ஒரு உறுதியான இலக்கியப்பாலம் இலங்கைக்கம்பன் கழகத்தால் கட்டப்பட்டு விட்டது என்பதே எமது பயணத்தில் எமக்குக் கிடைத்த பெரிய திருப்தி.

புதுவைக் கம்பன்விழா அனுபவங்களை நான்கு வாரங்களாகப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. சொன்னவை சில. அனுபவித்தவையோ பல. இன்னும் நிறைய விஷயங்கள் உள்ளன. ஆயிரக்கணக்கில் செலவழித்து நான் பெற்ற அனுபவங்கள் அத்தனையும் இனமாகத் தர மனம் வரவில்லை. எனவே இத்துடன் இத் தொடரை நிறைவு செய்கிறேன். புதுவைக் கம்பன் விழாவுக்கு வரமுடியாதவர்கள் இங்கு நடக்கும் கம்பன் விழாக்களிற் கலந்து கொண்டு திருப்திப்படுங்கள். கம்பன் வாழ்க! கம்பன் புகழ் வாழ்க!! கன்னித் தமிழ் வாழ்க!!!



சக்கரவர்த்தி கம்பன்

★ நங்கை ★

# வழுவழுப்பான கால்களுக்கு...

கை, கால்களில் உள்ள முடிகளுக்கு வக்ஸிங் செய்து நீக்குவது எப்படி என்பது பற்றி பார்ப்போம். வக்ஸிங் செய்வதற்கு முன்பாக நினைவில் கொள்ள வேண்டியது வக்ஸை மிகுந்த சூட்டோடு போடக்கூடாது. இந்த முறையில் முடிகள் அதன் வேர் பாகங்களிலிருந்து எடுக்கப்படுகின்றன. அப்படி எடுக்கப் பட்ட இடத்தில் முடிகள் திரும்ப வளர குறைந்தது சுமார் நான்கு முதல் எட்டு வாரங்கள் ஆகும்.

சிலருக்கு உடம்பில் சுரக்கும் ஹோர்மோன்களை பொறுத்து வளரும். இது இயற்கையானது. இப்படி செய்து வந்தால் கை - கால்களில் முளைக்கின்ற முடி, திரும்ப வளரும் போது அதன் சக்தி குறைந்து மெல்லியதாக இருக்கும். கை-கால்களுக்கு இந்த முறை தான் ஏற்றது. இது முதலில் சிறிது வலியைக் கொடுக்கும். நாளாக. நாளாக சரியாக போய்விடும். கடைகளில் வாங்கி பயன்படுத்தும் வக்ஸைவிட நாமே வீட்டில் தயாரிக்கலாம். அதனல் தோலின் மிருதுத்தன்மையும், இயற்கைத் தன்மையும் மாருமல் இருப்பதுடன் தோலையும்பாது காக்கலாம்.

தயாரிக்கும் முறை: 200 கிராம் சர்க்கரை, 3 எலுமிச்சம்பழம் (பெரியதாக) 5 சொட்டு கிளிசரின், 25 சொட்டு பசை. சர்க்கரையுடன் எலுமிச்சம்பழ சாற்றை கலக்க வேண்டும். (பழ சாற்றை நன்கு வடிகட்ட வேண்டும்.) அதை நன்ருக சந்தனம் போல் குழைத்து அடுப்பில் வைத்து சூடுபடுத்த வேண்டும். பாத்திரம் அகலமானதாகவும், ஒன்றரை அங்குல உயரமானதாகவும், கைப்பிடியுடனும் இருக்க வேண்டும். பின்பு மெல்லியதாக அடுப்பை (காஸ்) எரியவிட வேண்டும்.

சிறிது நேரத்தில் அது பொங்கி பொன் நிறத்தில், பாகு பதத்தில், வரும்போது இறக்கி வைத்து சிறிது ஆறவிட்டு பிறகு கிளிசரினையும், பசையையும் அதில் விட்டு கிளர வேண்டும். இந்த கலவையை எப்போது வேண்டுமானுலும் உபயோகித்துக் கொள்ளலாம். ஆறு மாத காலத்திற்கு வரும்.

### செய்முறை:

கை, கால்கள் ஆகிய பகுதிகளில் ஏதாவது வாசனை பவுடரை தடவ வேண்டும். பின்பு கூர்மையற்ற (கூர்மையற்ற) ஒரு கரண்டியை எடுத்து, சிறிதளவு சூட்டோடு, அதாவது நமது தோல் சூடுதாங்கும் அளவு எடுத்து அதை பவுடர் தடவியுள்ள இடத்தில் ஸ்கேல் அமைப்பு போல பட்டையாக தடவ வேண்டும். இதற்கு முன் துணியை தயாராக வைத்துக் கொள்ள வேண்டும். அந்த துணியின் அளவு இரண்டு அங்குல அகலமும் சுமார் 20 அங்குல நீளமும் உள்ள மொத்தமான துணியாக இருக்க வேண்டும்.

துணியை வக்ஸ்தடவியுள்ள இடத்தில் வைத்து அழுத்த வேண்டும். பிறகு துணியை பிடித்து கீழிருந்து மேலாக இழுத்தால் முடிகள் வந்து விடும்.

இதேபோல் செய்தால் கை-கால்களில் உள்ள முடிகள் நீங்கும். பிறகு வக்ஸ் செய்த கை-கால்களை கழுவிவிட்டு எண்ணெப்பசை உள்ள கிரீமை தடவவேண்டும். சிறிது தேங்காய் எண்ணெயை தடவினுலும் போதுமானது.

இதில் மிக முக்கியமானது வக்ஸ் அதிக சூடு இல்லாமல் நாம் பொறுக்கும் அளவு சூட்டுடன் கால்களில் தடவ வேண்டும். அதிக சூடு இருந்தால் தோல் வெந்து விடும். கவனமாக இருக்க வேண்டும்.

## கணவனை விடக் கடுமையான உழைப்பு!

குடும்பப் பெண்கள் பலர் தங்கள் கணவர்களை விடக் கடினமாகத் தினமும் வேலை செய்கிருர்கள் என்று ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

துணி துவைப்பதை நாம் இலேசாக நினைக்கிறேம்.

ஆனல் அதற்குச் செலவாகும் சக்தி ட்ராக்டரால் நிலத்தை உழுவதற்குச் சமமாகும்.

வீட்டைக் கழுவி ஜன்னல்களைத் துடைப்பது டாக்ஸி ஓட்டுவதற்கு ஈடான வேலையாகும்.

துணிகளுக்கு இஸ்திரி போடுவது செங்கற்களை அடுக்கி வீடு கட்டும் கொத்தனர் உழைப்பை விடக் கடினமான வேலையாகும்.

இப்படி உடற்கூறு நிபுணர்கள் கருத்து வெளியிட்டிருக்கிருர்கள்.

## சிந்தியுங்கள்! சிரியுங்கள்!!

பையன்: அப்பா வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு அழகுதானே?

தகப்பனர்: அது சரி தாண்டா ரிசல்ட் பார்க்கப் போறேன்னு போனியே... என்னுச்சு.

பையன்: தோல்வியும் வீரனுக்கு அழகுதானே? பரீட்சையில் தோற்றுப் போனேன்.

இ. ரகுநாதன்
அச்செழு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சினிமா மூலம் தமிழ்நாட்டில் புரட்சி என்பது நடக்கிற காரியமா?

## கலைஞர் கிண்டல்

— சென்னையில் இருந்து மேனகன் —

தி. மு. க. தலைவர் கருணாநிதி வசனம் எழுதும் 'இது எங்கள் நீதி' என்ற படத்தின் ஆரம்பவிழா அண்மையில் நடைபெற்றது.

விழாவில் கருணாநிதி பேசினார். அவர் சொன்னதாவது;

இந்தப் படம் வெளிவந்தால் புரட்சி ஏற்படும் என்று இங்கு பேசியவர்கள் குறிப்பிட்டார்கள்.

என்னதான் செய்தாலும் தமிழ் நாட்டில் புரட்சி ஏற்படாது.

பொஸ்பரஸ் இருக்கிறதே அதை தண்ணீரை விட்டு வெளியே எடுத்தால் தானாகவே எரியும். அப்படிப்பட்ட புரட்சி பல நாடுகளில் ஏற்பட்டிருக்கிறது.

கற்பூரம் உள்ளது. அதைப் பற்ற வைத்தால் போதும் எரியத் தொடங்கி விடும். அப்படிப்பட்ட புரட்சியும் சில நாடுகளில் நடந்து இருக்கிறது.

மூன்றாவதாக விறகு. அதை அடுப்பில் போட்டு ஊதினால் தான் எரியும். அப்படிப்பட்டது தான் தமிழ்நாடு.

பெரியாரும் அண்ணாவும் பாரதிதாஸனும் பிறந்தே இந்தத் தமிழ் நாட்டில் புரட்சி வரவில்லை!

படத்துக்குக் கதை வசனம் எழுதியா புரட்சி வரப்போகிறது?

இப்படி கருணாநிதி கேட்டார்.

சமுதாயத்தால் பாதிக்கப்பட்ட சில இளைஞர்கள் நடத்தும் புரட்சிப் பயணத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும் கதைதான் 'இது எங்கள் நீதி'

படத்தின் வசனத்தைக் கலைஞர் எழுதுகிறார். டைரக்ஷன் பொறுப்பை எஸ். ஏ. சந்திரசேகரன் ஏற்றிருக்கிறார். கதை: ஷோபா சந்திரசேகரன். இசை: இளையராஜா கதாநாயகி ராதிகா. நிழல்கள் ரவி ராம்கி, எஸ். எஸ் சந்திரன், ராதாரவி, செந்தில், வாணி விசுவநாத், சித்ரா, சத்யா ஆகியோர் நடிக்கிறார்கள்.

மூன்று மொழிகளில்

## 70எம்எம் - ஸ்டீரியோபோனிக் படம் எடுக்கிறார் ராஜேந்தர்

பிரபல டைரக்டர் ராஜேந்தர் இயக்கும் வரலாற்றுப் படம் 'லைலா என் காதல் லைலா'

வரலாற்றுப்பின்னணியுடன் கூடிய காதல் காவியமாக பிரமாண்டமான முறையில் இப்படத்தைத் தயாரிக்க ராஜேந்தர் முடிவு செய்திருக்கிறார்.

தமிழ் படவுலகம் காணாத அளவு, உலகமே வியக்கும் வரையில் பிரமாண்டமான அரங்குகளுடன் இந்தப் படத்தை தயாரிக்கப் போவதாக ராஜேந்தர் கூறுகிறார்.

தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய 3 மொழிகளில் 70 எம். எம். அகன்ற திரை — 6 ட்ராக் ஸ்டீரியோ போனிக் ஒலி அமைப்புடன் இப்படம் தயாரிக்கப்படவுள்ளது.

கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், இசை, ஒளிப்பதிவு, டைரக்ஷன் ஆகிய பொறுப்புக்களை ஏற்கும் ராஜேந்தர் முக்கிய பாத்திரத்திலும் நடிக்கப் போகிறார்.

இதற்கிடையில் குறுகிய காலத் தயாரிப்பாக 'நீ ஒரு சிவரஞ்சனி' என்ற படத்தைத் தயாரித்து வெளியிட ராஜேந்தர் ஏற்பாடுகள் செய்து வருகிறார்.

இதில் துப்பறியும் நிபுணராக ராஜேந்தர் நடிக்கிறார்.

கதாநாயகியாக புதுமுகம் ஒருவர் நடிப்பார். (எ—4)

## 'தர்மதேவனா'க சிவாஜி

அந்தக் காலத்தில் கன்னடத்துப் பைங்கிளி சரோஜா தேவியுடன் சிவாஜிகணேசன் ஜோடியாக நடிக்கும் 'தர்ம தேவன்' படப்பிடிப்பு கடந்த வாரம் ஏ. வி. எம். ஸ்ரூடியோவில் ஆரம்பமானது.

கதை வசனத்தை ஏ. எல். நாராயணன் எழுதுகிறார்.

அவரின் மகன் ஏ. எஸ். என். மோகன் டைரக்ஷன் பொறுப்பை ஏற்றிருக்கிறார்.

புதுமுகம் திவ்யா, மலேசிய வாசுதேவன், வினுசக்கரவர்த்தி ஆகியோர் நடிக்கிறார்கள். (எ—4)

## வடக்கே மாதவி

மாதவி பொன்மயிலாள்... இது காப்பியத்தில்.

திரையில் தோன்றும் மாதவி, தமிழ் படத்துறையில் அதிர்ஷ்டமில்லாதவர் என்று பெயர் எடுத்தவர்.

திறமையுள்ள நடிகையாக இருந்தும் வாய்ப்புக்கள் அவ்



மாதவி

வளவாக தமிழ்ப்பட உலகில் மாதவிக்குக் கிடைக்கவில்லை.

ஹிந்திப் படவுலகில் நுழைந்து விட்டார். அங்கும் ஆா ஓகோ என்று சான்ஸ் கிடைக்கவில்லை.

ஏதோ ஓரிரு ஹிந்திப் படங்களில் நடித்து வருகிறார்.

பம்பாய் சினிமா உலகில் நிலையான இடம் ஒன்றைப் பிடித்துவிட முயற்சிக்கிறார். (எ—4)

## லண்டனுக்கு 'காணி நிலம்'

லண்டன் திரைப்பட விழாவில் 'காணி நிலம்' என்ற தமிழ்த் திரைப்படம் திரையிடப்பட தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தென்னிந்திய திரைப்பட இயக்குநர் சங்கம் இந்தப் படத்தை லண்டன் திரைப்பட விழாவுக்கு அனுப்ப முடிவு செய்தது.

அரசியல், பொது வாழ்வில் இடம்பெறும் ஊழல்களைச்சுட்டிக் காட்டுவதாக இப்படம் அமைந்து உள்ளது.

இப்படத்தை அருண்மொழி டைரக்டர் செய்திருக்கிறார்.

எதிர்வரும் டிசம்பரில் லண்டன் திரைப்பட விழா நடைபெறும். (எ—4)

## 'சந்திரலேகா' ஏற்படுத்திய புரட்சி பம்பாயில் இன்றும் நீடிக்கிறது

பம்பாயில் உயரமான சினிமா கட்அவுட்களை வைப்பதற்கு எப்போது தடை விதிக்கப்பட்டது?

யார் அந்தத் தடையை விதித்தார்கள்?

இது பற்றிய சுவையான தகவல்களை நடிகர் சிவகுமார் பேட்டி ஒன்றில் வெளியிட்டார்.

அவர் சொன்னதாவது;

அந்தக் காலத்தில் ஜெமினி வாசன் தயாரித்த சந்திரலேகா இந்தி மொழியில் வடக்கிலும் வெளியிடப்பட்டது.

படத்தின் கதாநாயகி டி. ஆர். இராஜகுமாரியின் தலை 60 அடி உயர கட்அவுட்டாகத் தயாரிக்கப்பட்டு பம்பாய் நகரின் முக்கிய சந்தியில் நிறுத்தப்பட்டது.



சிவகுமார்

சில தினங்களில் காற்றுடன் வந்த மழையினால் அக் கட்அவுட் அப்படியே சரிந்து விழுந்தது. அதனால் வீதியில் நின்ற கார்கள் சேதமடைந்தன.

அச்சமயம் அங்கு அமைச்சராக மொரார்ஜி தேசாய் இருந்தார். வந்த கோபத்தில் ஆபத்தை விளைவிக்கும் உயரமான கட்அவுட்களுக்குத் தடையை விதித்தார் தேசாய்.

இன்றும் அந்தத் தடை உத்தரவு நீடிக்கிறது — இப்படிக் கூறினார் சிவகுமார். (எ—4)

## ராஜ்கபூரின் விசித்திர ஆசை

திரைப்படச் சுருள்கள் எரிக்கப்பட்டு அவற்றின் சாம்பல், சமாதி மீது தூவப்பட்டது.

திரைப்படத்துறையையே வெறுக்கும் ஒருவரின் சமாதி மீது தான் தூவப்பட்டிருக்கும் என்று தான் அனைவரும் எண்ணுவர்.

ஆனால் உண்மை அது அல்ல. 40 ஆண்டுகளாக இந்திப் பட உலகில் முடி சூடா மன்னனாக விளங்கி அண்மையில் மறைந்த ராஜ்கபூரின் சமாதி மீது அச்சாம்பல் தூவப்பட்டது.

எதற்காக?

ராஜ்கபூரின் இறுதி விருப்பமே அது தான். ''பிலிம் சுருளை எரித்த சாம்பல் எனது சமாதியில் தூவப்பட வேண்டும்.

''அச்சாம்பலின் ஒரு பகுதி எனது அஸ்தியுடன் ஆற்றில் கரைக்கப்பட வேண்டும்'' இதுவே ராஜ்கபூரின் விருப்பம்.

அதன்படி பூனேயில் உள்ள அவரின் சமாதி மீது தூவப்பட்டது.

அவரின் அஸ்தியுடன், சாம்பலின் ஒரு பகுதி, பூனே ஆற்றில் கரைக்கப்பட்டது.

அவரின் புதல்வர்களே முன்னின்று விருப்பத்தை நிறைவேற்றினர். (எ—4)

வெள்ளித் திரையில்

## பொது அறிவுப்போட்டி இல. 7

1. நிழல் தருவது எது? ... மரம் / குடை
2. எது போனால் வராது? ... இளமை / அழகு
3. பணக்காரன் ஆக வழி? ... சேமிப்பு / சிக்கனம்
4. பாதுகாப்புக்குத் தேவை? ... பூட்டு / கதவு
5. திருடனைப் பிடிக்கப் பயன்படுவது? ... பொலிஸ் / நாய்
6. நிறுப்பதற்கு எது வேண்டும்? ... தராசு / படி
7. காலம் எது போன்றது? ... பொன் / உயிர்
8. பருவத்தைக் குறிப்பது எது? ... கோடை / வாடை
9. கடவுளின் வடிவம் என்பார்கள்? ... கீதம் / நாதம்
10. எண்ணைக் குறிப்பது எது? ... ஆறு / ஏழு
11. திருமணம் நிச்சயிக்க எது தேவை? ... நகை / தொகை
12. வியாபாரத்துக்கு எது தேவை? ... நாணயம் / நம்பிக்கை

பெயர்:- ..................

விலாசம்:- ..................

..................

பொது அறிவுப்போட்டி இல: 7
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

—— இங்கே வெட்டுக ——

**நிபந்தனைகள்:**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 29. 6. 88 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**முதலாம் பரிசு:- 100 ரூபா**
**இரண்டாம் பரிசு:- 50 ரூபா**
**மூன்றாம் பரிசு:- 25 ரூபா**

## கவிஞனின் சாமர்த்தியம்

ஓர் ஏழைக் கவிஞன், போஜராஜனைப் பலமுறை அணுகியும் பரிசு கிடைக்கவில்லை.

ஒருநாள் அரசன் சிவாலயம் ஒன்றில் தரிசனம் செய்துகொண்டிருந்த போது, அரசனுடைய கவனத்தைத் தன் பக்கம் திருப்ப எண்ணினான்.

'அரசே, ஆண்டவன் இந்தக் கோவிலில் இல்லை என்பது உங்களுக்குத் தெரியாதா?' என்று உரத்துக் கூறினான்.

'ஏன் அப்படிச் சொல்கிறீர்?' என்று ஆத்திரத்துடன் கேட்டான் அரசன்.

'அரசே ஆண்டவன் தன் உடலில் ஒரு பாதியைப் பார்பதி தேவிக்குக் கொடுத்தான். மறுபாதியை நாராயணனுக்குக் கொடுத்து விட்டான். இது தங்களுக்குத் தெரியாதா?'

'ஆண்டவன் தலையில் தரித்த கங்கை......?'

'அவள் சமுத்திரத்தில் போய் விழுந்துவிட்டாள்'

'ஆண்டவன் திருமுடியில் சூடிய சந்திரன் என்னானான்?'

'அவன் ஆகாயத்திற்குப் போய் அங்கே நின்று பிரகாசிக்கிறான்'

'ஆண்டவனுடைய அருளும் கருணையும் எங்கும் போகாதே?'

'அதைத்தான் தங்களிடம் கொடுத்து விட்டாரே!' என்றான் கவிஞன்.

அரசனுக்குச் சிரிப்பு வந்து விட்டது. சிரித்துக் கொண்டே கேட்டான்.

'அவருடைய திருவோடாவது எஞ்சியிருக்குமே?'

'அரசே, அதை என்னிடம் அல்லவா கொடுத்து விட்டார்'

இதைக் கேட்ட போஜராஜன் அந்தக் கவிஞனுக்கு வாரி வழங்கினான்.



## பட்டு நிலா வா வா...

பட்டு நிலா வா வா
பவள நிலா வா வா
பொட்டுப்போல வானிலே
பொலிந்து வலம் வா வா

பட்டப்பகல் போல ஒளி
இரவில் நிதம் தா தா
வட்டமாக உலகைச் சுற்றி
குளிர் நிலவைத் தா தா

வெட்ட வெளி வானிலே
விழிமலர்ந்து பார்க்கிறாய்
கிட்ட வந்து மெல்லப்பேசி
கட்டி முத்தம் தா தா

எட்டிநின்றுஎம்மைபார்த்து
ஏளனமா செய்கிறாய்?
மட்டிலா மகிழ்ச்சியாலா
மௌனமாக நிற்கிறாய்?

பஞ்சு மேகம் உனை
மறைத்தால்
நெஞ்சம் பதை
பதைக்குதே
வஞ்சமின்றிக் கைப்பிடித்த
வானல் எனைக் கூட்டிவா

எஸ். சிவானந்தராஜா




அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
முகத்தின் அழகு படத்தில் தெரியும்
அழகுக்கு அழகூட்டும் தரமான
கலர்ப்படப் பிரதிகளை
யாழ்ப்பாணத்திலேயே
அதிகுறை கட்டணத்தில்
மிகக் குறுகிய காலத்தில் பெற
"ஷப்ரூ"வை நாடுங்கள்!
கலர் படச் சுருள் கழுவுதல்-
முற்றிலும் இலவசம்!!

- 3 முதல் 5 நாட்களுக்குள் விநியோகம்
- நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்ய படுதல்
- ஸ்ருடியோக்கள், 'ஷப்ரூ' வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகை!!
- கலர்ப் பிரதி Glossy / Matt தாள்களில் பிரதி செய்து கொடுக்கப்படும்

எல்லா நாட்களிலும்: காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்

நீங்கள் நாடவேண்டிய இடம்:

ஷப்ரூ
207, மின்சார நிலைய வீதி,
யாழ் பாணம்.
T. Phone No: 22073


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திராவிடப் பாரம்பரியம் என்றால் என்ன?

## இந்திய முஸ்லிம் தலைவர்கள் விளக்கம்

இந்திய முஸ்லீம் லீக் பொதுச்செயலாளர் அப்துல் ஸமதுதிராவிடப் பாரம்பரியம்பற்றி செய்தியாளர் மத்தியில் விளக்கினார்.

அவர் சொன்னதாவது;

திராவிட பாரம்பரியத்தை தகர்த்தெறிவோம் என்று காங்கிரஸ்காரர்கள் பேசிவருகிறார்கள். பெரியார் அவர்களும் 'பச்சைத்தமிழர் என்று பாராட்டப்பட்ட காமராஜர் அவர்களும் திராவிட பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்களே என்று குமரிஅனந்தன் விளக்கம் தந்துள்ளார்.

ஆனால் மூப்பனார், சிதம்பரம் உள்ளிட்ட அத்தனை காங்கிரஸ்காரர்களும் காமராஜரின் ஆட்சியை அமைப்போம் என்று சொல்லிவருகிறார்கள். காமராஜர் சார்ந்துள்ள திராவிட பாரம்பரியத்தை அழித்துவிட்டு காமராஜருடைய ஆட்சியை எப்படி அமைக்கவிருக்கிறார்கள் என்பது விளங்கவில்லை. இந்த நாடு பல்வேறு பண்பாடு-பல்வேறு இன மக்களைக் கொண்ட பரந்தநாடு ஆகும். அதனால்தான் நம்முடைய தேசிய பாடலிலேயே 'பாரத நாடு வாழ்க' என்று ஒட்டு மொத்தமாக சொல்வதற்குப் பதிலாக வங்கமும் குஜராத்தியும் உத்கலமும் (ஒரிசா) வாழ்க. திராவிடம் வாழ்க என்று திராவிடத்தை அதன் தனித்தன்மைக்காக பிரித்து வாழ்க வாழ்க என்று குறிப்பிட்டுள்ளது.

### அவமதிப்பு

'திராவிடம் வாழ்க' என்று சொன்னால் திராவிடன் வாழ்கின்ற நிலப்பரப்பு என்று பொருள் அல்ல. திராவிடத்தின் தனிவரலாறு. பண்பாடு, மொழி, கலாசாரம் ஆகிய அதன் தனித்தன்மைகள் வாழ்க என்பதுதான் அதற்குரிய பொருள் ஆகும்.

இந்தப்பொருளுடன் கூடிய தேசிய பாடலை இசைக்கும் போது இந்தியாவின் குடியரசு தலைவர், பிரதமர், உச்சநீதி மன்ற நீதிபதிகள், அமைச்சர்கள், அதிகாரிகள், ஆகிய அத்தனைபேரும் 'திராவிடம் வாழ்க' என்ற சொல்லுக்கும் சேர்த்து எழுந்து நின்று மரியாதை செய்யவேண்டும்.

இதற்கு மாறாக யார் பேசினாலும், நடந்துகொண்டாலும் அவர்கள் அப்பட்டமான தேச துரோகிகள். தேசியப்பாடலை அவமதிக்கக் கூடியவர்கள் ஆவார்கள்.

### காங்கிரசார் என்ன பதில்?

எனவே அவர்கள் சட்டப்படி தண்டிக்கப்படவேண்டியவர்கள். நாட்டுப்பாடலை அவமதிக்கும் அவர்கள், சட்டப்படி தேர்தலில் நிற்கக்கூட தகுதியற்றவர்கள் ஆகிறார்கள்.

இதற்கு காங்கிரஸ்காரர்கள் என்ன விளக்கம்தர இருக்கிறார்கள். என்பதை எண்ணிப்பார்க்கிறேன்.

திராவிட பாரம்பரியமும், திராவிட நாகரிகமும் இல்லாவிட்டால் இந்திய பாரம்பரியம் அங்கயீனமாகும் என்பதை காங்கிரஸ்காரர்கள் இனிமேலாவது உணர்ந்து நடந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். ★


## இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப் பட்டமாணிப் பரீட்சைகள்

**கல்வியாண்டு 1988/89**

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் அனுமதி கிடைக்காதவர்களின் தேவைகருதி வெளிவாரிப்பட்டப்படிப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி (7-8-88) ஆரம்பமாகின்றன.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

**கலைமாணி (B. A) வர்த்தகமாணி (B. Com)**
**விஞ்ஞானமாணி (B. Sc)**
(புள்ளிவிபரவியல்)

மாணவர்களின் நலன்கருதி 3 மாத இலவச ஆங்கில வகுப்புகள்.

விண்ணப்பங்கள் யூலை 30 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப்படிவத்தினையும் விபரத்திரட்டினையும் பெற "பதிவாளர்" அஸ்ரன் இன்ஸ்ரியூட் என்ற பெயருக்கு ரூபா 10 ற்கான காசுக்கட்டளையுடன் 9" × 4" அளவுடைய சுயமுகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்,

பதிவாளர்

**அஸ்ரன் இன்ஸ்ரியூட்**

166/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(A. S சங்கரப்பிள்ளை கட்டிடம் 1 ஆம் மாடி)

(C. 5499)


திராவிட பாரம்பரியத்தை ஒழிப்போம் என்பதா? இருந்த இடம் தெரியாமல் போய்விடுவீர்கள் என்று இ. காங்கிரசாருக்கு அப்துல்சமது

**சென்னையிலிருந்து தி. மேனகன்**

(முஸ்லிம் லீக்) எச்சரிக்கை விடுத்தார்.

திருச்சி பாலக்கரையில் முஸ்லிம்லீக் கட்சிப்பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில், முஸ்லிம் லீக் மாநில தலைவர் ஏ. கே. ஏ. அப்துல்சமது பேசினார்.

முஸ்லிம் லீக் இயக்கம் தொடங்கி 40 ஆண்டு ஆகிறது. அதே போல தி. மு. க. முஸ்லிம் லீக் உடன்பாட்டுக்கு வெள்ளி விழா (25 ஆண்டு) கொண்டாட வேண்டும்.

ஒரு சம்பந்தம் போடும் போது அண்ணனும் தம்பியும் கலந்து பேசுவார்கள். அது போல் தி. மு. க- முஸ்லிம் லீக் பேச்சுவார்த்தையும் திராவிட இயக்கம் பாரம்பரியம் மிக்கது. புராதனமானது. பழமையானது என்பதை உணராதவர்கள் - திராவிடத்தை ஒழித்துக்கட்டுவேன் என்று கூறினால் அவர்கள் (இ. காங்கிரசார்), இருந்த இடம் தெரியாமல் இல்லாது போய்விடுவார்கள். இதைத் தவிர வேறு வழியில்லை.

நாணயமான அரசியல் கூட்டணி தி. மு. க. கூட்டணி தி. மு. க.வுக்கு ஆதரவு தர மட்டுமே முஸ்லிம் லீக் முடிவு செய்யவில்லை. தி. மு. க. வை ஆட்சியில் அமர்த்த சபதம் செய்து உள்ளது.

அதற்காக தேவைப்பட்டால் எந்தவித தியாகத்தையும் செய்ய தயாராக உள்ளது.

கலைஞரை ஆதரிக்காமல் வேறுயாரை ஆதரிப்பது அவர் முதலமைச்சரானால் ஏற்றத்துக்கு வழிகாண முடியும்.

### லட்சியம் தான் பெரிது

முஸ்லிம் லீக்கிற்கு லட்சம் பெரிதல்ல. லட்சியம் தான் பெரிது.

கருத்தை, கருத்தால் மோத வேண்டும். மேடையில் புனிதம் காக்கப்படவேண்டும். தரங்கெட்ட விமர்சனம் கூடாது. ●

# சென்னையில் உலகத் தமிழ் இலக்கிய மாநாடு!

உலகத் தமிழ் இலக்கிய மாநாடு ஆகஸ்ட் மாதம் மூன்று தினங்கள் சென்னையில் நடைபெற உள்ளது.

உலகத் தமிழ் மாணவர் கழகம் இதனை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இதுபற்றிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று சென்னை தேவநேயபாவாணர் நூலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கவிஞர் பொன்னிவளவன் தலைமை வகித்தார். கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன் முன்னிலை வகித்தார்.

மாணவர் அவைத்தலைவர் கவிஞர். ஆ. இரா. சக்திவேல் மாநாடு பற்றிய அறிக்கையைப் படித்தார்.

"சாதி, மத, அரசியல் சார்பற்ற உலகத் தமிழ்மாணவர் இயக்கம் தமிழ்மொழியை வளர்ப்பதையே தன் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

'பிரிந்து நிற்கின்ற தமிழ் இலக்கிய வாதிகளை ஒன்று படுத்தவும் நலிந்த சான்றோர் வாழ்வுநலம் பெறவும் இந்த மாநாடு நடத்தப்படுகிறது' —இப்படி அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

உலகின் பல பகுதிகளில் இருந்து பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொள்கின்றனர் என்று அறிவிக்கப்பட்டது.

மலேசியத் தமிழ் அமைச்சர் டத்தோ சாமிவேலுவை மாநாட்டுக்குச் சிறப்பு விருந்தினராக அழைப்பது என்று முடிவாகியது.

மலேசியாவில் 6 ஆவது உலகத் தமிழ் மாநாட்டை அமைச்சர் சாமிவேலு சிறப்பாக நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4)

# நான்காவது தமிழ்ச் சங்கமாக திகழும் கலைஞர் கருணாநிதி

நான்காவது தமிழ்ச்சங்கமாக. திமு.க. தலைவர் கருணாநிதி திகழ்கின்றார் என்று பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனதாக் கட்சியில் இருந்து தி. மு. க.வில் சேர்ந்த மதுரைப்பிரமுகர் பழ. கருப்பையா இப்பாராட்டுதலை வெளியிட்டார்.

காமராஜர் போன்ற இன்னொரு தலைவர் கலைஞர். தமிழுக்காகப் பாடுபடும் ஒரே தலைவர். அதனால்தான் அவரை 'தமிழாக வாழும் தலைவர்' என்று ஜானகி அம்மையார் கூறினார்.

அதை எப்படிச் சொல்லலாம் என்று ஜெயலலிதா கேட்கிறார். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று சொன்னார் அண்ணா. ஜெயலலிதா அண்ணாவை அறியாதவர்.

அரசியலில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் உண்மைகளை மறந்துவிடக்கூடாது.

அரசியலில் கலைஞரைத் தவிர வேறு யாரும் தலைவராகத்தெரியவில்லை. தமிழுக்கு மூன்று சங்கம் இருந்தது. இது வரலாறு. தமிழுக்கு நான்காவது சங்கமாக கலைஞர் தற்போது திகழ்கிறார்.

மத்திய மந்திரி சிதம்பரம் தேசியத்தை நிலைநிறுத்துவோம் என்கிறார். இத்தேசியவாதிகள் தான் நாடு பிரியக் காரணமானவர்கள்.

தேசிய கீதத்தில் 'சிந்து' என்ற வார்த்தை வருகிறது. 'சிந்து' நம்நாட்டிலா ஓடுகிறது? [illegible] நம்நாட்டில் இல்லை. அதற்குக் காரணம் நேரு குடும்பமே.



கலைஞர் அறிமுகப்படுத்திய 'நீராரும் கடலுடுத்த' என்ற தமிழ்த்தாய் வாழ்த்தை தேசிய கீதமாக வைக்கவேண்டும் —

இப்படி திரு. பழ. கருப்பையா சொன்னார். (எ—4)

## அக்ரஹாரத்தில் அரிஜன மக்கள்?

அரிஜன் - தாழ்த்தப்பட்டவன் என்ற சொல்லே இருக்கக்கூடாது.

அந்தச் சொற்களையே இல்லாமல் செய்யவேண்டும்.

ஹரிஜன் கொலனி என்று தனியாகக் கட்டக்கூடாது.

அக்ரஹாரத்தில் ஏன் ஹரிஜன மக்களைக் குடியேற்றக்கூடாது?

காந்திஜி 'ஹரிஜன்' என்ற பெயரைச் சூட்டியிருந்தாலும் அவன் கீழ்சாதிக்காரன் என்பதைத்தான் அது குறிக்கின்றது —அம்பேத்கார் கூட்டத்தில் சிவாஜி கணேசன் பேச்சு. ★

# எனக்கா அரசியல்தெரியாது? ஜானகிஅம்மாள் பதில்!



ஜானகி

அரசியல் தெரியாதவர் என்ற குற்றச்சாட்டுக்கு அ. தி. மு. க. (ஜா) அணித்தலைவர் ஜானகி அம்மாள் பதிலளித்தார்.

செய்யாறு என்னும் இடத்தில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் அவர் சொன்னதாவது;

எனக்கு அரசியல் தெரியுமா என்று சிலர் கேட்கிறார்கள்.

எனக்கா அரசியல் தெரியாது என்று அவர்களை நான் திருப்பிக்கேட்கிறேன்.

எம். ஜி. ஆருடன் 40 ஆண்டுகள் மனைவியாக வாழ்ந்தேன். ஒரு பெரிய நடிகரின் மனைவியாக-ஒரு பெரிய கட்சித்தலைவரின் மனைவியாக முதல்வரின் மனைவியாக வாழ்ந்துள்ளேன்.

இதைவிடவேறு என்ன அரசியல்பண்ணவேண்டும்?

விலைவாசிப் போராட்டத்தில் கொடிபிடித்து நடுவீதியில் நடந்துள்ளேன்.

இலங்கைப் பிரச்சினையில் எம். ஜி. ஆரோடு உண்ணாவிரதம் இருந்திருக்கிறேன்.

ஜப்பானில் 'தமிழ் அண்ணா' சப்பலை வெள்ளோட்டம் விட்டேன்.

அப்படியிருக்க எனக்கு என்ன அரசியல் தெரியும் என்று கேட்கிறார்கள். வேறு என்ன தெரியவேண்டும்?

அன்னை இந்திரா இறந்தவுடன் மகன் ராஜீவ் பிரதமராக வந்து நடத்தவில்லையா?

யாரும் கற்றுக் கொண்டு எதையும் செய்யமுடியும்.

உங்களில் ஒருவர் கூட பெரிய அரசியல்வாதியாக வரலாம்.

யாரெல்லாம் எப்படி வருவார் என்று யாரும் சொல்ல முடியாது.

இப்படி ஜானகி அம்மாள் பேசினார். (எ-4)

## ஜெயலலிதாவுக்கு நடிக்கத்தான் தெரியும்-


ஜெயலலிதாவுக்கு நடிக்கத்தான் தெரியும். ஆட்சி அமைக்க அவரால் முடியாது.

சினிமா நட்சத்திரங்களின் பின்னால் மக்கள்போக நினைத்தால் நாடு நாடாக இருக்காது.

—திருச்சி கூட்டத்தில் மத்திய அமைச்சர் மார்கரட் ஆல்வா.

(எ-4)

## சொற்சிலம்பம்



போட்டி இல. 82

சொற்சிலம்பம் இல: 82
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

..........................................

——— இங்கே வெட்டுக ———

**முடிவு திகதி: 6-7-1988**

**இடமிருந்து வலம்**

1. அழகன் 4. எஞ்சியது 6. நீர் ஊறுவதைக் குறிக்கும் 7. ஒருகரைவகை 8. அவதிப்படு-இங்கு தலைகீழாய்நிற்கிறது 10. புகழ் பெற்ற கொடை வள்ளல் 12. பாகு 13. காலம் தாழ்த்து 16. அகன்ற வாயுடைய சட்டி 18. தைரியம் 20. பருப்பு வகைகளில் ஒன்று 22. பிரிவு 24. ஆடை வகைகளில் ஒன்று 25. நேரம் 26. குலம்.

**மேலிருந்து கீழ்**

1. முகத்தின் அழகு 2. சுவை 3. பல்லி 4. பத்தாம் திதி மாறி நிற்கிறது 5. நீராடு 7. தசம் 9. ஒரு சிறு பிராணி 11. தந்தை 12. பகுதி 14. மீனாட்சி தலம் 15 உள்ளே தள்ளு 16. ஊர்வன இனத்தைச் சேர்ந்தது 17. பாதத்தைப் பாதுகாப்பது 19. உட்கார உழைப்பது 21. நோவு 23. அரைப்பங்கு.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டப்பட்டு வருபவை மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றாம் பரிசு: | 25 ரூபா |


உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை

**வளமாக்க**

உழைக்கும்போதே சிறுகச் சிறுகச் சேமியுங்கள்..........

சேமிப்புக்கு வழிகாட்டி **"ஷப்ரு"**

மாதாந்த சேமிப்பு
உயர் வட்டியுடன்

உங்கள் கைகளுக்குக் கிடைக்க 'ஷப்ரு'வை நாடுங்கள்

மாதாந்தம் ரூபா 500 சேமித்தால்

**36 மாதங்களில் ரூ. 23216/35**

கிடைக்கும்

மாதந்தோறும் 100 ரூபாவின் மடங்குகளாக 12, 24, 36 மாதங்களுக்குச் சேமிக்க முடியும்.

மேலதிக விபரங்களை எமது அலுவலகத்திற்கு நேரில் வந்தோ அல்லது கீழேயுள்ள கூப்பனை நிரப்பி அனுப்புவதன் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

**ஷப்ரு**

**யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்**

61, நியூ புல்லர்ஸ் வீதி, கொழும்பு - 4.
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தங்களின் மாதாந்த சேமிப்புத் திட்டம்பற்றி மேலதிக தகவல்களை தயவு செய்து அனுப்பும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

தொழில்; ..........................................

(C/5163) கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் ரசிகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்த மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டி

பிள்ளையார் சுற்றுக் கிண்ணத்திற்காக யாழ் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி வடபகுதி ரசிகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைந்திருந்தது.

வடபகுதியில் உள்ள 'விளையாட்டுக்கழக அணிகள் 'நொக் அவுட்' முறையிலான இந்தப் போட்டியில் பங்குபற்றின.

இந்தப் போட்டியின் ஆரம்ப ஆட்டங்கள் எதிர்பார்த்த அளவு சோபிக்கவில்லை.

எனினும் அரை இறுதி, ஆட்டங்கள் ரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தன.

முதலாவது ஆட்டத்தில் ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணியும், மல்லாகம் விளையாட்டுக்கழக அணியும் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணி 17 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

### போட்டிகள்

பின்னர் ஸ்ரான்லி அணியுடன் யாழ் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணி இரண்டாவது போட்டியில் மோதியது.

இதில் ஜொலிஸ்ரார்ஸ் அணி இலகுவாக—8 விக்கெட்டுக்களினால் — வெற்றியீட்டியது.

யாழ் நொதேன் விளையாட்டுக்கழக அணிக்கு எதிரான பரபரப்பான போட்டியில் யாழ் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 24 ஓட்டங்களினால் வெற்றியீட்டியது.

நான்காவது போட்டியில் தெல்லிப்பளை 'கிறஸ்ஹொப்பர்ஸ்' விளையாட்டுக்கழக அணியை யாழ் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக 'கறுப்பு' அணி 8 விக்கெட்டுக்களினால் வென்றது.

மல்லாகம் விளையாட்டுக் கழக 'வெள்ளை' அணிக்கு எதிரான போட்டியில் 'ஷப்ரு' கிரிக்கெட் அணி 149 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் மேற்படி கிரிக்கெட் போட்டியின் ஆகக் கூடுதலான ஓட்டங்களான 212 ஓட்டங்களை 'ஷப்ரு' அணி, 26 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து பெற்றது.

## விளையாட்டுத் துறை

இந்தப் போட்டியில் ஷப்ரு' அணி வீரர் என். நித்தியராஜன் 54 ஓவர்கள் பந்து வீசி 10 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியது ஆட்டத்தின் சிறப்பம்சம்.

ஆறுவது போட்டியில் சென்றலைட்ஸ் அணியை ஜொனியன்ஸ் 'சிவப்பு' அணி 70 ஓட்டங்களினால் வென்றது.

மேற்குறிப்பிட்ட ஆட்டத்தில் ஜொனியன்ஸ் அணிவீரர் ஏ. வாகீசன் எடுத்த 82 ஓட்டங்கள் இந்த 'றொக் அவுட்' போட்டியின் தனி ஒருவர் எடுத்த ஆகக் கூடுதலான ஓட்டங்களாக அமைந்தது.

ஏழாவது போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியை ஜொனியன்ஸ் 'கறுப்பு' அணி 3 விக்கெட்டுக்களால் வென்றது.

### அரை இறுதி ஆட்டங்கள்

முதலாவது அரை இறுதிப் போட்டியில் ஜொனியன்ஸ் 'கறுப்பு' அணியும் ஜொலிஸ்ரார்ஸ் அணியும் மோதின.

இதில் ஜொலிஸ்ரார்ஸ் அணி 59 ஓட்டங்களினால் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது'

இரண்டாவது அரைஇறுதிப் போட்டியில் 'ஷப்ரு' அணியும் ஜொனியன்ஸ் சிவப்பு அணியும் மோதின.

ஜொனியன்ஸ் அணி எடுத்த 178 ஓட்டங்களை இலகுவாக எட்டக்கூடிய நிலை என்றும் சொல்லும் அளவிற்கு சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த ஷப்ரு அணி இறுதியில் ஆட்டத்தைக் கோட்டை விட்டது.

இதில் ஜொனியன்ஸ் அணி 16 ஓட்டங்களால் வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது

### இறுதிப்போட்டி

பரபரப்பான, விறுவிறுப்பான இறுதிப் போட்டி பெருந்திரளான ரசிகர்கள் மத்தியில் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி. ஒரு நிலையில் 13 ஓவர்களில் 1 விக்கெட்டை மட்டும் இழந்து 30 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆனால் பின்னர் கே. சாந்தகுமார் கைப்பற்றிய 4 விக்கெட்டுக்கள் ஆட்டத்தின் திருப்புமுனையாக அமைந்தன.

இறுதியில் ஜொனியன்ஸ் அணி 151 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது.

ஜொலிஸ்ரார்ஸ் அணி முதலில் ஜொலியன்ஸ் அணியின் ஆரம்ப பந்து வீச்சாளர் ரி. சஞ்ஜீவனின் பந்துவீச்சில் ஓட்டங்களை எடுக்கமுடியாமல் இருந்த போதும் பின்னர் அவர்களின் ஓட்ட எண்ணிக்கை வீதம் அதிகமானது.

ஜொலிஸ்ரார்ஸ் அணி லாவகமாக ஆடியபோதிலும் இறுதிக்கட்டத்தில் இரண்டு விக்கெட்டுக்களை அடுத்தடுத்து இழந்தது.

பின்னர் 7 விக்கெட்டுக்களை இழந்தநிலையில் ஆட்டத்தில் வெற்றி யீட்டியது ஜொலிஸ்ரார்ஸ் அணி.

### சிறந்த ஆட்டக்காரர்

இறுதிப்போட்டியின் சிறந்த ஆட்டக்காரராக எஸ். பி பிரபானந்தன் தெரிவானார்.

பிள்ளையார் சுற்றுக்கிண்ணத்திற்கான இந்தப்போட்டியின் 'ஷப்ரு' அணியும் ஜொனியன்ஸ் 'சிவப்பு' அணியும் மோதிய அரை இறுதி ஆட்டமும், இறுதியாட்டமும் ருசிகரம் வாய்ந்தவையாக அமைந்திருந்தன.

யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஏனைய விளையாட்டுக் கழகங்களும் இதுபோன்ற கிரிக்கெட் போட்டிகளை நடத்த வேண்டும்.

அதில் வடபகுதியில் இருக்கும் கிரிக்கெட் அணிகள் அனைத்தும் பங்குபற்றவேண்டும். இப்படியான போட்டிகளை ரசிகர்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர். ★

- விவியன் -

# பண்டிதமணி பற்றிய சில நினைவுகள்

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் யான் புகுந்த நாளன்று மிகவும் உயர்ந்து வளர்ந்த ஒருவர் காலை ஒன்பது மணியளவில் குமிழிமிதிபடியில் வந்து கொண்டிருந்தார். முன்தலைமயிர் வழிக்கப்பட்டிருந்தது. பின்குடுமி. திரிபுண்டரப்பூச்சு. சந்தனத் திலகம். உதட்டில் இளநகை. பாலொத்த வெள்ளை நிற வேட்டி. ...

> **மூதறிஞர், இலக்கியக் கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் 89 ஆவது பிறந்ததினம் நாளை மறுநாள் (27-6 88) வருகின்றது. அதையொட்டி இக் கட்டுரை இன்று பிரசுரமாகின்றது.**

தோள் பூட்டுடன் கூடிய நாஷனல். முழந்தாள் வரை நீண்டு தொங்குகின்ற ஆரணியன் சால்வை யாரோ பெரும் படிப்புள்ள குருக்கள் வருகின்றார் என்ற எண்ணம் தான் அப்பொழுது என்பால் எழுந்ததும் மூத்த மாணவர்கள் 'பண்டிதர் ஐயா வருகின்றார்கள்' என்று கூறியவாறு வழி விலகினார்கள். இவர்தான் கணபதிப்பிள்ளைப் பண்டிதர் ஐயாவோ என்று கேட்ட போது பக்கத்தில் நின்றவர்கள் ஆம் என்று தலையசைத்தார்கள்.

திருநெல்வேலி முத்துத் தம்பி வித்தியாசாலையில் 1942 இல் இருந்து 1944 வரை படித்த காலங்களில் கலாசாலை வளவில் மேலே குறிப்பிட்ட மூன்று மனுஷர்களையும் கண்டிருந்தாலும் இவர்கள் யார் என்று கேட்டு அறியும் அறிவு விருத்தி அப்பொழுது எனக்கில்லை.

ஆயினும் பண்டிதர் ஐயாவின் தோற்றம் சாந்தம் இரம்மைக் கவர்வது போலாயிற்று. மிகவும் வறிய குடும்பத்திற் பிறந்தயான் 1947 டிசெம்பர் முதலாம் திகதி அருமைத் தந்தையாரை இழந்தேன். தந்தையாரும் பண்டிதர் ஐயாவின் தோற்றத்தை ஒத்தவர்கள். தந்தையை இழந்து தவித்த யான் 02—04—1949 சனிக்கிழமையன்று தந்தை போன்ற உருவமுடைய ஒரு தந்தையைத்தான் கண்டேன். பண்டிதர் ஐயாவின் பாஷையிற் சொன்னால் திருநெல்வேலி திருநெல்வேலியாயிற்று.

பண்டிதர் ஐயா வசப்பட்டு அறிவு விருத்தியை ஓரளவு பெற்றயான் அவரின் அடித்தொண்டனாகி அவர் அமரராகும் வரை (13—3—1986 வரை) அவரைப் பிரியாதிருந்தேன். ஆயிரம் பிறைகண்ட பெருமைக்குரியவர்களான பண்டிதர் ஐயா 'நிழல்போலத் தொடர்ந்தவர்' என்று என்னைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

### எழுத்து

பண்டிதர் ஐயா எழுத்தையும் பேச்சையும் மிக நீண்டகாலம் அநுபவித்தவன் என்ற வகையில் சில கருத்துக்களையேனும் கூறுதல் பொருத்தமுடையது.

தக்ஷகாண்டம் உரைநூலைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரங்கேற்றஞ் செய்த வரலாறு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. பேராசிரியர்களான போதனசபாபதி அ. சின்னத்தம்பி, ஆ. வி. மயில்வாகனம் உள்ளிட்ட பேரறிஞர்கள் பலர் உழைத்த உழைப்பு மகோன்னதமானது. இலங்கை சாகித்தியமண்டலம் சாகித்திய மண்டலத்தின் உயர் உறுப்பினர் என்ற விருதினையும் பரிசினையும் வழங்கிக் கௌரவித்தது.

இலக்கிய வழியும் பிரசித்தமான நூல்களில் ஒன்று. குறித்த நூல் பிரசித்திபெறுவதற்கு அந்நூல் க. பொ. த. உயர்தர வகுப்புக்குப் பாடபுத்தகமாக அமைந்ததும் ஒரு காரணமாகலாம்.

பண்டிதர் ஐயாவின் கருத்துக்கள் எப்பொழுதும் நாவலர் பெருமானின் கருத்துக்களை ஒட்டியனவாகவே இருக்கும்.

நீதியைக் குறுக்கி நிதி செய்யாமல், நிதியை ஒரு மாத்திரை நீட்டி நீதி செய்ய வேண்டும் என்ற கொள்கையைத் தமது பேச்சிலும் எழுத்திலும் வற்புறுத்தியதுடன் வாழ்ந்தும் காட்டினார் அவ்வாறான கருத்துக்கள் 'ஆறுமுகநாவலர்' என்ற நூலிற் பரக்கக் காணலாம்.

பண்டிதர் ஐயாவின் எழுத்துக்கள் நூலுருவம் பெற்றுள்ளன. எல்லா நூல்களுமே அமோகமான பாராட்டுதலைப் பெற்றுள்ளன என்பது கண்டு விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

சமீபத்தில் வெளிவரவிருக்கும் 'செந்தமிழ்க்களஞ்சியம்' என்ற தலைப்பைக் கொண்ட நூலும், பண்டிதமணி ஆராய்ச்சி நினைவு மலரும் தமிழ் ஆர்வலர்களின் உள்ளங்களையெல்லாம் நிறைவு செய்யக்கூடிய வகையில் அமைந்துள்ளன.

### பேச்சு

'ஒரு முறை வாலிபர் மகாநாட்டில் இலக்கிய விரிவுரை. சின்னத்தம்பிப்புலவர் பற்றிய பேச்சு. பெருங்கூட்டம். நிறைந்த அமைதி. ஒவ்வொரு சொல்லையும் ஆவலுடன் எதிர்பார்க்கும் சனக்கூட்டம். இடையிடையே சிரிப்பொலிகள். மூன்று மணித்தியாலப் பேச்சு. அலுப்புத் தோன்றாத சபை. இன்னும் மூன்று மணித்தியாலம் பேசாரோ என்ற அவா'

இளைஞரான பண்டிதர் கணபதிப்பிள்ளை அவர்கள் சின்னத்தம்பிப்புலவர் பற்றிப் பேசிய பேச்சை அறிஞர் எஸ். எச். பேரின்பநாயகம் அவர்கள் மேற்கண்டவாறு வருணித்திருக்கின்றார்.

ஈழத்தின் மூலைமுடுக்குகளெல்லாம் பண்டிதர் ஐயாவின் பேச்சுக்கள் இடம் பெற்றன. சைவமாநாடுகள், திருமுறை விழாக்கள், இலக்கிய விழாக்கள், நாவலர் மாநாடுகள் முக்கியமாக இடம்பெறும் வேளைகளில் எல்லாம் பண்டிதர்ஐயாவின் பேச்சும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும். ஐயா அவர்களது பேச்சைக் கேட்பதற்கென்றே ஒரு கூட்டம் வரும்.

திருநெல்வேலி பரமேசுவராக் கல்லூரியில் இடம் பெற்ற தமிழ் விழாவில் 'தமிழ்பற்றிய பேச்சு உச்சமாக அமைந்தது. ஆஜானுபாகுவான பேச்சு நிமிர்ந்த நடையில் இருந்தது. பேச்சின் உரிப்பொருளை உணராத நவீன ஆராய்ச்சியாளர் சிலர் 'சொட்டை' சொல்ல முயன்றதுமுண்டு. ஐயாவின் பேச்சை 'தமிழ்ச்சாறு' என்று ஆசிரியத்தலையங்கம் தீட்டி, தினகரன் விமரிசனஞ் செய்தது. இலங்கை தகவல் பகுதியாரால் வெளியிடப்பட்டு ஸ்ரீலங்கா பத்திரிகை உள்ளிட்ட சஞ்சிகைகள் வெகுவாகப் புகழ்ந்தன. தமிழ்விழா பற்றிய தொகுப்புரை, ... யில் இடம்பெற்றபோது பண்டிதர் ஐயாவின் பேச்சுபற்றிய பாராட்டுக்களைக் க... ஆசிரியர் தெரிவித்திருந்தார்.

### வைராபரணம்

பேச்சினாலும் எழுத்தினாலும் செயலினாலும் தமிழ் கூறும் உலகில் நிலையான இடம்பெற்று விட்டார் பண்டிதர் ஐயா அவர்கள் 'இலக்கிய கலாநிதி' என்னும் பல்கலைக்கழக விருது, முதுமைப் பருவத்தில் அவருக்குச் சூட்டப்பெற்ற வைராபரணம் ஆகும்.

பண்டிதர் ஐயா இப்பொழுதும் எங்களுடன் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்.

- ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் -

# 'குறள் கூறும் 'நஞ்சு' பதார்த்தத்தையே குறிக்கும்

> **வள்ளுவர் 'பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர், என்ற குறளில் தெரிவித்துள்ள நஞ்சு, பார்வை நஞ்சுதான் என்று புலவர் ஈழத்துச் சிவானந்தன் கூறிய கருத்து, சென்ற வாரம் சஞ்சீவியில் பிரசுரமானது.**
>
> **பார்வை நஞ்சு அல்ல; பதார்த்த நஞ்சைத் தான் வள்ளுவர் கூறினர் என்று வாசகர் வட்டூர் கடம்பன் தெரிவிக்கும் கருத்து இங்கு பிரசுரமாகின்றது.**

யூலியஸ் சீஸரைக் கொல்வதற்காக புருட்டஸ் எழுந்து நிற்கிறான்.

நண்பனே எதிரியாக எழுந்து நிற்பதைக் காணுகிறான் சீஸர்.

தன் கண்களையே நம்பாதவனாய் சீஸர்,

' ஓ... புருட்டஸ் நீயுமா? — என்று கேட்கிறான்; நஞ்சுண்டமைகின்றான்.

புருட்டஸ் வாள் எடுத்த போதும் தான் நண்பன் என்பதை உணர்த்துகின்றான். நண்பனே பகைவனாய் மாறி உயிரைப் பறிக்க முனையும் போது எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் மரணத்தையும் மகிழ்ச்சியுடன் தழுவிய சீஸரின் கண்ணோட்டத்தை நயத்தக்க நாகரிகம் எனலாம்.

இதைத்தான் வள்ளுவர் பெருமான் நயத்தக்க நாகரிகமாகக் காட்டுகின்றார்.

'பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர்' — இக்குறள் பொருட்பாலில் அரசியல் என்ற பிரிவில் கண்ணோட்டம் என்ற அதிகாரத்தில் வருகிறது.

நம்மை ஒருவர் வேதனைப் படுத்தும்போது, சபை ஒழுங்கு கருதி இரட்பது பற்றி கூறும் குறளாக இது வள்ளுவரால் கருதப்பட்டிருப்பின் அவையறிதல் என்றதலைப்பில் இடம் பெற்றிருக்கவேண்டும்.

கண்ணோட்டம் என்பதன் பொருள்தான் என்ன?

உயிருக்கு உயிராகப் பழகிய ஒருவர் தம்மை ஒறுக்கும் இயல்புடையவரான இடத்தும் அவர் குற்றத்தைப் பொறுக்கும் இயல்புடையராதலாகும்.

அரசியல் என்ற பிரிவில் இக்கருத்து வலியுறுத்தப்படுவதால் இக்குறளுக்குச் சிறந்த உதாரணமாக யூலியஸ்சீஸர் சரித்திரம் அமைகின்றது.

ஒருவர் இழைக்கக்கூடிய மிகக்கொடிய துன்பம் கண் முன்னாலே நஞ்சிட்டுக் கொடுப்பது தான். ... வன்ன இன்னு ... இடைத்தட ...

இருத்தல் இயலாது. எனவே, அத்தகையதொரு நிலையைச் சுட்டிக் காட்டி, அவ்வேளையிலும் கண்ணோட்டம் அரசனுக்கு அவசியம் என வள்ளுவர் வலியுறுத்தினார்.

ஓர் இலக்கியத்தின் கருத்தை ஒட்டி பிறிதொரு இலக்கியம் பேசுகின்றது என்றால், கருத்துத் தெளிவு பெறுவதற்காக அவ்விரு இலக்கியங்களையும் இணைத்து நோக்குவது இன்றியமையாதது ஆகும்.

முந்தையிருந்து நட்டார்
கொடுப்பின் நஞ்சும்
உண்பர் நனிநாகரிகர்

(நற்றிணை 955) —என வரும் நற்றிணை அடியும் இவ்வாறு பொருள் கொள்ளுதலை ஏற்புடையது என வலியுறுத்தக் காணலாம்.

பெயக் கண்டும்... குறளிலே பெய்தல் என்ற சொல் முதலில் வருகிறது. நஞ்சு பெய்தல் என்ற வகையில் அது இணைந்து நஞ்சையே குறித்து நிற்றல் வெளிப்படை. நற்றிணையில் 'நட்டார் கொடுப்பின்...... என்ற தொடர் வருகிறது. நஞ்சைக் கொடுத்தல் என்ற பொருட்பேறு அங்கே பெறப்படுகிறது. பெய்தல், கொடுத்தல் ஆகிய பிரயோகங்களால் வள்ளுவரும் நாற்றிணைப் புலவரும் கருதியது நஞ்சையே; பார்வை அன்று.

பார்வையை உருவகத் தொடராய் 'பார்வை நஞ்சு' என்று பயன்படுத்தும் உரிமை பாவலருக்கும் நாவலருக்கும் உண்டு. அதனைப் பயன்படுத்தலாகாது என்று மறுக்கும் உரிமை எவருக்கும் இல்லை.

ஆயினும் வள்ளுவர் 580 ஆவது குறளிலே நஞ்சு என்று குறிப்பது பார்வையையே என்பது பொருந்தாது. அவ்வாறு பொருள் கொள்ள, 'பெயக் கண்டும்', 'நஞ்சுண்டு அமைவர்' எனவரும் தொடர் இடம் தருவதாக இல்லை; இடர் தருவதாகவே உள்ளன. ★


## Asanga Enterprises
## A. வாசன்

மகிழ்ச்சியுடன் அறியத்தரும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்

வடபகுதி மக்களுக்கு அரிய சந்தர்ப்பம்

★ மலேசியா

| | | | |
|---|---|---|---|
| தோழிப்பண்ணை வேலையாட்கள் | 40 | 400 | வெள்ளி |
| சமையற்காரர் | 3 | 500 | வெள்ளி |
| உதவிச் சமையற்காரர் | 5 | 400 | வெள்ளி |

5 வருட ஒப்பந்தம், உணவு, இருப்பிடம், மருத்துவம் இலவசம். 28-7-88 க்கு முன் பிரயாணத்தை மேற்கொள்ளலாம். செல்ல விரும்புவோர் எமது காரியாலயத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

மிகவும் பாதுகாப்பான, நிச்சயமான பிரயாணஒழுங்குகள்

★ கனடா

குறுகிய காலத்துக்குள் பிரயாணத்தை மேற்கொள்ளலாம்.

★ சிங்கப்பூர்

கண்ணியமான குடும்பத்தில் House Maids S. D. 200

★ சவூதி, குவைத்துக்கான வெற்றிடம் எம்மிடம் உண்டு. செல்லவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

அசங்கா என்ரபிறைஸர்ஸ்

இல. 32, 5ஆம் குறுக்குத்தெரு,
[பிலிப்ஸ் நேசிங்ஹோமுக்கு எதிரே]
யாழ்ப்பாணம்.

(C/5512)



இயற்கை வாழ்வே சிறந்த வாழ்வு

தலைமயிர் அடர்த்தியாகவும் கருமையாகவும் இருத்தல் அழகு. தலைமயிரைப் பேணுதற்கு இயற்கையான இலுப்பை, சிகைக்காய், எலுமிச்சங்கோது பயறு, வெந்தயம் நல்லவை. இயற்கைமூலிகைகள் கலந்து தயாரித்த




சங்கு மார்க் ஒலிவ் ஸ்நானப் பவுடர்

தலைமயிரிலுள்ள அழுக்கு, பிசான், சொடுகு, என்பனவற்றைப் போக்கி தலைமயிர் அடர்த்தியாகவும் கருமையாகவும் வளர உதவுகிறது.

இது ஒரு மில்க்வைற் தயாரிப்பு.

(C. 5495)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ் - கொழும்பு
விமான சேவை விசேட போக்குவரத்து வசதியுடன் தினசரி நடைபெறுகிறது. முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.
TELEX MESSAGES, கடிதங்கள், சிறு பொதிகள் விமான மூலம் அனுப்பப்படும்.
MACK TRAVELS
1St - Lane, Pt - Pedro Rd, Jaffna.

சஞ்சீவி சஞ்சிகை
25 - 6 - 88 சனிக்கிழமை

★ குறைந்த கட்டணத்தில் விமான டிக்கற் CONFIRMATION, RECONFIRMATION and CANCELLATION.
★ பாஸ்போட் பொண்டிங் இந்தியன் விசா,
ஆகியவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
MACK TRAVELS
Jaffna.

கருத்துக் கலசம் — மயூரா

## பரந்த மனம் வேண்டும்

மனிதன் நல்லவனாக இருப்பதற்கு அவனது மனம் நல்லதாக இருக்க வேண்டும். ஒருவனது மனதைப் பொறுத்தே குணம் அல்லது குணங்கள் அமைகின்றன.

குணங்கள்பல. அவற்றை விரித்து ஆராய்ந்தால் நீளும்.

மனிதனின் மனவியல்புளில் பரந்தமனப்பான்மை, குறுகிய மனப்பான்மை ஆகியனவும் அடங்கும். அவை ஒன்றுக்கு மற்றது முரணானது. முன்னையது முன்னேற்றத்தின் அறிகுறி. பின்னையது பிற்போக்குத்தனத்தின் அடிநாதம்.

எல்லோரும் மனிதர்கள். எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள். எமக்கு இருக்கும் உரிமைகள், சலுகைகள் அடுத்தவனுக்கும் இருக்க வேண்டும். நாம் அனுபவிக்கத் தகுதியான சகல வளங்களும், சௌகரியங்களும் மற்றவனுக்கு விதிவிலக்காக முடியாது. நாம் மட்டும் வாழ்ந்து அடுத்தவன் தாழ்ந்து போக எண்ணக்கூடாது; அதற்காக உழைக்கக்கூடாது. சமுதாயம் முன்னேறுவது நாம் முன்னேறிச் செல்வதற்குச் சமன். இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

பரந்த மனம் உள்ளவன் மேற்கண்டவற்றுக்கு இசைந்தவனாக, இணங்கியவனாக இருப்பான்.

குறுகிய மனம் கொண்டவன் அப்படியல்ல. அவன் சுயநலம் மிக்கவனாக இருப்பான். தான் வாழ்ந்தால் போதும் பிறர் எக்கேடு கெட்டாலும் எனக்கென்ன என்று நினைப்பான். மற்றவன் வாழப்பொறுக்கமாட்டான். அது குறித்துப் பெருமைப்படுவான். வாழும் மற்றவனை வீழ்த்தச் செயலிலும் இறங்குவான்.

பரந்த மனம் உள்ள நான்குபேரின் உழைப்பை, ஒருகுறுகிய மனம் உடையவனால் கெடுத்துவிடமுடியும்; நிரந்தரமாக அல்ல; தற்காலிகமாக.

பரந்தமனம் உள்ளவர்களைவிட, குறுகிய எண்ணம் கொண்டவர்களே எம்மத்தியில் அனேகர். இது அவமானமான நிலை.

சிறியநாடு. மிகக்குறைந்த அளவு நிலவசதி. இயற்கை வளங் குறைவு. அதனாலேயே நம்மிற்பலர், கல்வி அறிவு பெற்றிருந்தாலும் குறுகிய மனப்பான்மை உடையவர்களாக இருப்பதாகச் சிலர் காரணம் கூறுவதுண்டு.

எதுவாக இருந்தாலும்— மனிதன் மனிதனாக வாழ வேண்டும். மனத்தூய்மை அதற்கு அவசியம். தான் பெற்ற அறிவையும் அனுபவத்தையும் அடித்தளங்களாகக் கொண்டு வாழ வேண்டும். ஆசை, கோபம், பொறாமை போன்ற ஒவ்வாத குணங்களைக் கட்டுப்படுத்தி ஆன்மீக உணர்வை வளர்த்துக்கொண்டால் பரந்தமனப்பாங்கு தானாகவே வளரும்.

அதுவே நமது இன்றைய தேவையுமாகும். அதுவே அமைதிக்கும் வழிகாட்டும்.

# வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு

திருவள்ளுவரது சமயம் இதுதான் என அறுதியிட்டுக் கூறுவது சுலபமான செயல் அல்ல. சென்ற பல ஆண்டுகளாகப் பேரறிஞர் பலர் ஆராய்ந்து இன்னும் ஒருமுகமான முடிவுக்கு வரவில்லை. ஒவ்வொருவரும் தத்தமக்குத் தோன்றிய முடிவுகளை எழுதி வைத்துள்ளனர். சிலர் வள்ளுவர் சமண சமயத்தவர் என்கின்றனர். வேறு சிலர் அவர் வைணவர் என்கின்றனர். மற்றும்சிலர் அவர் சைவ சித்தாந்தி என்கின்றனர். வள்ளுவர் ஒரு சமயத்தையும் சேர்ந்தவரல்லர். அவருக்குச் சமயமே கிடையாது எனவும் இன்று ஒரு சாரார் வாதிக்கின்றனர். இக் கருத்தையே இன்னும் ஒரு சாரார்கற்று நாகரிகமாக வள்ளுவர் சமயம் அனைத்தையுங் கடந்தவர் என்ற தமது கூற்றின்மூலம் வெளியிடுகின்றனர்.

வள்ளுவரது கருத்துக்கள் எச்சமயக் கொள்கைகளைப் பெரும்பாலும் தழுவுகின்றன என்ற ஆராய்ச்சியை இரண்டு முறையாகச் செய்தல்கூடும். ஒன்று எதிர்மறை மற்றது உடன்பாட்டுமுறை.

குறிப்பிட்ட ஒரு சமயக் கொள்கைக்கு மாறான கருத்துக்கள் திருக்குறளில் காணப் படுகின்றனவெனக் காட்டமுடியுமானால், வள்ளுவரின் சமயம் அதுவல்ல என்பதை எதிர்மறையாகக் காட்டியவராவோம். குறிப்பிட்ட வேறொரு சமயக்கொள்கைகளும் எதையும் மறுக்காமல் அதேசமயம் அச் சமயக் கொள்கைகளுள் அடிப்படையானவை அனைத்தையும் ஒப்புக்கொள்ளுவதாகத் திருக்குறள் அமைந்திருப்பதைக் காட்டமுடியுமானால் வள்ளுவரின் சமயம் யாதாகலாம் என்பதைக் காட்டியவராவோம்.

வள்ளுவரது சமயத்தைப் பற்றி நிலவிவரும் கருத்துக்களிலே மிகமுக்கியமானது சமணசமயத்தைச் சேர்ந்தவர் என்பதேயாகும். வள்ளுவரது சமயச்சார்பை அறிவதற்கு இக்கருத்தை மட்டுமே இங்கு ஆராய்ந்தாற்கூடப் போதும்.

தமிழறிஞர் வி. கலியாணசுந்தர முதலியார் 'தமிழ் நூல்களில் பௌத்தம்' என்ற தனது நூலிலே 'எனது சிற்றறிவில் திருக்குறள், சமண அறத்தை அடிப்படையாகக் கொண்டெழுந்த பொதுநூல்' என்று எழுதியிருக்கின்றார்.

இன்னொரு பிரபல தமிழறிஞர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் 'தமிழ்ச்சுடர் மணிகள்' என்ற தமது நூலில் 'கடவுள் வாழ்த்தில்வருகின்ற மலர்மிசையேகினான் முதலிய தெய்வப் பெயர்களை நோக்கும்போது வள்ளுவரை ஜைன மதத்தைச் சார்ந்தவர் என்று சொல்வது தான் பொருத்தமாகும்' என்கிறார்.

இவர்களது கருத்து பொருந்தாது என்பதற்கு இங்கு இரண்டொரு காரணங்களைக் காட்டுவோம்.

ஒரு பிறப்பிலே ஒருவன் செய்தவினைகள் அடுத்த பிறப்பிலே வேறு துணை எதுவுமின்றித் தாமாகவே தம்மைச் செய்தவனைச் சென்றடைய வல்லன என்பது ஜைன மதத்தின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்று. இதனை வற்புறுத்த அவர்கள் கையாளும் உவமையை 'நாலடியார்' நூலில் காணலாம்.

ஒருகன்றைப் பல பசுக்களிடையே விட்டால் அது எங்ஙனமாவது தன் தாயைத்தேடிப் பிடித்துக் கொள்ளும். இதைப் போன்றதே பழவினை தன்னை செய்தவனை அறிந்து அடைவதும்.

நாலடியாரில் வரும் 'பல்லாவுள் ..' எனும் செய்யுள் ஜைனர்களுடைய இக் கருத்தை நன்கு விளக்குகின்றது.

வினையை அதற்குரியவனிடம் சேர்ப்பதற்கோ அல்லது சேராது தடுப்பதற்கோ வேறு எவரும் தேவை இல்லை என்பதையே ஜைனம் வற்புறுத்துகிறது.

வினைப்பயன்களை அவற்றைச் செய்தார் அனுபவிக்கும்படி செய்பவனும் அனுப



வியாதபடி தடுப்பவனும் இறைவனே என்பது சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று.

வினை அறிவற்ற பொருள். எனவே தன்னைச் செய்தானைச் சென்றடையும் வல்லமையோ அல்லது சேராமல் விலகும் வல்லமை அதற்கு ஒரு சிறிதும் கிடையாது.

இக்கொள்கையையே தழுவுவதாயும் இதற்கு மாறான ஜனக்கொள்கையை மறுப்பதாயுமுள்ள கருத்துக்கள்

**- கி. லக்ஷ்மணஐயர் -**

ஒன்று அல்ல, பல திருக்குறளிலே காண்கிறோம்.

ஒன்று, 'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது' என்பது.

வினைகளின் பயன்கள் தாமாகவே வகுக்கப்படுவது இல்லை. அவைகளைப் பங்கிடு செய்பவனொருவன் உளன் என்பதை வள்ளுவன் அழுத்தந்திருத்தமாக வெளியிட்டுள்ளார்.

இரண்டாவது குறள், 'இருள் சேர் இருவினையுஞ் சேரா இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு'— என்பது.

இக்குறளால் எமது கருத்து இன்னும் அதிமாக வலியுறுத்தப்படுகிறது. இருவினைகளும் செய்தானைச் சேருதலும் சேராமையும் அவ்வினைகளைப் பொறுத்ததல்ல; இறைவனைப் பொறுத்தது என்பதன் மூலம் வினை அல்ல, இறைவன்தான் சர்வ வல்லமையுடையவன் என்ற சைவ சித்தாந்தக் கருத்தை வள்ளுவன் வற்புறுத்துவது தெளிவாகின்றது.

நாம் மேலே குறிப்பிட்டபடி எதிர்மறை, உடன்பாடு ஆகிய இருமுறையாக நோக்கினும், பிறமதத்தின் அடிப்படைக் கொள்கையை மறுப்பதன் மூலமும் சைவசித்தாந்தக் கொள்கையை ஆதரிப்பதன் மூலமும் வள்ளுவரின் சமயம் யாதாயிருக்கலாம் என்பது நன்கு புலனாகின்றது.

'திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தமே' என்ற அரிய நூல் ஒன்றைத் தக்க ஆதாரங்களுடன் காஞ்சிபுரம் வச்சிரவேல் முதலியார் அவர்கள் வெளியிட்டிருக்கின்றார்.

வள்ளுவர் சைனமதக்கொள்கைகளையும் பௌத்த மதக் கொள்கைகளையே விட சைவ சமயக் கொள்கைகளைப் பெரிதும் தழுவுகின்றார் என்பதற்கு இன்னுமொரு ஆதாரமும் உண்டு.

சைனமும் பௌத்தமும் துறவுக்கு முதன்மை கொடுப்பன. சைவம் இல்லறத்துக்கு முதன்மை கொடுப்பது. சைவத்தைப்போலவே வள்ளுவரும் இல்லறத்துக்கே முதன்மை கொடுக்கின்றார்.

மறைமலையடிகள் தமது 'பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம்' என்னும் நூலிலே ''பௌத்த சமண சமயக் குருக்கள்மார் இல்லறத்தை இகழ்ந்து துறவறத்தையே பெரிதும் கொண்டாடுதலால், இவ்வுண்மை கண்டு தெய்வத் திருவள்ளுவர் அவர் தம் கொள்கையை மறுத்தற் பொருட்டே இன்பத்தின் வழித்தாகிய இல்லறத்தை முன்வைத்து நூல் செய்ததூஉம், இல்லறத்தைத் தமிழ்ச் சான்றோர் வழக்குப் பற்றித் துறவறத்தினும் மிக்கெடுத்துக் கூறியதூஉமென்க'' என்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

போப் அவர்கள், 'திருவள்ளுவர் பதி, பசு, பாசம் மூன்றையும் அடிப்படையாகக் கொண்டே தம் நூலை ஆக்கியுள்ளார். அவருடைய மதம் ஜைனம், பௌத்தம் போன்ற இறைவனில்லாதமதம் அல்ல. இவ்விஷயத்தில் நாலடியாருக்கும் குறளுக்கும் வேற்றுமை உண்டு—'' எனக் கூறியிருக்கிறார்

சிவனை ''எட்டுவான் குணத்து ஈசன்'' என்று அப்பரடிகளும் ''இறைவனை மறையவனை எண்குணத்தினனை'' என்று சுந்தரரும் கூறியிருக்கின்றனர்.

இவற்றை ஆதாரங்காட்டி திருக்குறளின் கடவுள் வாழ்த்தில் ''இறைவனை எண்குணத்தான், என்றுநாயனார் கூறுவது சைவசமயக்கருத்தென்று கருத முடியும் என்று 'திருவள்ளுவர் நூல் நயம்' என்ற தனது நூலில் தமிழறிஞர் சேதுப்பிள்ளை கூறியிருப்பதை இங்கு குறிப்பிடல் வேண்டும்.

தத்துவ அடிப்படையில் வள்ளுவர் சைவசித்தாந்தக் கொள்கைகளையே ஆதரிப்பவராயினும், வைணவம், சமணம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களின் கருத்துக்களிலே அரியவை யாவும் இடம்பெறுமாறு தமது நூலை அமைத்துள்ளார் என்பதை மறுத்தல் இயலாது. இங்குதான் வள்ளுவரின் தனி இயல்பைக் காண்கிறோம்.

தமது மதச்சார்பை வெளிப்படையாகக் காட்டாமல் ஒவ்வொரு மதத்தினரும் திருக்குறளை தத்தம் மதத்துக்கு உரியது எனப் பாராட்டி உரிமைகோரக்கூடியதாக ஆக்கியமையே வள்ளுவரின் தனித்தன்மை.

திருக்குறள் உலகனைத்துக்கும் பயன்படத் தக்கது எனச் சொல்வதற்கு அதனிடத்து அமைந்துள்ள தனிச்சிறப்பு இதுதான்.

திருக்குறளைஉலகப் பொது மறை என்றும் அது எல்லா இடத்துக்கும் எல்லாக் காலத்துக்கும் ஏற்றது என்றும் பலரும் அதனைப் போற்றி மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றனர். வள்ளுவரின் பொதுமை நோக்கு என்ற இந்த ஒன்று மட்டுமே வள்ளுவத்தின் சிரஞ்சீவித்துவத்துக்குப் போதுமானது.

இதனாலேயே, 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ்கொண்ட தமிழ் நாடு' எனப்பாடினார் பாரதியார்.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து' என்ற குறிப்பிட்டதன்மூலம் வள்ளுவன் இயற்றிய திருக்குறள் உலக மக்கள் அனைவருக்குமே பயன்படத்தக்க சிறப்பு உடையது என்பதே அவர் கருத்து என்பது புலனாகின்றது.

உலகனைத்துக்கும் பயன் படத்தக்க நூலை இயற்றிய வள்ளுவனைப் பெற்றது தமிழ் நாட்டுக்குப் பெரும்புகழும் பெருமையும் என்கிறார் பாரதியார். ★

**நாலடியார் பாடல்:**

பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத் — தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தே தற்செய்த
கிழவனை நாடிக் கொளற்கு.

---

பிரபல தமிழறிஞரான கட்டுரையாளர் திரு. கி.லக்ஷ்மண ஐயர், முன்னாள் கல்விப்பணிப்பாளர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழிலும், காசிப்பல்கலைக்கழகத்தில் தத்துவ ஞானத்திலும் எம். ஏ. பட்டமும், லண்டன் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதத்தில் பி. ஏ. பட்டமும் பெற்றவர்.

அவரின் 'இந்திய தத்துவஞானம்' என்ற நூலுக்கு இலங்கை அரசும் தமிழ்நாடு அரசும் பரிசு வழங்கிக் கௌரவித்தன. எம். ஏ., பி. ஏ. பட்டப்படிப்புக்கு பாடப் புத்தகமாக இந்த நூல் பயன்படுத்தப்படுகிறது.

தருமபுர ஆதீனம் சைவசித்தாந்தக் கலாநிதி பட்டமளித்து அவரைக் கௌரவித்தது.

---

## எழுது! தினம் எழுது!

நில மடந்தை எழில் சிந்தும்
நிலை முழுதும் எழுது......
கடல் அலைகள் நுரை சிந்தும்
கலை முழுதும் எழுது......
நிலவு மகள் முகம் காட்டும்
அழகு சுவை எழுது......
குலவு குயில் பாடு குரல்
அழகு அதை எழுது ......
ஓடும் நதி ஓரத்திலே
நின்று தினம் எழுது ...
ஓசை இன்றி வீசு தென்றல்
சுகம் கண்டு எழுது ......
பூச் சொரியும் பனிக்காலம்
குளிர் வதனை எழுது......
வீச்சிருக்கும் கவிதைகளை
விழிப்போடு எழுது......

வாழ்ந்திருக்கும் மனித குலம்
வளம் பெறவும் எழுது......
வீழ்ந்து வரும் எமது இனம்
விழித் தெழவே எழுது......
சூழ்ந்திருக்கும் கொடுமைகளைக்
கூறிடவே எழுது
சூழ உள்ள நிலைமைகளைச்
சொல்லிடவே எழுது......
வேந்தர் புகழ் வீரர் புகழ்
வையமெலாம் எழுது
பார் புகழும் புலவர் புகழ்
பாடி நிதம் எழுது
பார்க்கும் விழி மூடும் வரை
எழுது தினம் எழுது.

— ஊரெழு தர்ஷினி —

## சீதனம் வாங்குவது தர்மத்தைச் சிதைக்கிறது!

சட்டம் போட்டிருக்கிற 'லிமிட்'டையும் தாண்டி 25 வயது, 30 வயதுக்குக்கூடப் பெண்கள் கல்யாணமாகாமல் நிற்பதற்குக் காரணம் விவாகத்தைப் பண சம்பந்தமான விஷயமாகப் பண்ணியிருப்பது தான்.

கல்யாணத்தில் நடக்கின்ற ஆடம்பரங்களும், வரதட்சிணை வாங்குவதும் சாஸ்திர சம்மதமானதல்ல.

ஜானவாஸ ஊர்வலம் என்று ரொம்பவும் அத்தியாவசியமான அம்சம் மாதிரி விவாகத்துக்கு முதல் தினம் பண்ணுகிறார்களே இது சாஸ்திரத்தில் அடியோடு இல்லாத விஷயம். இதற்கு ஒரு மந்திரமும் கிடையாது.

பழைய நாட்களில் பால்ய விவாகங்கள் நடந்தபோது அவர்களை உற்சாகப்படுத்த



### காஞ்சி முனிவர் கூறுகிறார்

விளையாடல், நலங்கு, ஊர்வலம் என்று வைத்தார்கள். அவ்வளவுதான்.

'கன்யாம் கனகசம்பன்னாம்' என்று சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதால் — தங்கம் கொடுக்கும் பிரசாரத்தை உண்டு பண்ணுவது [illegible] கத்திலே திருமாங்கல்யம் மட்டும் பண்ணினால் போதும். மற்ற நகைகள், வைரத்தோடு முதலியன வேண்டாம்; பட்டும் வேண்டாம் நூலில் கூறைப்புடவை வாங்கினால் போதும். ஆந்திர தேசத்தில் இப்படித்தான் செய்கிறார்கள்.

ஊர்கூட்டி சாப்பாடு, பாட்டு, சதிர், பந்தல் என்று விரயம் பண்ணுவதும் வேண்டாம்.

இதில் பெண்ணின் பங்கு விசேஷமானது. அந்தப் பிள்ளைக்கு அப்படிச் செய்தார்களே - இந்தப் பையனுக்கு இவ்வளவு கொடுத்தார்களே- என்பது போன்ற வாதங்களை விட்டுவிட்டு ஜம்பத்துக்கும் டாம்பீகத்துக்கும் இடம் கொடுக்காமல் இருக்க வேண்டும்.

நம் வீட்டுப் பெண்ணிற்கு நாம் கொடுக்கவில்லையா—இப்போது நம் பையனுக்கு வாங்குவதில் என்ன தவறு, என்று தாங்களாக நியாயம் கற்பித்துக் கொள்ளக்கூடாது. தர்மத்தைச் சிதைக்கின்றஇந்தக் கெட்ட பழக்கம் எப்படியாவது நிற்க வேண்டும்.

நாங்கள்கேட்கவில்லை—அவர்களாகவே கொடுத்தார்கள்—வாங்கிக் கொண்டோம் என்று சொல்வதுகூடத் தப்பு. ஏனென்றால் இது சங்கிலித் தொடர்போல இந்த வழக்கம் வளர்ந்து கொண்டிருக்கவே உதவும்.

பிள்ளை வீட்டுக்காரர்களின் செலவுகளுக்கு பெண் வீட்டுக்காரர் கொடுக்கவேண்டும் என்பதில் துளிக்கூட நியாயம் இல்லை. எவனோ கொடுக்கிற பணத்தில் நாம் 'டிரஸ்' வாங்கிக் கொள்வது அவமானம் தான். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org